Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 11
குவிப்பு - 03
பக்கங்கள் - 20
விலை ரூபா 25.00
மார்ச் - 2008
(ISSN 1800-2641)

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/75/News/2008

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St., Mannar, Sri Lanka.
Telephone No : 023-2222377/ 060-2233276, Fax No - 023 - 2222377, E-mail - nesanmn@yahoo.com

உயிர்ப்பு விழா நல்வாழ்த்துக்கள்

# உயிர்ப்பு விழா சிறப்புப் பொழிவு




## அமதிகளின் யாழ் மாகாண புதிய முதல்வராக போல் நட்சத்திரம் அடிகளார் நியமனம்



அமலமரித் தியாகிகள் சபையின் யாழ் மாகாண புதிய முதல்வராக அருட்பணி. எம். போல் நட்சத்திரம் அடிகளார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் 6ம் திகதி இந்த நியமனம் பற்றிய அறிவிப்பு வெளியாகியது. எதிர்வரும் மே மாதம் 21ம் திகதி இவர் தனது புதிய பணிப்பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

போல் நட்சத்திரம் அடிகளார் உயிலங்குளம் நானாட்டான், வங்காலை ஆகிய பங்குத்தளங்களில் பங்குத்தந்தையாகவும், அமதிகளின் மறையுரைஞர் குழு உறுப்பினராகவும் அமதிகளின் சிறிய குருமட அதிபராகவும், வசந்தகம் பெரிய குருமட அதிபராகவும் இருந்து சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். உரோமையில் ஒழுக்க இறையியல் பாடத்தில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர், சிறந்த பேச்சாற்றலும், அன்பான அணுகுமுறையும், ஆழமான சிந்தனையும் கொண்டு சிறந்த ஆளுமையோடு விளங்குகின்றார். அருட்தந்தை ஏற்றிருக்கின்ற புதிய பணிப்பொறுப்பை சிறப்பாக செய்ய மன்னார் இறைமக்கள் சார்பாக மன்னா தனது வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது. முதல்வர் பணியிலிருந்து விடைபெறும் எஸ். எம். செல்வரெட்ணம் அடிகளாருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கிறது.

## இன்னும் நாம் கல்லறைக்குள்ளா?

வாழ்நாளெல்லாம்
நாம் படும் துன்பத்தை
தூயவனே சிலமணிப் பொழுதுகளில்
அனுபவித்திருந்தீர்!
வருடந் தோறும்
மரித்துவிட்டீர் நீரென்று
கல்லறைக்குள் அடக்குகிறோம்.
உன்னதரே
மூன்றாம் நாள்
முழுநிலவாய் உயிர்த்தெழுந்தீர்!
அடக்கம் செய்த நாம் இன்னும்
கல்லறைக்குள்ளே தானே
கிடக்கின்றோம்

- எஸ். எஸ். கிசோகர், 13ம் தரம், கலைப்பிரிவு
மன்/ புனித சவேரியார் ஆண்கள் தே. பா

## திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு புதிய துணை ஆயர்

### கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவாகியுள்ள முதல் ஆயர்



திருமலை / மட்டுநகர் மறைமாவட்டக் குருவும், மறைமாவட்டத்தின் தற்போதைய குருமுதல்வருமான அருட்பணி. பொன்னையா யோசவ் அவர்கள் மேற்படி மறைமாவட்டத்தின் துணை ஆயராக திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் அறிவித்துள்ளார். கடந்த 2008 பெப்ரவரி 19ம் திகதி வத்திக்கான் தூதுவர் மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் குருக்கள் மத்தியில் இந்த அறிவிப்பை வெளியிட்டார். புதிய ஆயருக்கு மன்னார் திருச்சபையின் உளம் கனிந்த நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம். [புதிய ஆயர் பற்றிய விரிவான தகவல்கள் பக்கம் 3ல் இடம்பெற்றுள்ளன]

## மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர்கள் மற்றும் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான இறைவார்த்தையை மையப்படுத்திய தவக்காலத் தியானங்கள்

மன்னார், முருங்கன் மறைக்கோட்ட மறையாசிரியருக்கான தவக்காலத் தியானம் கடந்த பெப்ரவரி மாதம் 22, 23,24ம் திகதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு) மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இதில் இரண்டு மறைக்கோட்டங்களையும் சேர்ந்த 275 மறையாசிரியர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

வவுனியா மறைக்கோட்ட மறையாசிரியர் மற்றும் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானம் கடந்த மார்ச் மாதம் 7,8,9ம் திகதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு) வவுனியா புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது. இதில் 175 பேர் பங்கெடுத்துப் பயனடைந்தனர். இதில் 50 மறையாசிரியர்களும், 40 கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களும் 85 கத்தோலிக்க ஆசிரியர்களும் உள்ளடங்குவர்.

இரண்டு இடங்களிலும் வதிவிடத் தியானமாக நடைபெற்ற இத்தியானத்தை மன்னார் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணியாளர் கிறிஸ்து நேசன் அவர்களும், அவருடைய நிலையப் பணியாளர்களும் ஒழுங்கமைத்து, நெறிப்படுத்தி, தியான உரைகளையும் வழங்கினர்.

### வவுனியாவின் பதிவுகள்





### மன்னாரின் பதிவுகள்





## கொழும்பு உயிர்த்த ஆண்டவர் குழுமத்தைச் சேர்ந்த கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சிக் குழுவினரின் புதுப்பித்தல் தியானம்

கொழும்பு உயிர்த்த ஆண்டவர் குழுமத்தைச் சேர்ந்த (Risen Lord Community) கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சிக் குழுவினரால் (Catholic Charismatic Renewal Group) மன்னார் பேராலயத்தில் புதுப்பித்தல் தியானம் நடாத்தப்பட்டது. கடந்த மார்ச் மாதம் 8ம், 9ம் திகதிகளில் இடம்பெற்ற இத்தியானத்தில் ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை சிறப்புக் குழுவினருக்கான தியானமும், மாலை 5.00 மணி தொடக்கம் 8.30 மணிவரை பொதுமக்கள் அனைவருக்குமான பொதுவான தியானமும் இடம்பெற்றது. இக்குழுவின் தலைவரான பொதுநிலைப் பணியாளர் திரு. லலித் பெரேரா அவர்கள் தியான உரைகளை வழங்கினார்.

## மன்னா பத்திரிகையின் உள்நாட்டுச் சந்தாதாரர் கவனத்திற்கு!



கடந்த 2007 ஏப்ரல் மாதத்திலிருந்து தனிப்பிரதிக்கான தபால் செலவு ரூபா 5.00 இலிருந்து ரூபா 16.00 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆயினும் நாம் ஆண்டு சந்தாப் பணத்தில் மாற்றம் செய்யாமலே இருந்தோம். தற்போது மன்னா பத்திரிகை எதிர்நோக்கும் நிதி நெருக்கடியைக் கருத்திற்கொண்டும், தபால் செலவு அதிகரிப்புக்கு ஏற்றவாறும் 2008 ஏப்ரல் 1ம் திகதியிலிருந்து உள்நாட்டு ஆண்டு சந்தாப் பணத்தை ரூபா 400.00 விலிருந்து ரூபா 500.00 ஆக அதிகரிக்கத் தீர்மானித்துள்ளோம் என்பதை எமது அன்பான சந்தாதாரருக்கு பணிவோடு அறியத்தருகின்றோம்.

# மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனை உறுப்பினர்களுக்கான தவக்காலத் தியானம்

மன்னார் மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகளிலும் உள்ள மரியாயின் சேனை உறுப்பினர்களுக்கான தவக்காலத் தியானம் கடந்த 23.02.2008 தொடக்கம் 24.02.2008 மாலை வரை தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இத்தியானத்தை மன்னார் பொதுநிலையினர், குடும்ப உளவளத்துணை நிலைய இயக்குனர் அருட்பணி அ.டலிமா அவர்கள் ஒழுங்குபடுத்தி நடாத்தினார். அருட்சகோதரி றெஜி அவர்கள் தியான உரைகளை வழங்கினார். இத்தியான ஒன்றுகூடலில் 370 உறுப்பினர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். அருள்வாழ்வு, அருட்சாதனங்கள், தலைமைத்துவம், இறைவார்த்தை, செபம், சீடத்துவம் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக தியான உரைகள் அமைந்திருந்தன.

# மதகுரு கொல்லப்பட்டமை தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும்

*அங்கிலிக்கன் திருச்சபைப் பேராயர் வலியுறுத்தல்*

அம்பாறையில் கடந்த மாசி 21.02.2008 அன்று இனந்தெரியாத ஆயுததாரிகளால் மதகுரு நீல் எதிரிசிங்க கொல்லப்பட்டமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். இக்கொலை தொடர்பாக உடனடியாக பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு கொலையாளிகள் சட்டத்தினால் தண்டிக்கப்பட வேண்டுமென கொழும்பு மாவட்ட அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் மேதகு டுலிப் டி. சிக்கேரா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, நடந்த இக்கொலைச் சம்பவம் அங்கு குறைந்தளவில் வாழும் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபரை கேட்டுக்கொள்கிறேன். பல மத மக்கள் வாழும் நாட்டில் சர்வமதக் குழுக்கள் மூலமே மதங்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும், வன்முறைகளால் அல்ல.

தற்கொலை அங்கிகளை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் அண்மையில் சில போதகர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது போதகர்கள்மீது பொது மக்களுக்கு தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளது. பாரபட்சமற்ற முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உண்மையில் குற்றவாளிகளாயின் அவர்கள் சார்ந்த திருச்சபையினர் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும்.

அண்மையில் மன்னாரில் விடுதலைப் புலிகள் மன்னார் தேவாலயம் ஒன்றின்மீது மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் 6 படைவீரர்கள் கொல்லப்பட்டமை தொடர்பான தகவல்கள் முரண்பாடானவையாக இருக்கின்றபோதும் இத்தாக்குதல் கண்டிக்கப்பட வேண்டும். இரு தரப்பிலும் யுத்தத்தை நடாத்துபவர்களே இந்த யுத்தக் கலாச்சாரத்திற்கு பொறுப்பானவர்கள். இச்சூழ்நிலையில் யார் அநியாயமாக உயிரிழந்தாலும் அது கவலைக்குரியதே. யுத்த நிறுத்தம் அமைதிப் பேச்சுவார்த்தை போன்றவையே சமாதானத்திற்கான ஒரே வழியாகும்.

# இந்தியாவின் பிரபல நற்செய்திப் பணியாளர் டி. ஜி. எஸ் தினகரன் இறைவனடி சேர்ந்தார்



இந்தியாவின் பிரபல கிறிஸ்தவ நற்செய்திப் பணியாளர் சகோதரர் டி. ஜி. எஸ். தினகரன் கடந்த பெப்ரவரி மாதம் 20ம் திகதி இறைவனடி சேர்ந்தார். இறக்கும்போது இவருக்கு வயது 74. சுவாசக் கோளாறு காரணமாக இரு வாரங்களுக்கு முன்பு அவர் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 20ம் திகதி புதன் கிழமை காலை 6.00 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது.

தகவல் அறிந்ததும் முதலமைச்சர் கருணாநிதி மருத்துவமனைக்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினார். அதன் பின்னர் அவரது உடல் கிறீன்வேஸ் சாலையில் உள்ள அவரது அலுவலகத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் நின்று அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர். தமிழ்நாட்டின் பல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இன்னும் பெரியவர்களும் இனமத பேதமின்றி அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்தியாவின் மிகப்பிரபல்யம் வாய்ந்த கிறிஸ்தவ நற்செய்திப் பணியாளராகிய இவர் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக ஆண்டவருடைய வார்த்தையை அயராது அறிவித்து வருகின்றார். தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இந்தியாவில் இருக்கக்கூடிய வெவ்வேறு மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் இவர் நற்செய்திப் பணியாற்றி வந்தார். இவரது மனைவி ஸ்ரெலா தினகரன், மகன் போல் தினகரன், அவருடைய மனைவி பிள்ளைகள் ஆகிய அனைவருமே நற்செய்திப் பணியில் ஈடுபட்டு உழைத்து வருகின்றனர். டி ஜி. எஸ். தினகரன் அவர்களுடைய மகள் ஏஞ்சல் தனது 16வது வயதில் பல வருடங்களிற்கு முன்னர் கார் விபத்தில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# வாசகர் எண்ணங்கள்



## என் பிரிய தோழி மன்னாவே!



என் பிரிய தோழி மன்னாவே,
நீ சுமந்துவரும் அம்சங்கள் அத்தனையும் சூப்பர். நீ மென்மேலும் வளர எனது வாழ்த்துக்கள். மன்னாவிடம் சிறிய வேண்டுகோள். உன்னில் வரும் விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி போன்று வேறு போட்டிகளையும் ஆரம்பித்தால் நன்றாய் இருக்கும். விவிலியத்தில் புதிய ஏற்பாட்டில் இருந்து கேள்விகளைத் தொகுத்து வெளியிடுவாயானால் மாணவர்களிடம் விவிலியம் வாசிக்கும் பழக்கம் மேலும் அதிகரிக்கலாம். எனவே இவ்வாறான போட்டிகளை நீ சுமந்து வரவேண்டுமென்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

- *இ. சொபிதா*

## உன் பணி தொடர்க...

ஈரைந்து அகவைகள் நிறைவினில்
ஆன்ம பசிபோக்கும் அருமருந்தாய்
அவனியில் மலர்ந்திடும் உம்பணி வாழியவே.
*'செல்லுங்கள் உலகெல்லாம் சொல்லுங்கள் நற்செய்தி'*
என மொழிந்த இறைமகன் இயேசுவின் வார்த்தைக்கு
அர்த்தம் தரும் உன் வரவால்
நாமும் மகிழ்வும் நலமும் பெறுகின்றோம்.
மாதம் ஒரு மலராய் எம் கரம் சேர்ந்து
நறுமணம் கமழும் உன் இதழ்கள்
சிறுவர் முதல் பெரியோர் வரை
அனைத்து நிலையினரையும் நல்வழிப்படுத்திடுமே.
உன் வளர்ச்சியில் தோள் கொடுத்த
அன்பு நெஞ்சங்களை வாழ்த்துகின்றோம்.
இனிவரும் காலமெல்லாம் உன்பணி
தொடர்ந்திடவே பரமனை வேண்டி
நன்றிக் கீதமிசைத்து வாழ்த்துகின்றோம்.

*றூபா அன்ரன், லொசான், சுவிஸ்லாந்து.*

## வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கின்றேன்

எனது அன்பார்ந்த மன்னாவே!
உனக்கு எனது மனமார்ந்த பல கோடி நன்றிகள்.
உன்னில் இருந்து வெளிவரும் ஒவ்வொரு ஆக்கங்களும்
மிகமிகச் சிறப்பு வாய்ந்தவை.
உன் வரவுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும்
வாசகர்களில் நானும் ஒருத்தி.
நீ என் வீட்டிற்கு வந்ததும் எனக்கோ மிக மிக மகிழ்ச்சி.
நீ தொடர்ந்தும் வெளிவர ஆசிக்கின்றேன்.
இதை வெளியிடும் பதிப்பாசிரியருக்கு
எனது அன்பு கனிந்த நன்றிகள்.
உங்கள் சேவை மக்களுக்குத் தேவை!
உங்கள் சேவை வாழையடி வாழையாகச் செழிக்கட்டும்.

*ஞா. குயின்சி, சாளம்பன்*

## சரித்திரம் சொல்லட்டும்



மன்னா நீ என்றும் வளர்க வாழ்க!
எந்நாளும் நீ தரும் அமிர்த வார்த்தை
பொன்னாக்கும் என் வளமான வாழ்வை.
முன்னோர் உண்ட மன்னா நீதானப்பா
ஆன்றோர் ஆயிரம் செல்வங்கள் தந்தாலும்
சான்றோன் ஆக்குமா சரித்திரம் சொல்லட்டும்.
ஆண்டவன் அருளைக் கண்டோம் மன்னாவில்,
சான்றுகள் சொல்லட்டும் ஆண்டாண்டு காலமாய்!

*வி. அ. லெம்பேட*, வங்காலை.

## என் மனதைக் கவர்ந்த மன்னாவே!

மன்னாவே! என் சுவாசக் காற்றே!
நீ மாதந்தோறும் வந்திடுவாய் எம் வாசல்.
தினந்தோறும் உன் சேவை மலரைப்போல விரிய
என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

*மருசலீன் யோன்சன்,*
*தாமோதரம்பிள்ளை வீதி, கீரி.*

# அருட்சகோதரி இக்னேசியா அவர்கள் இறைவனடி சேர்ந்தார்!

## அன்பினால் அனைவரது இதயங்களையும் வென்ற அருட்சகோதரி பற்றிய நினைவலைகள்



"உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவா 11:25).

அன்று இலாசரின் இறப்பைக் குறித்து மார்த்தாவுக்கு இவ்வாறு கூறிய இயேசு இன்று எம் சகோதரி இக்னேசியாவின் மரணத்தைக் குறித்தும் இவ்வாறே எமக்கும் கூறுகின்றார்.

அருட்சகோதரி இக்னேசியா அவர்கள் 1956ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 1ம் நாள் நானாட்டான், உமநகரியில் திரு. திருமதி. பே. சூசைப்பிள்ளை தம்பதியினரின் ஆறாவது மகவாக அவதரித்தார். நானாட்டான் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் காலத்திலேயே இவரது திறமைகள் உளப்பாங்குகள் அனைவரையும் கவர்ந்தன. கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுப் போட்டிகள், நாடகம், கவிதைப் போட்டிகள் என்று இவர் தடம் பதிக்காத களங்களும் இல்லை, தட்டிச் செல்லாத பரிசில்களும் இல்லையென்றே சொல்லலாம்.

தனது பண்பான பேச்சினாலும், புன்னகை சிந்தும் வதனத்தினாலும் அனைவரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டவர். இவரது அறிவுத்திறன் கண்டு ஆசிரியர்கள் அகமகிழ்ந்தனர். பெற்றோர் பற்பல மனக்கோட்டைகள் கட்டினர். அதேவேளை இறைவனும் தனது திட்டத்தை வெளிப்படுத்தினார். "உன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் எனக்கு அர்ப்பணமாக்கு, உன் சேவை எனக்குத் தேவை" என்று அழைப்பு விடுத்தார். அழைத்த இறைவனின் குரலுக்கு "இதோ வருகிறேன்" என்று பதிலிறுத்து 21.11.1977ல் திருக்குடும்ப சபையில் இணைந்து தன்னையே அவருக்கு அர்ப்பணமாக்கினார். அழைத்த இறைவன் பற்பல துன்பங்கள், சவால்கள் மூலம் இவரைப் புடமிட்டுத், தனக்கு உகந்தவள் ஆக்க எண்ணினார்போலும். தனது 24வது வயதில் தந்தையையும், அடுத்த வருடம் தனது அன்னையையும் இழந்தார். துன்பங்கள், இழப்புக்கள், பிரிவுகள் அடுத்தடுத்து ஏற்பட்ட வேளையிலும் இறைகரம் அவரைத் தாங்கிப் பலப்படுத்தியது.

பணிகள் தொடர்ந்தன! யாழ் பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணிப் பட்டப்படிப்பையும் கல்வியல் பட்டப்படிப்பையும் மேற்கொண்ட இவர், கரம்பன், யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பலப்பிட்டி புனித மரியாள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகவும், பெரிய பண்டிவிரிச்சான் நெடுந்தீவு, இளவாலை ஆகிய பாடசாலைகளில் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் கற்பித்த பாடசாலைகளிலெல்லாம் இவரது காலம் "பொற்காலம்" என்று வர்ணிக்கப்படுகிறது. அன்புடன் கூடிய கண்டிப்பினாலும், பண்பான பேச்சினாலும், உயரிய அறிவுரைகளினாலும் உயர் விழுமியங்களைப் பண்புடன் எடுத்துக்கூறி ஆசிரியர்கள் மாணவர்களின் மனங்களில் நீங்காத இடம்பிடித்தார். எவரையும் மனம்நோகப் பண்ணாதவர். மனம் புண்படக்கூடிய வார்த்தைகளைப்பேசி அறியாதவர். தனது புன்னகையினால் அனைவரையும் கவர்ந்தவர். எங்கெங்கெல்லாம் பணிபுரிந்தாரோ அந்த இடத்து மக்களையும், மாணவர்களையும், ஆசிரியர்களையும் தன் சொந்த உறவுகளாகக் கருதியவர். ஏழைகள், எளியவர்கள், அநாதைகள், ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர் இவரது விசேட கவனத்தைப் பெற்றவர்கள். தம் பணி வாழ்வின் இறுதி நாட்களில் இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலயத்தின் உயர்ச்சிக்காக உழைத்தார். இவ்வாறு இவரது சேவையை எடுத்தியம்பிக்கொண்டே செல்லலாம்.

இவரது சேவை போதும் என்று கண்ட இறைவன் 02.03.2008ல் இவரைத் தன்னிடம் அழைத்துக்கொண்டார். இன்று இவர் எம் மத்தியில் இல்லாவிடினும் இவர் விட்டுச்சென்ற சுவடுகள் என்றும் எம் மத்தியில் நிலைத்திருக்கும். "மின்னாமல் முழங்காமல், இடியிடித்தது" போன்று நிகழ்ந்துவிட்டது இவரது மரணம். சிறிது காலம் நோயுற்றிருந்த எம் சகோதரி அந்த நோயின் கடின விளைவைத் தன்னுள்ளே தாங்கி அனைவருடனும் உறவாடச் சென்றார். இவரது இறப்பு அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத ஒன்று. இருந்தும் இவரது வாழ்வு மூலமாகவும், பணிமூலமாகவும் எம் திருக்குடும்ப சபையும், சமுதாயமும், இவரது பணித்தளத்தில் வதியும் மக்களும் பெற்றுக்கொண்ட அனைத்து நலன்களுக்காகவும் இறைவனுக்கும், எம் சகோதரிக்கும் நன்றி கூறுவோம். இவரது ஆன்மா என்றும் இறைவனில் இளைப்பாற வேண்டுவோம்.

*லொறிஸ் றோட் இல்ல சகோதரிகள்,*
*பம்பலப்பிட்டி, கொழும்பு*

# இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

ஆசிய மற்றும் இலங்கைத் திருச்சபையில் கல்வி, கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் ஆற்றிய பணிகளுக்காக

## பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகைக்கு

# முழு நாடும் வாழ்த்துத் தெரிவித்தது!

தனது குருத்துவ வாழ்வில் 50 வருடங்களையும், ஆயர் பணியில் 40 வருடங்களையும் நிறைவுசெய்த கொழும்புப் பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்களுக்கு 2008ம் ஆண்டு மாசித்திங்கள் 12ம் நாள் நாட்டின் அனைத்துத் துறைகளையும் சார்ந்த பிரதிநிதிகள் தமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக கொழும்பு பண்டாரநாயக்க நினைவு மாநாட்டு மண்டபத்தில் ஒன்றுகூடினர்.

இதற்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேராயர் இல்லத்திற்குச் சென்று அவரை வாழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து பேராயர் அவர்கள் மோட்டார் பவனியாக பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார். அங்கு அவர் திருத்தந்தையின் தூதுவர் மேதகு மாறியோசெனாறி ஆண்டகை, இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத் தலைவர் மேதகு வியானி பெர்னாண்டோ, கொழும்பு மறைமாவட்ட பேராயரின் சிறப்புப் பிரதிநிதி அருட்பணி. ஐவன் பெரேரா ஆகியோரால் வரவேற்கப்பட்டார். பாரம்பரிய நடனங்கள் மத்தியில் பேராயர் அவர்கள் மண்டபத்திற்குப் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு வருகை தந்தவர்களில் மதப்பிரமுகர்கள், கத்தோலிக்க ஆயர்கள், அங்கிலிக்கன் சபை கொழும்பு ஆயர் பேரருட்திரு டுலீப் டி சிக்கேரா, வண. வெலா மிற்றியானே குசலடாமா தேரர், களனி பாளி பல்கலைக்கழக உபவேந்தர் ஆகியோரும் அடங்குவர். பௌத்த துறவிகள், இந்துக் குருக்கள், முஸ்லிம் மௌலவிகள் ஆகியோருடன் அதிகளவான கத்தோலிக்க குருக்களும், துறவிகளும் வருகை தந்தனர், மற்றும் அரசாங்க அமைச்சர்கள் எதிர்க்கட்சித் தலைவர் மேன்மைமிகு ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு ராஜதந்திரிகள், நீதிபதிகள், சட்டரீதியான தொழில்சார் நிபுணர்கள், கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் மேன்மைமிகு கவிக்கா கிறிம்புறகாமா, பல்வேறுபட்ட பல்கலைக்கழகங்களின் அங்கத்தவர்கள், கத்தோலிக்க வணிகர் ஒன்றிய உறுப்பினர்கள், பொது நிலையினரின் பிரதிநிதிகள் மற்றும் பேராயரின் உறவினர்கள் போன்றோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு திரு. ஐவர் டெனிசும், அவரது குழுவினரும் இணைந்து பாடிய "பரலோக மந்திர" பாடலுடன் ஆரம்பமானது. டாக்டர் சுனில் ஆரியரெட்ண முதன்மைப் பேச்சாளராக விளங்கினார். அப்போஸ்தலிக்க பிரதிநிதி மேதகு மாறியோ செனாறி ஆண்டகை, வண. பேராசிரியர் பெல்லான்விலா விடலரெண்ட தேரர், மேதகு ஆயர் வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை, தேசிய கிறிஸ்தவ ஆலோசனைச் சங்கத்தைச் சேர்ந்த அருட்பணி. எபேசர் யோசவ், ஆகியோரால் வாழ்த்துச் செய்திகள் வழங்கப்பட்டன.

இந்த ஆடம்பரமான நிகழ்வு கத்தோலிக்க கலைஞர்களின் பாடல்கள், பாரம்பரிய நடனங்கள், படைப்பின் வரலாற்றை வெளிப்படுத்தும் நாட்டிய நாடகம், கொழும்பு மறைமாவட்டக் குருக்கள் இசைக் குழுவின் பாடல்கள் ஆகிய பல்வேறுபட்ட கலைநிகழ்வுகளை உள்ளடக்கியதாய் அமைந்திருந்தது. மேதகு பேராயர்



ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் ஆசியாவிலும் விசேடமாக, இலங்கையிலும் உள்ள கத்தோலிக்க திருச்சபைக்கும் நமது நாட்டிற்கும் விசேடமாகக் கல்வி, கலை, இலக்கியம், திருச்சபை வரலாறு ஆகியவற்றில் ஆற்றிய பணிகளுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. தேசிய ஐக்கியத்திற்கும், இலங்கையை ஒன்றிணைப்பதற்கும் பேராயர் வழங்கிய தலைமைத்துவப் பொறுப்புக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

### மேதகு கமிலஸ் நிமலன் அடிகளார்

## பதவி உயர்வு



வத்திக்கானில் மறைபரப்புச் செயலகத்தில் பணியாற்றும் மேதகு கமிலஸ் நிமலன் அடிகளார் "மினுதாந்தே" என்று அழைக்கப்படும் உயர் செயலர் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளார். மேற்படி செயலகத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற கர்தினால் ஐவன் டயஸ் ஆண்டகை மேற்படி நியமனத்தை இவரின் நீண்ட கால கண்ணியமிக்க பணியை கருத்தில்கொண்டு வழங்கியுள்ளார். இவ்வாண்டு கமிலஸ் நிமலன் அடிகளார் தமது குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடுகின்றார். அடிகளாரின் தொடர் பணி சிறக்க மன்னா அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும், செபங்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

## அல்பன் அடிகளாருக்கு பிரியாவிடை

பாலையூற்றுப் பங்கில் கடந்த ஐந்து ஆண்டுகள் தனது ஆன்மீகப் பணியைச் சிறப்புடன் ஆற்றிய அருட்தந்தை அல்பன் இராஜசிங்கம் (அமதி) அடிகளாருக்கு துணைப்பங்கான அன்புவழிபுரத்தில் உள்ள பங்குமக்களால் பிரியாவிடை வைபவம் சிறப்புற நடாத்தப்பட்டது.

## புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப ஒற்றுமையை ஊக்குவிப்போம்

### சுதந்திரதினச் செய்தியில் பேராயர்

ஒரே இதயமும் ஒரே மனமும் கொண்டு பிரித்தானிய காலனி ஆதிக்கத்திலிருந்து 1948ம் ஆண்டு பெப்ரவரி 04ம் நாள் சுதந்திரம் பெற்றோம், இந்த நாளின் 60ம் ஆண்டை சிறப்பிக்கும் இவ்வேளையில் புதிய இலங்கையைக் கட்டி எழுப்புவதற்கு ஒற்றுமையை ஊக்குவிப்போம் என்று கொழும்பு பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை கூறினார்.

இலங்கையின் 60வது சுதந்திர தினத்திற்காகச் செய்தி வெளியிட்ட பேராயர் கோமிஸ், தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கு முதல் படி அரசியல் சுதந்திரமே என்று அன்றைய தலைவர்கள் உணர்த்தினார்கள். நமது மக்களை முழு சுதந்திரமுள்ளவர்களாகவும் வளமையுள்ளவர்களாகவும் ஆக்குவதற்கு இன்னும் நீண்ட பயணம் செல்லவேண்டியிருக்கிறது என்பதையும் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். உண்மையிலேயே நாம் சுதந்திர மக்களாக வாழ்வதற்கு தேசிய வாழ்வின் எல்லா நிலைகளிலும் முன்னேற்றம் தேவை என்பதையும் அத்தலைவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்றார்.

இன்று 60 ஆண்டுகள் ஆனபிறகும் பெரும் இனச்சண்டையில் நாம் ஈடுபட்டுள்ளோம், பல வன்முறைகளுக்குப் பின்னர் ஏறத்தாழ 25 ஆண்டுகளாக ஆயுதம் தாங்கிய மோதல்களில் ஈடுபட்டுள்ளோம். இந்தச் சகோதர சண்டை தேசிய வாழ்வையும் மக்களையும் மிகத் தாழ்வான விளிம்புக்குத் தள்ளியுள்ளது. என்றும் அவர் கூறியுள்ளார்.

## செபமாலைதாசர் சபையின் 80வது ஆண்டு விழா

### ஆசியக் கண்டத்திலே முதன் முதலாக ஆசிய நாட்டைச் சேர்ந்தவரால் ஆரம்பிக்கப்பட்ட காட்சித் தியானயோக சபை

### – யாழ் ஆயர் பெருமிதம் –

ஆசியக் கண்டத்திலே முதன் முதலாக ஆசிய நாட்டைச் சேர்ந்தவரால் ஆரம்பிக்கப்பட்ட காட்சித் தியானயோக சபை என்று சொன்னால் முதல் முதல் அந்தப் பெருமை செபமாலைத்தாசர் சபைக்கே சேரும்.

தோலகட்டி ஆச்சிரமத்தின் செபமாலைத்தாசர் சபையின் 80ஆவது ஆண்டு விழா கடந்த 02.02.2008 அன்று அருள் ஆச்சிரமத்தில் யாழ் ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. அங்கு மறையுரை நிகழ்த்தும்போதே யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயர் மேலும் தமது மறையுரையில் இற்றைக்கு 80 வருடங்களுக்கு முன்பு எமது நாட்டிற்குக் கிடைத்த பெரிய ஆசீர்வாதம் செபமாலைத்தாசர் சபையினுடைய உதயம் ஆகும். நம்முடைய நாட்டிலே போர்த்துக்கேயருடைய காலம் தொடக்கம் துறவற சபைகள் இருந்துகொண்டே வந்தன. ஆனால் இந்தத் துறவற சபைகள் அனைத்தும் வெளிநாட்டிலிருந்து வந்து இங்கு ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் நம்முடைய நாட்டுக் குருக்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரேயொரு தியான யோக சபையென்றால் அது தோமஸ் அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட்ட செபமாலைத்தாசர் சபை என்பது மகிழ்ச்சிக்குரியதென்றாகும்.

இந்தச் சபை ஆரம்பித்து 60வது வருடத்தின் நிறைவிலே "ஆசியாவின் ஜோதி" என்ற நூல் செபமாலைத்தாசர் சபையால் பிரசுரிக்கப்பட்டது. ஆசியக் கண்டத்திலே முதன் முதலாக ஆசிய நாட்டைச் சேர்ந்தவரால் ஸ்தாபிக்கப்பட்ட காட்சித்தியான யோகசபை என்று சொன்னால் முதல் முதல் அந்தப் பெருமை செபமாலைத்தாசர் சபைக்கே சேரும். இந்தச் செபமாலைத்தாசர் சபை தற்பொழுது மக்கள் மத்தியிலே செப, தப முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. சாத்தானுக்கு எதிரான போராட்டங்களிலே இவர்கள் நற்கருணை நாதருக்கு முன் செபமாலை செபித்து அனைவருக்காகவும் மன்றாடுகின்றார்கள். இந்த ஸ்தாபகருடைய சீவியமானது எடுத்துக்காட்டான பரிசுத்ததனம்



சபையின் ஸ்தாபகர்
அருட்தந்தை தோமஸ் அடிகளார்

இறைமனிதன் என்ற பெயரையும் நிறைந்த ஒரு வாழ்க்கையாக இருந்தது. இவர் ஓர் உண்மையான பெற்றுக்கொண்டவர். இவருடைய புனிதர்பட்ட முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறவும் இச்சபை மென்மேலும் வளரவும் ஆசிக்கின்றோம் என்கிறார்.

இச்செபமாலைத்தாசர் சபை 1928ஆம் ஆண்டு மாசி மாதம் 2ம் திகதி தோலகட்டி என்னும் சிற்றூரில் மறைத்திரு தோமஸ் (அமதி) அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது.

தாய் இல்லமான தோலகட்டி இல்லம் தற்போது அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது இலங்கையில் 5 துறவற இல்லங்களும் இந்தியாவில் 15ற்கு மேற்பட்ட துறவற இல்லங்களும் உள்ளன.

### திருகோணமலை / மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு

## புதிய துணை ஆயர்

திருமலை / மட்டுநகர் மறைமாவட்டக் குருவும், மறைமாவட்டத்தின் தற்போதைய குருமுதல்வருமான அருட்பணி. பொன்னையா யோசவ் அவர்கள் மேற்படி மறைமாவட்டத்தின் துணை ஆயராக திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் அறிவித்துள்ளார். இவரது நியமனம் 2008 மாசித்திங்கள் 19ம் நாளிலிருந்து செல்லுபடியாகும்.

அருட்பணி பொன்னையா யோசவ் அவர்கள் 12.10.1952ல் மட்டக்களப்பு, தன்னாமுனை என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தனது பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த பின்னர், குருத்துவ உருவாக்கத்திற்கான மெய்யியல், இறையியல் கற்கைநெறிகளை இந்தியா, திருச்சிராப்பள்ளி புனித பவுல் உயர் குருத்துவக் கல்லூரியில் மேற்கொண்டு இளங்கலை மாணிப்பட்டத்தைப் பெற்ற இவர் 30.04.1980ல் இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தனது பங்குத்தளப் பணிகளில் ஈடுபட்டிருந்த அதேவேளை இலங்கை, பெரதேனியா பல்கலைக்கழகத்தில் கலைப்பீட மாணவனாகத் தோற்றி 1990ல் கலைப்பட்டதாரியாக வெளியேறினார். தொடர்ந்து உரோமாபுரி ஊர்பானியன் பல்கலைக்கழகத்தில் இணைந்து வேதாகம இறையியலில் முதுகலை மாணிப்பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். 2006ம் ஆண்டு தனது கலாநிதிப் பட்டத்திற்காக "கிறிஸ்தவ நாகரீகம்" எனும் தொனிப்பொருளில் யாழ்/ பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்த இவர் அதன் எதிர்வாதத்திற்காகக் (defence) காத்திருக்கின்றார்.

இவர் மட்டுநகர் புனித மரியாள் இணைப் பேராலயம், வாகரை, வீச்சுக்கல்முனை, ஆயித்திமலை, பெரிய புல்லுமலை, தாண்டவன் வெளி ஆகிய பங்குத்தளங்களில் பணியாற்றியுள்ளார்.

மற்றும் 1993 ஒக்டோபர் தொடக்கம் 1996 செப்டம்பர் வரை மட்டுநகர் புனித வளனார் ஆரம்பக் குருத்துவக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார். 1996 செப்டம்பர் தொடக்கம் 2001 யூலை வரை அம்பிட்டியா தேசிய உயர் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், உருவாக்குனராகவும் இருந்து செயற்பட்டார். அன்றியும் இவர் அங்கு திருவிவிலியம், மறைக்கல்வி, இந்து சமயம் மற்றும் இந்திய மெய்யியல் ஆகியவற்றில் விரிவுரைகளை மேற்கொண்டார். அதேவேளை தேசிய குருத்துவக் கல்லூரியின் நூல் நிலையப் பொறுப்பாளராகவும் 1997 செப்டம்பர் தொடக்கம் 2001 யூலை வரை செயலாற்றினார்.

தேசிய கல்வி நிறுவகத்தில் வளவாளராக இருந்து ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை நடாத்தினார். மற்றும் 2001ம் ஆண்டு ஆகஸ்ட் தொடக்கம் 2006 பெப்ரவரி வரை "வெட்டாப்பு" என்னும் மறைமாவட்ட மாதாந்த ஏட்டின் ஆசிரியராகக் கடமையாற்றினார். மரியாயின் சேனை, இறை இரக்கக் குழு ஆகியவற்றின் ஆன்மீக இயக்குனராக இருந்து சிறந்த முறையில் அவர்களை நெறிப்படுத்தியுள்ளார். 2006 செப்டம்பர் தொடக்கம் இற்றைவரை மறைமாவட்டக் குருமுதல்வராக இருந்து சிறந்த பணியாற்றியுள்ளார். 2000 ஜனவரி தொடங்கி இற்றைவரை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பகுதிநேர விரிவுரையாளராக இருந்து செயற்பட்டுள்ளார்.

இவ்வாறாக இவரது பணித்தளமும் கல்விப் புலமும் பல்வேறுபட்ட கோணங்களில் விரிவடைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. இந்த அனுபவங்கள் இவரது புதிய பணிக்கு நிச்சயம் உதவும் என எதிர்பார்க்கலாம்.

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## துன்பங்களைச் சுமந்து வாழ்ந்த அன்னை மரியாள் இறுதிவரை இழக்காத ஒன்று விசுவாசம் மட்டுமே!

### துள்ளுகுடியிருப்பு காணிக்கை மாதா ஆலயத்திருவிழாவில் கிறிஸ்து நாயகம் அடிகளார்

பல்வேறுபட்ட இன்னல்களுக்கும், பிரச்சினைகளுக்கும், சமுதாயம் முகம் கொடுத்துக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இழப்புக்களும், இடப்பெயர்வுகளும் நிகழ்வதால் எம்மில் பலரிடம் விசுவாசத்தளர்வு ஏற்பட வாய்ப்பு உண்டு. ஆனால் அன்னை மரியாளும் இவ்வாறான துன்பங்களைச் சுமந்துதான் வாழ்ந்தாள். துன்பங்களைச் சுமந்து வாழ்ந்த அன்னை மரியாள் இறுதிவரை இழக்காத ஒன்றே ஒன்று விசுவாசம் மட்டுமே என மன்னார் மறைமாவட்ட நிதியாளரும் திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குனருமான அருட்பணியாளர் பி. கிறிஸ்துநாயகம் அடிகளார் தெரிவித்தார்.

கடந்த 02.02.2008 அன்று மன்னார் மறைக்கோட்டத்திலுள்ள துள்ளுகுடியிருப்பு கிராமத்தில் காணிக்கை மாதா ஆலய வருடாந்த திருவிழா திருப்பலியின்போது அருட்பணியாளர் கிறிஸ்துநாயகம் அடிகளார் ஆற்றிய மறையுரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, மரியாள் வாழ்ந்த வாழ்வு அவள் கடைப்பிடித்த கிறிஸ்தவ விழுமியங்கள் என்று ஒரு பெரிய பட்டியலையே நாம் பார்க்கலாம். இந்தக் காலகட்டத்திலே சிறப்பாக இந்த வருடத்திலே நாம் மன்னார் மறைமாவட்டத்தில் இறைவார்த்தை ஆண்டைப் பிரகடனப்படுத்தி உள்ளோம். இறை வார்த்தையின்படி வாழ்ந்தவர்கள் யார் யார் என்று பார்க்கின்ற வேளையிலே அந்த இறைவார்த்தையை வாழ்ந்த முதலாவது சீடத்தியாக அன்னை மரியாளை நாம் சந்திக்கின்றோம்.

ஆண்டவர் இயேசு சொன்ன வார்த்தை "யார் என்னுடைய தாய்? யார் என்னுடைய சகோதரர்கள்? இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கின்றவர்கள்தான் என்னுடைய தாயும், சகோதரர்களுமாவார்" என்றார். அன்னை மரியாள் இறைவார்த்தையின்படி வாழ்ந்ததால் அவர் தன்னுடைய தாய் என்று இயேசு தெளிவுபடுத்தியுள்ளார்.



இயேசுவைப் பெற்றபடியால் அல்ல, 30 வருடங்கள் அவரை வளர்த்தபடியால் அல்ல, மாறாக இறைவார்த்தையைக் கேட்டு அந்த வார்த்தையின்படியே ஆகட்டும் என்று பதில் சொல்லி அந்த வார்த்தைக்கு இறுதிவரைக்கும் வணக்கம் செலுத்தி அந்த வார்த்தையை இறுதி மூச்சு வரைக்கும் வாழ்ந்து காட்டியபடியால்தான் வெறும் இரத்த உறவில் மட்டுமல்ல, ஆன்மீக உறவிலும் மரியாள் தனது தாய் என இயேசு வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தக் காலகட்டத்திலே நாங்கள் பல்வேறு விதமான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். பல்வேறுவிதமான செய்திகளைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். இந்தச் சூழ்நிலையில் இன்று என்ன நடக்கும், நாளை என்ன நடக்கும் என்று கூறமுடியாத காலக்கட்டத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் அன்னை மரியாளின் திருநாள் எமக்கு சொல்லுகின்ற செய்தி என்ன? தனது துன்ப வேளையில் விசுவாசம் கொண்டவளாக, தனது துன்ப வேளையில் விசுவாசத்தில் தளர்ச்சி காணாத அன்னையாக, பல்வேறு சந்தர்ப்பத்தில் இடம்பெயர்ந்து சென்ற வேளையிலே தமது விசுவாசத்தில் உறுதிகொண்ட அன்னையாக மரியாள் இருந்தார். இதன் அடிப்படையிலே எமது விசுவாசம் எப்படி இருக்கின்றது என்று நாம் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம் என அடிகளார் மேலும் தெரிவித்தார்.

## கண்ணீர் அஞ்சலி



மன்னார் மறைமாவட்டக் குருவான அருட்பணியாளர் எஸ். சவுல்நாதன் அவர்களின் அன்புத்தந்தையார் திரு. சிந்தாத்துரை சல்வதோர் அவர்கள் கடந்த 30.12.2007 அன்று கள்ளியடி, வன்னியில் காலமானார். இறுதி அஞ்சலி நிகழ்வுகள் 31.12.2007 அன்று கத்தாளம்பிட்டி, கள்ளியடியில் இடம்பெற்றது. அருட்பணி. சவுல்நாதனுக்கும் அவருடைய குடும்பத்தவர்களுக்கும் மன்னா அன்பு நெஞ்சங்கள் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். இத்தந்தையின் ஆன்மா அமைதியில் இளைப்பாறச் செபிக்கின்றோம்.

## தொடர்பாடல் வெறுமனே ஒரு கொடையல்ல மாறாக இது தொடர்ச்சியான ஒரு சவாலாகவும் இருக்கின்றது

### – தொடர்பாடலின் விவிலிய அடித்தளம் பற்றி பெனோ அடிகளார் –

தொடர்பாடல் வெறுமனே ஒரு கொடையல்ல, மாறாக இது தொடர்ச்சியான ஒரு சவாலாகவும் இருக்கின்றது. இது நெருக்கடி நிலை, முறிவு போன்றவற்றிற்கு உட்பட்டது என மன்னார் மறைமாவட்டத்தின் சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனர் அருட்பணியாளர் பெனோ அலெக்ஸ்சாண்டர் சில்வா அடிகளார் தெரிவித்தார். மன்னார் சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தில் 03.02.2008 அன்று இவ்வாண்டுக்கான முதல் அமர்வின்போது உரையாற்றுகையிலேயே பெனோ அடிகளார் இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் ஊடகத்துறையினர், எழுத்தாளர்கள் மற்றும் பாடகர், கலைஞர்கள் கலந்துகொண்டனர்.

பெனோ அடிகளார் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும்போது, மனிதரை உருவாக்கி "மிகவும் நன்று" என்ற வார்த்தைகளுடன் நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட தொடக்க நூல் வெகுவிரைவில் தொடர்பாடலில் ஏற்பட்ட முறிவைப்பற்றி எடுத்துரைக்கின்றது. ஆதாமும் ஏவாளும் தம்மைச் சந்திக்க வந்த இறைவனின் காலடி ஓசை கேட்டவுடன் ஒழிந்துகொள்கின்றனர். (தொ.நூ.3:8) வானத்தை எட்டக்கூடிய வகையில் ஒரு கோபுரத்தை அமைக்கின்றார்கள் (தொ.நூ.4:1-16) இறைவன் உலக மொழிகளில் முரண்பாட்டை ஏற்படுத்தி அவர்களைத் தண்டிக்கிறார். (தொ.நூ.11:9) பழைய ஏற்பாட்டின்



முதலாவது புத்தகத்தின் முதலாவது பக்கத்தில் இருந்து புதிய ஏற்பாட்டின் இறுதி நூலான திருவெளிப்பாடு வரை விவிலியமானது முக்கியமாக இறைவன் மானிடருடன் கொண்ட தெய்வீக தொடர்பாடலின் வரலாறாய் அமைந்துள்ளது.

அவர் தொடர்ந்து பேசுகையில், வேதாகமத்தின் ஏனைய பகுதிகளில் அதிகமானவை இறைவனுக்கும் மனிதருக்குமிடையேயும், மனிதர் தமக்கிடையேயும் கொள்ளும் தொடர்பாடலை முன்னெடுப்பதில் இறைவன் கொள்ளும் முயற்சியுடன் தொடர்புடையதாய் உள்ளது. இதன் மையப் பொருளாய் அமைந்துள்ளது உடன்படிக்கை. (வி.ப.19:9) முறிந்த தொடர்பாடல் உடன்படிக்கை மூலம் மீளப்பெறப்பட்டது.

*(தொடர்ச்சி 19ம் பக்கம்...)*

## முருங்கன் பங்கில் திருப்பாலத்துவ சபைத்தினம்

முருங்கன் பங்கில் திருப்பாலத்துவ சபைத் தினமானது கடந்த 27.01.2008 அன்று திருப்பாலத்துவ சபைச் சிறார்களால் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வு காலை 7.30 மணியளவில் அன்பிய இயக்குனர் அருட்பணி யூட் குரூஸ் அடிகளார் திருப்பாலத்துவ சபை கொடியை ஏற்றி வைத்ததுடன் ஆரம்பமானது. சிறார்கள் அனைவரும் வெண் ஆடை தரித்து, வெள்ளை, மஞ்சள் கொடிகளை கையில் ஏந்திய வண்ணம் ஆலயத்தினுள் பவனியாக வந்தனர். அருட்தந்தையால் சிறார்களுக்கான சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய நாளைச் சிறப்பிக்கும் வண்ணம் ஊக்குவிப்பாளர்களால் கலைநிகழ்வுகளும், விளையாட்டுப் போட்டிகளும் ஒழுங்குசெய்யப்பட்டன. சிறார்களின் மகிழ்ச்சியான இந்நிகழ்வைச் சிறப்பிக்க பங்குத் தந்தை அருட்பணி. ஸ்ரீபன் ராஜ் அவர்களும், சலேசிய சபை அருட்பணியாளர்களான பயஸ், சேவியர், வின்சன் ஆகியோரும் கார்மேல் இல்லத் தலைவி அருட்சகோதரி சயந்தி அவர்களும், அருட்சகோதரிகள் நொய்லின், விமலினி, புளோறிடா ஆகியோரும் வருகை தந்து சிறப்பித்தனர். இவர்களுடன் மறையாசிரியர்களும், மறைக்கல்வி மாணவர்களும், பெற்றோரும் சிறார்களின் மகிழ்ச்சியான இந்நிகழ்வை கண்டுகளித்தனர்.

இந்நிகழ்வு சிறப்புற நிகழ சிறார்களை நெறிப்படுத்திய அருட்சகோதரி விஜிதா அவர்களும், ஏனைய ஊக்குவிப்பாளர்களான ஆசிரியை சா.ப.யாழினி, தர்சிகா, பிரியா, றேகா ஆகியோர் நன்றிக்கு உரியவர்கள்.

*திருப்பாலத்துவசபை சிறார்கள், முருங்கன்*

*முருங்கன் பங்கின் திருப்பாலத்துவ சபைத்தின நிகழ்வுகள்*







## தன்னார்வப் பணியாளர்களின் மாதாந்த ஒன்றுகூடலில் இறைவார்த்தை பற்றிய சிந்தனைகள்

தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்களின் ஒன்றுகூடலும் தியானமும் கடந்த ஜனவரி மாதம் 8ம் திகதி தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் நடைபெற்றது.

வேதசாட்சிகளின் புனிதமிக்க இவ்வாலயத்தில் இறைவார்த்தை ஆண்டில் இத்தியானத்துக்கு வருகை தந்திருந்த பணியாளர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன் என்று மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி பி. கிறிஸ்து நேசன் அடிகள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மூத்த பணியாளர்கள் இறைவார்த்தைகளை முதன்மைப்படுத்தித் தியான உரைகளை வழங்கினார்கள். மூத்த மறையாசிரியர் திரு. ம. மரிய செல்வன் அவர்கள் உரையாற்றுகையில், இறைவார்த்தையின் வல்லமையை வேதாகமத்தின் மூலமாகவும் சாட்சிய வாழ்வு அனுபவங்கள் மூலமாகவும் எடுத்துரைத்தார். "ஆண்டவரே என்றென்றைக்கும் உள்ளது உமது வாக்கு" (தி.பா.119:89) "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு" (தி.பா.105) இவைபோன்ற வார்த்தைகளை அவர் தனது உரையில் எடுத்தாண்டார்.

அருட்சகோதரி றெஜினா அவர்கள் வழங்கிய செய்தியில், இறைவார்த்தை ஆற்றல் மிக்கது மனதிற்கு திடனை, சக்தியை தருகின்றது என்பதைத் தமது அனுபவம் மூலமும் வேதாகம வார்த்தைகள் வாயிலாகவும் உறுதிப்பட எடுத்துரைத்தார். "கடவுள் எனக்காக அனைத்தையும் செய்துமுடிப்பார் (தி.பா.57:2) ஆண்டவர் எனக்காகப் போராடுவார்" என்பன போன்ற இறைவார்த்தைகளினால் அருட் சகோதரியின் இறைவார்த்தைப் பகிர்வு நம்பிக்கையைத் தருவதாக இருந்தது.

பொதுநிலைப் பணியாளர் திரு. ஜீவா அவர்கள் தமது உரையில் "அவரே நம் குற்றங்களுக்காக காயப்பட்டார்... நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்" (எசாயா 53:5) போன்ற இறைவார்த்தைகளையும், இறைவார்த்தை அனுபவத்தையும் உணர்வுபூர்வமாக வழங்கி இறைவார்த்தை மீட்பைத்தருகிறது, குணம் அளிக்கிறது, நிறைவாழ்வுக்கு இட்டுச்செல்கிறது என்பதை வலியுறுத்தினார்.

தன்னார்வப்பணி இணைப்பாளர் திரு. செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் பரிந்துரைச் செபத்தை வழிநடத்தினார். "நீர் செல்லும் இடமெல்லாம் வெற்றி பெறுவாய்" என்ற யோசுவா 1:8ம் வார்த்தை இறைபணியாளருக்கு பலமூட்டுகின்றது எனக்கூறினார்.

*P. இராயப்பு, தன்னார்வப் பணியாளர்*
*விடத்தல்தீவு / தோட்டவெளி*

## நன்றிச் செபம்

அன்பும் இரக்கமும் நிறைந்த இறைவா! நான் மன்றாட்டுக்கு கருணை கூர்ந்து அருளினீர். ஆண்டவரே உமது எல்லையில்லாத இரக்கத்திற்காகக் கோடான கோடி நன்றி கூறுகிறேன். உமது வல்லமையுள்ள நாமம் எங்கும் போற்றிப் புகழப்படுவதாக.

பரிசுத்த ஆவிக்குச் செபம் : எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வின் எந்தச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாயிருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லாத மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

ஓ! பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி, நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். - *ஓர் அடியாள்.*

## 31ம் நாள் நினைவு

மலர்வு 01 - 04 - 1956



உதிர்வு 02 - 03 - 2008

**அருட்சகோதரி இக்னேஷியா (தி.கு.க)**

குழந்தை உள்ளம் படைத்த தங்காய்
குவலயம் வாழ உன்னையே அளித்தாய்.
பரமன் இயேசுவின் பத்தினியாய் என்றும்
பணிபுரிந்தாய் இந்நானிலத்தில்.
சீர்பெற்ற செல்வியாய் வாழ்ந்த உன்னை
சிதைத்ததோர் நோயொன்று நாமறிவோம்
ஆண்டவர் பாதம் சரணடைந்தோம்
அவர் சித்தம் ஏற்க மனது கொண்டோம்.
ஐம்பத்திரெண்டாம் அகவையில் நீ
தடம் பதிக்கும் இன்று
சோதரர் நாம் புலம்பி அழுகின்றோம்.
கன்னியர் குழாம் கலங்கி நிற்கின்றது
கல்விப்புலம் கண்ணீர் வடிக்கின்றது - காரணம்
உனது இறப்பின் முப்பத்தோராம் நாள் இன்று

*பிரிவால் துயருறும்: பாசமிகு சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள்*
*தகவல்: சூ. எமிலியானுஸ்பிள்ளை (அண்ணன்), நானாட்டான்*

# புனித யோவான் நற்செய்தியில் இயேசுவின் உயிர்ப்பு

## முன்னுரை

பொய்மையிலிருந்து மெய்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், சாவிலிருந்து வாழ்வுக்கும் நம்மை இட்டுச் செல்பவர் இறைவன் ஒருவரே. மனித வாழ்வுக்கு அடிப்படையான இந்த உண்மையை இயேசுவின் வாழ்வு, மரணம், உயிர்ப்பு மூலம் உணர்த்துவது புனித யோவானின் நோக்கமாகும்.

புனித யோவான் தமது நற்செய்தியில் இயேசுவும் நிக்கதேமுவும் (அதி. 3:1-21). இயேசுவும் சமாரியப் பெண்ணும் (அதி. 4:1-42), இயேசுவும் பெத்சாய்தா முடவனும் (அதி 5:1-18), இய்சுவும் மார்த்தா மரியாளும் (அதி. 11:1....), இயேசுவும் பிலாத்துவும் (அதி 18:28-38) எனப் பல சந்திப்பு நிகழ்வுகள் மூலம் இவ்வுண்மையை விளக்குகின்றார்.

குறிப்பாக "இயேசு இறை மகனாகிய மெசியா என்று நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன" (அதி 20:31) என்று தம் நோக்கைக் கோடிட்டுக் காட்டுகின்றார். இப்பின்புல அறிமுகத்துடன் இயேசுவின் உயிர்ப்பு உணர்த்தும் உண்மையை சில சந்திப்புக்கள் மூலம் புனித யோவான் நமக்களிப்பதைப் புரிந்துகொள்வது சிறப்பாகும்.

### அ. இயேசுவின் கல்லறையில் (யோவா. 20:1-10)

"வாரத்தின் முதல் நாளன்று விடியற்காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார்." கல்வாரி நிகழ்வை நினைவில் வளர்த்துக்கொண்டு கல்லறையை சந்தித்த அவர் இன்னும் "இருள் நீங்காத" நிலையில் வாழ்ந்தார். "கல்லறையிலிருந்து இயேசுவின் உடலை யாரோ எடுத்துச்சென்று விட்டார்கள்" என்பதே அவரது சிந்தனையாகும்.

இருளானது பல கண்களை மறைக்கிறது. பல ஆன்மாக்களோடு கூடி நின்று அவற்றின் உண்மை நிலைகளை மறைத்து நிற்கின்றது.

### இருளிலிருந்து ஒளிக்கு

வெறுமையான கல்லறையைக் கண்டதை மரியா சீடர்களுக்கு அறிவித்தாள். இந்தச் செய்தியைக் கேட்ட சீடர்கள் இருவர் கல்லறைக்குச் சென்றனர். கல்லறையில் துணிகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் அவர்கள் கண்டார்கள். "இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்துகொள்ளவில்லை". இயேசு "இவ்வுலகைவிட்டுத் தந்தையிடம் செல்வதற்கான நேரம் வந்துவிட்டது" (அதி. 13:1) என்ற மறைநூல் வாக்கை, அவர்கள் புரிந்துகொண்டபோது நம்பினார்கள்.

மறைநூல் விளக்கப்பட்டபோது சீடர்கள் இயேசுவின் உயிர்ப்பில் நம்பிக்கைகொண்டு, ஏற்றுக்கொண்டார்கள் எனப் புனித லூக்கா சுட்டிக்காட்டுவதையும் இங்கு நினைவுகூர்வது சிறப்பாகும் (லூக் 24:25 - 27,32). நம்பிக்கையால் சீடர்களின் இருள் நீங்கப் பெற்று அவர்கள் அகவொளி பெற்றார்கள். அவர்களின் உள்ளங்களில் ஏதோ பற்றி எரிவதாக உணர்ந்தார்கள்.

*"ஆண்டவரே என் ஒளி (தி.பா.27) ஆண்டவரே, உமது வார்த்தையே என் பாதைக்கு ஒளி" (தி.பா.119:105).*

### ஆ. கல்லறையில் இயேசுவும் மகதலா மரியாவும் (யோவா 20:11-18)

கல்லறையில் மறைவாக்கை நினைவுகூர்ந்து பெற்ற அகவொளியுடன் சீடர்கள் தாங்கள் தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பினார்கள். ஆனால் மரியா மீண்டும் கல்லறைக்குச் சென்றார். இயேசுவின் உடலை எடுத்துச்சென்று விட்டனர், எங்கே வைத்தனரோ தெரியவில்லையே? என்ற கவலையுடன் கல்லறைக்கு வெளியே நின்றார். அவரின் குழப்பம் இன்னும் நிலைத்திருந்தது. மாலை வேளை இருள் வளரும் வேளையது. அவரும் வளரும் இருளில் நின்றார். இன்னும் நம்பிக்கை பிறக்கவில்லை. ஏதும் தெரியாது எனைமறைத்த வல்லிருளை நீக்க, நாதா எனக்கோர் ஞான விளக்கில்லையோ?

### இயேசுவின் அழைப்புக் குரல்

"ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" என்ற குரலை மரியா கேட்டாள். அக்குரல் கேட்டு இயேசுவைப் பின்சென்ற அவரது முதல் சீடர்களைப்போல (அதி. 1:38) இயேசுவைப் பின்செல்வதற்கு மரியாவும் பெற்ற தூண்டுதலை மரியாவால் உணரமுடியவில்லை. அவர் இன்னும் இயேசுவை இனங்காணவில்லை. ஆனால் "மரியா" என்று பெயர் சொல்லி அழைக்கக் கேட்டார். அவர் திரும்பிப் பார்த்து "போதகரே" என்றார். இயேசுவை இனம்கண்டார். "அவர் தம் சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே கூட்டிச்செல்வார்... அவர் அவற்றுக்கு முன்செல்வார். ஆடுகளும் அவரைப் பின்தொடரும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியும். அறியாத ஒருவரை அவை பின்தொடரா.... அதுபோல் நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்" (அதி 1:1-5...) இயேசுவை நல்லாயனாக மரியா கண்டார். ஆயினும் மரியாவின் இருள் நிலை முற்றும் நீங்கவில்லை.

### பற்று நீங்கி, சீடத்துவம்

தான் இனம்கண்ட இயேசுவின் பிரசன்னத்தைப் பற்றிக்கொண்டு அங்கு நிரந்தர சந்நிதானம் காண முற்படுகிறார். அவருக்குள்ளும் கூடாரம் அமைக்கும் மனநிலை காணப்பட்டது (மாற்.9:5-6). நசரேத்தூர் இயேசு, போதகரில் கொண்ட பற்றை அறுத்து, பரந்த பார்வையுடன் சீடத்துவத்தை வாழும் பற்று அவரில் பிறக்க வேண்டும். ஏதோ ஒன்றின்மேல் பற்றினை வைத்து, அதனை அடைவதற்கு முயல்வதே மனித வாழ்க்கையின் இயல்பாகும். அதனால் மனித வாழ்வு இன்ப துன்ப சுழற்சியில் சிக்கிக்கொள்கிறது. அவ்வாறான சுழற்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு இறைவனைப் பற்றிக்கொள்வது சாலச்சிறந்தது. இறைவன் தனக்கென்று எப்பற்றும் இல்லாதவராகையால், அவரைப் பற்றிக்கொள்வதால் நாம் சுதந்திரமடைவது நிட்சயம். அவரின் அருட்செயல்களையே பற்றிக்கொண்டு வாழும்போது

ஜெராட் டீ ரொசாய்ரோ (அ.ம.தி)
தெவ் அரண, பொள்வத்த,
மினுவாங்கொட.

இறையடியாராகலாம். பற்றற்ற நற்செய்திப் பணியாளராகலாம். "பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றை பற்றுக பற்று விடற்கு". மகதலா மரியா "என்னை இப்படிப் பற்றிக்கொள்ளாதே..." என்ற இயேசுவின் வார்த்தையைக் கேட்டு நம்பிக்கை கொண்டவராக, சீடர்களிடம் சென்றார். உயிர்த்த இயேசு அவரிடம் சொன்னதை அவர்களுக்கு அறிவித்தார். நற்செய்தியை அறிவிக்கும் சீடத்துவப் பெண்ணாக மரியா மாறினார். கண்ணுக்குப் புலப்படுபனவற்றிலிருந்து புலப்படாததை உணரும்போது, வெற்றுக் கல்லறைகளைக் கடந்து செல்லும் எதிர்நோக்குடன் உறுதி பிறக்கின்றது. கல்லறைகளில் கண்ணீர் வடிப்பதை நிறுத்தி, அங்கு இறைகுரல் கேட்டு, புதிய விழிப்புணர்வுடன், வாழ்வு தேடும் வாழும் வித்துக்களாக வழிநடக்க வைப்பது நம்பிக்கையே. "அவர் அவர்களுக்கு முன் நடந்தார்."

### இ. இயேசுவும் சீடர்களும் (யோவா. 20.19-23)

இயேசுவின் உயிர்ப்புடன் தொடர்புடைய நிகழ்வுகளை புனித யோவான் *வாரத்தின் முதல் நாளன்று விடியற்காலையில் அல்லது வாரத்தின் முதல் நாளன்று மாலை வேளையில* எனத்தொடங்குவது நோக்கற்பாலது. இரண்டும் இருள் குவிந்த வேளைகள்.

இயேசு சீடர்களுக்குத் தோன்றும் நிகழ்வு வாரத்தின் முதல்நாள் மாலை வேளையில் நிகழ்கின்றது. இயேசுவின் சீடர்கள் யூதர்களுக்கு அஞ்சி கதவுகள் மூடப்பட்ட அறைக்குள் இருந்தார்கள். கல்லறைக்குச் சென்று நம்பிக்கை கொண்ட சீடர்கள் இருக்க, இன்னும் சீடர்களின் மறைந்த வாழ்வும் அச்சமும் தொடர்ந்தது.

### இயேவின் செய்தி

இந்நெருடல் மிக்க சூழ்நிலையில் இயேசு சீடர்களுக்கு காட்சியளிக்கின்றார். அவர்கள் நடுவில் நின்று "அமைதி உரித்தாகுக" என அவர்களை வாழ்த்தினார். யூதமக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது "சலோம்" எனக்கூறும் வழமையான வாழ்த்து அல்ல இது. மாறாக இயேசுவின் கட்புலனாகாத பிரசன்னத்தில் சீடத்துவத்தை வாழச் சீடர்களுக்கு இயேசு அளித்த உறுதியூட்டும் வாழ்த்தாகும். "அமைதியை உங்களுக்கு விட்டுச்செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றதல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் மருள வேண்டாம்..." (யோவா 14:27-28). ஒருவரின் சுதந்திரமான இருப்பும், பாதுகாப்பும், சுயநிர்ணயமும் கேள்விக்குள்ளாக்கப்படும் சூழமைவில் அமைதி எப்படி நிலையானதாகும்? நிரந்தரமாகும்? இந்த அடிப்படையை அசைத்து, அலங்கோலப்படுத்தி, அங்கலாய்க்க வைக்கும் சூழமைவில் அமைதி எப்படி கைகூடும்? கலக்கமும், மருட்சியும், அச்சமும், திகைப்பும் தவிர்க்க முடியாதவையாகும். நேர்மையற்ற நீதி நிலையான சமாதானத்தை அளிப்பதில்லை. அதன் விளைவாக ஏற்படும் அமைதியும் நீர்க்குமிழி போன்றதாகும். காயங்கள் தொடரும்!

இயேசுவின் சீடர்களின் நிலையும் அப்படித்தான் காயப்பட்டு ஆறிய காயங்களின் அனுபவத்தைப் பெற்றவர்களே காயப்பட்டவர்களை ஆற்றுப்படுத்த முடியும். காயப்பட்டுக் கலக்கமுற்றவர்களுக்கு உறுதியூட்ட முடியும். காயப்பட்டு ஆறாதவர்கள் மற்றயவரையும் காயப்படுத்துவார்களோ? "அமைதி உரித்தாகுக" என்ற வார்த்தைகள் தம் சுதந்திரமான இருப்பு, பாதுகாப்பு, சுயநிர்ணயம் பற்றிய குழப்பத்துடன் கலங்கிய உள்ளத்துடன் இருந்த சீடர்களுக்கு (அதி 16:22-23) ஆறிய காயங்களுடன், சீர்பட்ட அனுபவத்துடன் இயேசு வழங்கிய உறுதி மொழியாகும். "அவர் தம் கைகளையும், விலாவையும் அவர்களிடம் காட்டி" அவர்களுக்கு அளித்த வாழ்விக்கும் வாழ்த்தாகும். இதன் பின்னர். "ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்" என்கிறார் புனித யோவான்.

### இயேசு அருளும் ஆவி

இயேசுவின் "அமைதி உரித்தாகுக" என்ற மொழியைப் பெற்ற சீடர்கள் இயேசுவால் அனுப்பிவைக்கப்படுகின்றார்கள். தாம் பெற்ற செல்வத்தை பகிரும் ஈடுஇணையற்ற வல்லமை அவர்களிடமிருந்து அல்ல, மாறாக அது கடவுளே அருளியது என்பதை அவர்கள் உணர வேண்டும் (2கொரி 4:7-15). தூய ஆவியால் அருள்பொழிவும் ஆற்றலும் பெற்றே அவர்கள் இதை உணர்ந்தார்கள். இயேசு "உங்களை அனுப்புகிறேன்" என்று சொன்னபின் "அவர்கள்மேல் ஊதி, தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

"ஆண்டவராகிய கடவுள் மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத மனிதன் உயிருள்ளவனானான் (தொ.நூ 2:7) இறைத்தூதர் எசேக்கியேல் இறைவாக்கு உரைக்க நான்கு திசைகளிலிருந்தும் உயிர் மூச்சுப் புக உலர்ந்த எலும்புகள் உயிர்பெற்று காலூன்றி மாபெரும் படைத்திரள்போல் நின்றன. (எசே 37:9-11) இப்பின்புலத்தில் "தங்களை உருவாக்கியவரும், தங்களுக்குள் ஆற்றல்மிக்க ஆன்மாவை புகுத்தியவரும், உயிர் மூச்சை ஊதியவரும் யார்" (சால.ஞா 15:11) என அவர்கள் அறிந்தபோது இயேசுவின் கொடையால் "இறையாட்சிக்கு உட்பட்டவர்கள்" ஆனார்கள் (யோவான் 3:5).

### ஆவியின் ஆற்றலில் வாழ்வு

"இறையாட்சி வாழ்வு என்பது நாம் உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாக தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" (உரோ. 14:17) இத்தகைய மனநிலையுடன் வாழ மன்னிக்கும் மனம் அடிப்படையாகின்றது. இயேசு, "அவர்கள்மேல் ஊதி, தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா" என்றார் (அதி 20:22-23).

ஒருவரை அவரது வாழ்வில் அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் ஆதிக்க சக்தியிருந்து விடுவிப்பது மன்னித்தலாகும். கடந்த கால சுமைகளிருந்து விடுபடுவதும், விடுவிப்பதும் மன்னித்தலாகும்.



குணம் பெறுதல் கூட மன்னிப்பின் நல்விளைவாகும். இதுவே ஆவியின் அருளால் இயேசு தரும் வாழ்வு. இம் மன்னிக்கும் சக்தி மனிதருக்கு நம்பிக்கையால் கிடைக்கப் பெறும் சக்தியாகும். (மத்.9:1-8) இம்மன்னிக்கும் அதிகாரமும் ஆற்றலும் இயேசுவுக்கிருந்தது. அதனை இயேசு அவரில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அளித்தார். இவ்வாற்றலை தம் சீடர்களை அனுப்பிவைத்த வேளையில் அவர்களுடன் பகிர்ந்து கொண்டார். இவ்வாற்றலால் அவர்கள் உலகைச் சாராதவர்களாக, உலக சோதனைகளில் விழாதவர்களாக வாழ முயல்வார்கள்.

"உம் வார்த்தையை நான் அவர்களுக்கு அளித்தேன். நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாததுபோல் அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்லர். ஆதலால் உலகம் அவர்களை வெறுக்கிறது. அவர்களை உலகிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று வேண்டவில்லை: தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன். உண்மையினால் அவர்களை அர்ப்பணமாக்கியருளும்..." (அதி 17:14-19) சுருக்கமாக, உயிர்த்த இயேசு சீடர்களுக்குத் தோன்றி அவர்கள் ஓர் அர்ப்பணித்த வாழ்வை வாழ்வதற்கு அவர்களுக்கு ஆசிகூறி ஆற்றலளித்தார்.

### ஈ) இயேசுவும் தோமாவும் (யோவா 20:24-29)

இயேசு தம் சீடர்களுக்கு தோன்றியபோது திதிமு என்னும் தோமா அவர்களுடன் இல்லை என்கிறார் யோவான். தோமா இலகுவாக எதையும் நம்புபவர் அல்லர். எதையும் ஆய்ந்து பார்க்க விரும்புபவர். புரியாதவற்றுக்கு தலையாட்டுபவரும் அல்லர். கேள்வி கேட்டு தெளிவடைய விரும்பும் ஒருவர் தோமா (யோவா 11:16, 14:05). இத்தகைய மனப்பாங்கு கொண்ட தோமாவிடம் சீடர்கள் "ஆண்டவரைக் கண்டோம்" என்றார்கள். தோமா சீடர்களில் வார்த்தையைக் கேட்டு நம்புவதற்கு விரும்பவில்லை. இயேசுவின் கை கால்களில் ஏற்பட்ட தழும்புகளைப் பார்த்து அவரது விலாவில் கையை இட்டுப்பார்த்த பின் நம்புவேன் என்கிறார்.

சமநோக்கு நற்செய்திகளில் சீடர்களில் சிலர் உயிர்த்த இயேசுவைக் கண்டு ஐயமுற்றதாகவும், நம்பிக்கை கொள்ளவில்லை எனவும் சொல்லப்படுகின்றது (மத் 28:17), (லூக்24:11,41, மாற்16:11,14) "நீங்கள் அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் கண்டாலன்றி நம்பவே மாட்டீர்கள்" (யோவா 4:48) என்று இயேசுவினால் சீடர்கள் கண்டிக்கப்படுவதையும் இங்கு நினைவில்கொள்ளலாம். தோமாவும் இருக்கும் வேளையில் சீடர்களுக்குக் காட்சியளிக்கும் இயேசு, அவரிடம் "இதோ என் கைகள், இங்கே உன் விரலை இடு, உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" என்றார். தோமா இயேசுவைத் தொட்டுப் பார்த்ததாகத் தெரியவில்லை. மாறாக, ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொண்டார். "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்றார். இயேசுவின் "ஐயம் தவிர்த்து, நம்பிக்கைக்கொள்" என்ற பணிப்புக்கே பணிவு கொண்ட மனதுடன், தோமா இவ்விசுவாச அறிக்கையைச் செய்தார். தோமாவின் விசுவாச அறிக்கைக்கு, "நீ என்னைக் கண்டதால் நம்பினாய்" என இயேசு அளித்த பதில் வார்த்தைகள் நமக்குள்ளும் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டவையாகும். யோவான் நற்செய்தியில் இயேசுவின் புதுமைகளும் அருள் அடையாளங்களும் ஒருவரை நம்பிக்கைக்கு இட்டுச் செல்லும் என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆனால், ஒருவர் நம்பிக்கை கொள்வதற்கு அவைதான் தவிர்க்க முடியாதவை என்பது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

## முடிவுரை

புனித யோவான் நற்செய்தியில் உயிர்த்த இயேசுவில் நம்பிக்கை கொண்ட சீடர்களைப் பல நிலைகளில், வேறுபட்ட பரிமாணங்களில் கண்டோம். இயேசு தனி அன்பு கொண்டிருந்த சீடர் கல்லறையில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்த துணிகளைக் கண்டு இயேசுவின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டார். மகதலா மரியா, கல்லறைக்கு அருகில் "மரியா" என அழைக்கும் குரல் கேட்டு, திரும்பிப்பார்த்து இயேசு என நம்பினார். கதவுகள் மூடப்பட்ட அறைக்குள்ளிருந்த சீடர்கள் ஆண்டவரைக் கண்டதால் மகிழ்ச்சி கொண்டனர், நம்பினார்கள். திதிமு என்னும் தோமா இயேசுவின் சவால் மிக்க வார்த்தைகளைக் கேட்டபின் நம்பினார். கட்புலனாகிய இந்நிலைகளில் இயேசுவின் சீடர்கள் நம்பிக்கை கொள்ள, "காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்றார் இயேசு.

இத்தகைய நம்பிக்கையால் நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்ற உறுதி தோன்றும், கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை கைகூடும் (எபி 11:1). காணாமலே பிறக்கும் நம்பிக்கையால் இயேசுவைப் பின்பற்றுபவர்கள். "அவர் பெயரால் வாழ்வு பெறுவார்கள்" (யோவா 20:31). கல்லறை வரையும் மனிதத் திட்டங்கள் சென்றடையலாம். கல்லறைகளையும் காவல்களையும் கடந்து கடவுள் செயல்படுகின்றார். கடவுளின் செயலுக்கு இவை கரைகட்ட முடியாது. இதை நம்பியவர்கள் ஒளியைக் காண்பார்கள். ஒளியின் மக்களாக வாழ்வார்கள். இறைவனின் அருட்செயல்களைப் பற்றிக் கொண்டு வாழ்பவர்கள் இறைவனின் திருவருளால் ஞானமும், கருணையும் ஒருங்கே அமைந்த அடியார்களாக மாறலாம். தன்னலம், வெகுளி, அறியாமை ஆகியவற்றுக்கு இடமளியாது நல்வாழ்வு வாழலாம். எப்பாரும், எப்பதமும் சென்று நற்பணி ஆற்றலாம். "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப்படும்"

உயிர்த்த இயேசுவில் அனைவருக்கும் அமைதி உரித்தாகுக!

# தேசிய மட்ட மறையாசிரியர் தேர்வு முடிவுகள்

## மன்னார் மறைமாவட்டத்தில் சித்தியடைந்தோர் விபரம்

வி.சி - விசேடசித்தி
தி.சி - திறமைச்சித்தி
சா.சி - சாதாரணசித்தி

சித்தியடையாதவர்களின் விபரம் இங்கே குறிப்பிடப்படவில்லை. அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்பதை கவனத்தில் கொள்ளவும். - இயக்குனர்.

### மறையாசிரியர் தேர்வு - 1, 2007

| சுட்டெண் | பெயர் | பங்கு | பெறுபேறு |
|---|---|---|---|
| 200701 | அ. விக்டோறியா டயாந்தினி | தலைமன்னார் | தி.சி |
| 200702 | மை. மரியம் ரொசானி பர்னாந்து | தலைமன்னார் | தி.சி |
| 200703 | செ. ருசாந்தினி | தலைமன்னார் | தி.சி |
| 200706 | ரா. அகிலா | கீளியன் குடியிருப்பு | சா.சி |
| 200708 | அ. மரியதர்சினி | கீளியன் குடியிருப்பு | சா.சி |
| 200709 | சி. சுமதி | கீளியன் குடியிருப்பு | தி.சி |
| 200711 | லோ. மேரி மரிஸ்ரெலா | கீளியன் குடியிருப்பு | சா.சி |
| 200713 | ச. மரிய கவிதா | கீளியன் குடியிருப்பு | சா.சி |
| 200714 | அ. பேபி சாலினி | கீளியன் குடியிருப்பு | தி.சி |
| 200715 | சி. அனற்ஜான்சிராணி | கீளியன் குடியிருப்பு | தி.சி |
| 200716 | ச. அல்போன்சா | கீளியன் குடியிருப்பு | சா.சி |
| 200717 | கி. யோகேஸ்வரி | கீளியன் குடியிருப்பு | சா.சி |
| 200718 | கி. சூசையம்மா | கீளியன் குடியிருப்பு | சா.சி |
| 200722 | செ. கத்தறினா | தோட்டவெளி | சா.சி |
| 200733 | லியோ சம்யா மெக்டலின் வாஸ் | வங்காலை | தி.சி |
| 200734 | ஆ. ஜெனோ பிறிற் மார்க் | வங்காலை | சா.சி |
| 200737 | சீ. சுதாசினி | முருங்கன் | சா.சி |
| 200738 | தொ. கிறிஸ்ரீனா | முருங்கன் | தி.சி |
| 200740 | அ. ஆன்நிதர்ஷா | கற்கிடந்தகுளம் | வி.சி |
| 200741 | ச. ஆன் றிவேணி | கற்கிடந்தகுளம் | தி.சி |
| 200742 | தி. எனோவின் நிக்சலா | கற்கிடந்தகுளம் | சா.சி |
| 200743 | வ. மேரி அஞ்சலா | கற்கிடந்தகுளம் | சா.சி |
| 200744 | அ. றோகினி | கற்கிடந்தகுளம் | சா.சி |
| 200748 | ந. சியாமினி | அரிப்பு | தி.சி |
| 200751 | பி. வெனான்சியுஸ் | தேவன்பிட்டி | தி.சி |
| 200752 | அ. பாக்கியராசா | தேவன்பிட்டி | தி.சி |
| 200754 | லிகோற் லூட்ஸ் பீரிஸ் | அடம்பன் | சா.சி |
| 200757 | செ. மேகலா | இலுப்பைக்குளம் | சா.சி |
| 200758 | க. சிறோமி | இலுப்பைக்குளம் | சா.சி |
| 200760 | யோ. யுஸ்ரினா | இலுப்பைக்குளம் | தி.சி |
| 200761 | றி. பவுஸ்தீனா | கோமரசன்குளம் | தி.சி |
| 200762 | இ. இராசமேரி | கோமரசன்குளம் | தி.சி |
| 200763 | ஆ. சுஜிபா சுகனியா | கோமரசன்குளம் | சா.சி |
| 200764 | இ. ஜெயந்தினி | கோமரசன்குளம் | சா.சி |
| 200765 | வி. றெக்சன் | கோமரசன்குளம் | தி.சி |
| 200768 | யோ. ஸ்ரலாயோகராஜினி | பம்பைமடு | சா.சி |
| 200770 | ஜே. ஜெஸ்மின் மேரி | பம்பைமடு | தி.சி |
| 200773 | மு. ஜெயகௌரி | பம்பைமடு | சா.சி |
| 200774 | வோ. யோசப்பின் வேஜின் | பம்பைமடு | வி.சி |
| 200775 | அ. கிறிஸ்ரீனா | வவுனியா | தி.சி |
| 200776 | கொ. மேரி கொண்சலிற்றா | வவுனியா | தி.சி |
| 200777 | யோ. தர்மசீலி | வவுனியா | சா.சி |

### மறையாசிரியர் தேர்வு - 2, 2007

| சுட்டெண் | பெயர் | பங்கு | பெறுபேறு |
|---|---|---|---|
| 20721254 | அ.ப. கார்மல் திலகா கூஞ்ஞ | தலைமன்னார் | தி.சி |
| 20721255 | செ. கத்தரின் டலிமா | தலைமன்னார் | தி.சி |
| 20721256 | யோ.அ. சலேஜினி டயஸ் | தலைமன்னார் | தி.சி |
| 20721257 | யோ. மேரிஸ்ரெலா கூஞ்ஞ | தலைமன்னார் | தி.சி |
| 20721258 | ச டெல்சியா | தலைமன்னார் | வி.சி |
| 20721259 | அ ஆன்மேரி அனிற்றா குரூஸ் | தலைமன்னார் | வி.சி |
| 20721260 | ஜேசுதாசன் விமல்டன் | கீளியன் குடியிருப்பு | சா.சி |
| 20721261 | அ. மேரி அன்ரலிற்றா | கீளியன் குடியிருப்பு | வி.சி |
| 20721262 | சகாயநாதன் எட்னா | பேசாலை | தி.சி |
| 20721263 | கிங்ஸ்லி டிக்னா பிரஷ்சானி | பேசாலை | வி.சி |
| 20721265 | வி. நிஷாந்தன் யூட் பீரிஸ் | பேசாலை | தி.சி |
| 20721266 | சந்தியோகு றேனுகா லோகு | பேசாலை | வி.சி |
| 20721267 | வி. ஜெனட் லக்சி பறுனாந்து | பேசாலை | தி.சி |
| 20721268 | அ. லூட்ஸ் சிறோமி குரூஸ் | பேசாலை | தி.சி |
| 20721269 | பிரான்சிஸ் திவ்யா குரூஸ் | பேசாலை | தி.சி |
| 20721271 | செபதேயு மரியசீலி | தோட்டவெளி | தி.சி |
| 20721272 | யேசுதாசன் மெடோனா | தோட்டவெளி | தி.சி |
| 20721275 | ச. மேரி சசிகலா பெரேரா | தாழ்வுபாடு | தி.சி |
| 20721276 | சூசையப்பு றொசானி வாஸ் | தாழ்வுபாடு | தி.சி |
| 20721277 | ஞா . மேரி வெலெஸ்ரா | மன்னார் | வி.சி |
| 20721278 | அந்தோனி ஜென்சி | மன்னார் | வி.சி |
| 20721279 | யோ. லா. வேர்ஜின் லக்சிலா | மன்னார் | தி.சி |
| 20721280 | தே. மேரி துஷ்யந்தி குரூஸ் | மன்னார் | வி.சி |
| 20721281 | தங்கராசா மேரி சேபிகா | மன்னார் | வி.சி |
| 20721282 | யோ. ப. அ. எட்னா குரூஸ் | மன்னார் | தி.சி |
| 20721283 | அருட்செல்வி. ச.ம. கொன்செப்ரா | மன்னார் | வி.சி |
| 20721284 | சகாயராசா பேளின் தமிழினி | மன்னார் | வி.சி |
| 20721285 | செ. மேரி எலிசபேத் றோச் | பள்ளிமுனை | தி.சி |
| 20721286 | சே. மரிய கொறற்றி பிகிறாடோ | பள்ளிமுனை | தி.சி |
| 20721287 | ம. மேரி இமாக்குலேற் பிகிறாடோ | பள்ளிமுனை | தி.சி |
| 20721290 | அ. பே. சிறாந்தினி குரூஸ் | வங்காலை | தி.சி |
| 20721291 | லோ. மேரி அனற்றா வாஸ் | வங்காலை | தி.சி |
| 20721292 | ப. மா. ஷியானி றெவல் | வங்காலை | தி.சி |
| 20721293 | ச. மேரி நிஷாந்தினி சில்வா | வங்காலை | தி.சி |
| 20721294 | அ. ஜேன் சிறோமி | வஞ்சியன்குளம் | சா.சி |
| 20721297 | மோ. செபஸ்ரினாள் | உயிலங்குளம் | தி.சி |
| 20721298 | பீ. டொறின் | உயிலங்குளம் | தி.சி |
| 20721300 | பீ. வினோமில்டன்ஸ் | நானாட்டான் | சா.சி |
| 20721301 | அ. டிலிசியாப் பிரியதர்சினி | அளவக்கை | தி.சி |
| 20721304 | அந்தோனி விமலறஜனி | கற்கிடந்தகுளம் | சா.சி |
| 20721305 | நீ. பிறிஜிற் நிறோஜா | கற்கிடந்தகுளம் | சா.சி |
| 20721306 | அருட்சகோதரி. ஸ். புவனா | கற்கிடந்தகுளம் | தி.சி |
| 20721307 | பி. கனிஸ்ரா | கற்கிடந்தகுளம் | சா.சி |
| 20721310 | திருமதி.யு.பரலோக நாயகி | தேவன்பிட்டி | சா.சி |
| 20721312 | ஜேம்ஸ் றெக்னாமேரி | தேவன்பிட்டி | சா.சி |
| 20721313 | அ.சகாயசீலன் | தேவன்பிட்டி | சா.சி |
| 20721315 | செலஸ்ரீன் அருள்மேரி | தேவன்பிட்டி | சா.சி |
| 20721317 | கில்லறி பிரசன்னா | விடத்தல்தீவு | சா.சி |
| 20721318 | றொ.நிஷாந்தினி | விடத்தல்தீவு | சா.சி |
| 20721325 | இ.ஸ்ரெலா நிரோஜினி | இலுப்பைக் குளம் | தி.சி |
| 20721329 | யேசுதாசன் சஜந்தினி | செட்டிகுளம் | தி.சி |
| 20721330 | ஆ.ஸ்ரெலா சுபோதினி | செட்டிகுளம் | தி.சி |
| 20721331 | அருட்சகோதரி.அ.அ.றோமலா | பம்பைமடு | தி.சி |
| 20721332 | தேவராஜா மொறிற்றா | பம்பைமடு | தி.சி |
| 20721333 | தேவதாஸ் நிஷாந்தினி | பம்பைமடு | தி.சி |
| 20721334 | அ.சுபிதா | பம்பைமடு | தி.சி |
| 20721335 | சி.லூசியா | பம்பைமடு | சா.சி |
| 20721337 | அ.சாளற் | பம்பைமடு | சா.சி |
| 20721339 | அ.ஜெறோம் | கோமரசன் குளம் | தி.சி |
| 20721340 | அ.ஸிரொமி | பெ.கோமரசன் குளம் | வி.சி |
| 20721341 | செ.வேஜினி றோச் | பெ.கோமரசன் குளம் | தி.சி |
| 20721342 | பி.மேரி ஜெயாளினி | பெ.கோமரசன் குளம் | தி.சி |
| 20721343 | வ.பியூட்டி குயின் | பெ.கோமரசன் குளம் | சா.சி |
| 20721344 | சு.அகல்யா | கோமரசன் குளம் | சா.சி |
| 20721345 | ப.திரேசில்டா | ஓமந்தை | தி.சி |
| 20721346 | பா.கரோலின் | வவுனியா | சா.சி |
| 20721348 | சி.அன்ரனிற்றா நிர்மலி | வவுனியா | சா.சி |
| 20721350 | ஆ.அனுஷா | வவுனியா | சா.சி |
| 20721351 | யே.மெடோனா | மன்னார் | சா.சி |
| 20721352 | ஜோ.ஜெனிஸ்றாயினி | வவுனியா | தி.சி |
| 20721353 | தி.றங்கநாயகி | வவுனியா | சா.சி |
| 20721354 | ரா.ஜஸ்ரின் | வவுனியா | சா.சி |
| 20721355 | இ.தஸ்மினி | வவுனியா | தி.சி |

### மறையாசிரியர் தேர்வு - 3, 2007

| சுட்டெண் | பெயர் | பங்கு | பெறுபேறு |
|---|---|---|---|
| 20732058 | வி.வெனிஸ்டெலா தர்ஷினி | தலைமன்னார் | சித்தி |
| 20732059 | திருமதி.s.s.லூமினா கூஞ்ஞ | தலைமன்னார் | சித்தி |
| 20732060 | ஞா.மேரி மெற்றில்டா | கீளியன் குடியிருப்பு | சித்தி |
| 20732061 | ச.டார்வின் குரூஸ் | பேசாலை | சித்தி |
| 20732062 | வி.ஜோ.ச.வினோதினி பீரிஸ் | பேசாலை | சித்தி |
| 20732064 | செ.மேரி ஜென்சி குரூஸ் | தாழ்வுபாடு | சித்தி |
| 20732065 | பி.றேக்கா | மன்னார் | சித்தி |
| 20732066 | வெ.சசிகலா | மன்னார் | சித்தி |
| 20732067 | திருமதி.மே.ஜெ.ஜெ.ஸ்ரீபன் | மன்னார் | சித்தி |
| 20732068 | அருட்சகோ. பே.வேளாங்கன்னி | பள்ளிமுனை | சித்தி |
| 20732069 | கி.பஸ்ரினா குரூஸ் | வங்காலை | சித்தி |
| 20732070 | திருமதி.மை.றோசறி யூடிற் குரூஸ் | வங்காலை | சித்தி |
| 20732072 | ஜெ.வசந்த கோகிலா | உயிலங்குளம் | சித்தி |
| 20732073 | கி.ஜெய செல்வி | உயிலங்குளம் | சித்தி |
| 20732074 | ஞா.ஜெயகலா | உயிலங்குளம் | சித்தி |
| 20732075 | ச.செல்வன் சிறின்ரன் | உயிலங்குளம் | சித்தி |
| 20732077 | அருட்சகோ. ப. வானுமதி | நானாட்டான் | சித்தி |
| 20732078 | வி. ஜெனற் பிரசன்னா றோஸ் | அளவக்கை | சித்தி |
| 20732079 | தி. கலைவாணி | முருங்கன் | சித்தி |
| 20732080 | மி.ஆன் சுஷாந்தினி | முருங்கன் | சித்தி |
| 20732082 | சி.றஞ்சித் இராஜேஸ்வரன் | முருங்கன் | சித்தி |
| 20732083 | வி.ஜெ.பிரதீபன் | முருங்கன் | சித்தி |
| 20732084 | கெ.கொயின் இமல்டா | கற்கிடந்த குளம் | சித்தி |
| 20732085 | திருமதி.அ.விமல்டா | கற்கிடந்த குளம் | சித்தி |
| 20732086 | பே.அனற் டயானா | கற்கிடந்த குளம் | சித்தி |
| 20732087 | சி.மேரி எமல்டா | கற்கிடந்தகுளம் | சித்தி |
| 20732092 | ச.றொமோல்ட் | அடம்பன் | சித்தி |
| 20732094 | யேக்கப் டிலிஷா டயனா | ஆட்காட்டிவெளி | சித்தி |
| 20732095 | ஸ்.ஸ்ரெலா மேரி | ஆட்காட்டிவெளி | சித்தி |
| 20732096 | செ.பெப்பரூபா | ஆட்காட்டிவெளி | சித்தி |
| 20732097 | யோ.அ.இஸ்சபெல் அனிற்றா | ஆட்காட்டிவெளி | சித்தி |
| 20732098 | ம.கிறிஸ்ரீனா சில்வா | பண்டிவிரிச்சான் | சித்தி |
| 20732104 | செ.சுதாஜினி | பம்பைமடு | சித்தி |
| 20732105 | மு.றோஸ்லின் றெஜினா | பம்பைமடு | சித்தி |
| 20732106 | வோ.அஞ்சலின் ஜெனற் | பம்பைமடு | சித்தி |
| 20732107 | ம.மேரி நிறோஜினி | பம்பைமடு | சித்தி |
| 20732108 | ம.அன்சில்லா றஜனி | பம்பைமடு | சித்தி |
| 20732109 | சே.ஹேமா | பம்பைமடு | சித்தி |
| 20732110 | வோ.கிறிஸ்ரியனா லியோகாடியா | பம்பைமடு | சித்தி |
| 20732111 | அ.சி.அனற் சுதாகரி | பம்பைமடு | சித்தி |
| 20732113 | அ.அருள் நிஷாந்தினி | கோமரசன் குளம் | சித்தி |
| 20732114 | அருட்சகோ p.மரிய தராணி | கோமரசன் குளம் | சித்தி |
| 20732115 | லா.நிரஞ்சலா | கோமரசன் குளம் | சித்தி |
| 20732117 | தே.லீமா றம்யா | வவுனியா | சித்தி |

## புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நானாட்டான் பங்கின் சூரியகட்டைக்காடு

# புனித செபஸ்தியார் ஆலயம்




*"ஆண்டவரே வானங்கள் உம்மைக் கொள்ள முடியாதென்றால் நான் கட்டிய இந்த ஆலயம் எம் மாத்திரம்"* சாலமோன் அரசன் இறைவனுக்கென ஓர் ஆலயத்தை அமைத்து இறைவனின் உயிருள்ள பிரசன்னத்தை மன்றாடிக் கூறிய வார்த்தைகளே மேற்கூறப்பட்ட வார்த்தைகளாகும்.

மன்னார் மறைமாவட்டத்தில் இறைபக்தியும், மறைவளமும் கொண்ட பாரம்பரிய கத்தோலிக்க மக்களைக் கொண்ட கிராமம்தான் சூரியகட்டைக்காடு. இற்றைக்கு சுமார் பல வருடங்களுக்கு முன் வாழ்ந்த இக்கிராமத்தின் மூதாதையர்கள் ஊரினுடைய ஒற்றுமையின் பிரதிபலிப்பாகவும் இறைபக்தியின் தேவையை உணர்ந்தும் புனிதராம் செபஸ்தியாரின் பெயர் கொண்ட ஆலயத்தை அமைத்து வழிபட்டு வந்தனர். தமது பிற்காலச் சந்ததியினரும் இறைவழியில் நடக்க நற்சொத்தாகிய இந்த ஆலயத்தை விட்டுச்சென்றுள்ளனர்.

காலத்தின் தேவையாலும், விசுவாசத்தின் வளர்ச்சியாலும் மக்களின் தொகை பெருகிக்கொண்டேயிருந்த சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்னர் எமது ஆலயக் கட்டிடத்தின், முகபகுதியும் ஆலய நடுப்பகுதியும் மிக மோசமாக பழுதடைந்திருந்தன. இதனைக் கண்ணுற்ற மக்கள் ஆலயத்தின்மீது கொண்ட அளவற்ற கரிசனையினாலும், இறைவனின் வழிப்படுத்துதலினாலும் 1965ம் ஆண்டு ஆலயத்தின் முகப்புப் பகுதியினையும் இதன் பின்னர் 1970ம் ஆண்டு ஆலயத்தின் பிரதான நடுப்பகுதியினையும் கட்டம் கட்டமாக ஓரளவு புனர்நிர்மாணத்துடன் நிறைவுசெய்தனர். பின்னர் நானாட்டான் பகுதிகளில் இயற்கையின் பிடியினால் ஏற்பட்ட வரட்சி, வெள்ளம் இதனால் ஏற்பட்ட சீரற்ற விவசாயச் செய்கை போன்ற காரணங்களால் நிதி திரட்ட முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களின் பொருளாதாரம் மற்றும், தொடர் புனர்நிர்மாணிப்பு வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன.

இதனைத் தொடர்ந்து மக்களின் கூட்டு முயற்சியினால் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிப்பதற்காக ஆயத்தமான காலகட்டத்திலே 1983ம் ஆண்டின் பிற்பட்ட காலப் பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மக்களின் முயற்சியைச் சீர்குலைத்தது. மக்களின் இல்லிட வாழ்வை மட்டுமல்ல எண்ணங்களையும் உடல், பொருள் அனைத்தையும் இடப்பெயர்வு எனும் சதி மாற்றமடையச் செய்தது. இதன் விளைவாக வேலைகளை தொடர முடியாத நிலையும் சேர்த்துவைக்கப்பட்ட பொருந்தொகையான பொருட்களையும் (கல், மணல், சீமெந்து, மரம், கம்பி, ஓடுகள்) இவ்விடப்பெயர்வு இழக்கச் செய்தது.

பின்னராக 1993ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்பட்ட சாதாரண நிலைகளின் நிமித்தம் மீள்குடியேறிய மக்கள் சுமார் 2003 ஆண்டு வரையான 20 வருட காலப்பகுதி வரையும் அப்பழைய ஆலயத்திலேயே வழிபாடுகளிலும், திருப்பலிகளிலும் பங்குபற்றி வந்தனர்.

2003.05.24 அன்று ஆலய மக்களின் முழு முயற்சியுடன், மறைமாவட்ட ஆயர் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிப்படுத்தலின்கீழ் அன்றைய பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி. செபஸ்தியான் குரூஸ் அவர்களின் தலைமையில் திருப்பலியை அடுத்து புதிய குருசு வடிவமுடைய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்கென அமைக்கப்பட்ட கட்டட நிர்மாணக்குழுவினரின் அயராத முயற்சியுடனும் எமது ஆலயத்திற்குட்பட்ட மக்களின் நிதிப் பங்களிப்புடனும், சிரமதான பங்களிப்புசார் உடல் உழைப்புகள் மற்றும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எமது ஊர்சார் மற்றும் ஏனையோரின் நிதியுதவியுடனும் கட்டிட வேலைகள் துரிதகதியில் நடைபெற்றன. மதிப்பிற்குரிய மன்னார் ஆயர் அவர்களின் நிதி மற்றும் ஆலோசனை உதவிகளுடனும் மக்களின் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு மூலம் கிடைத்த பணத்தின் உதவியுடனும் (ஓரிரு வருடங்கள் வேலைகள் தாமதித்தாலும்) ஆலயக் கட்டுமானப் பணிகள் நிறைவுக்கு வந்தன. கூட்டு முயற்சிகளும், அயராத உழைப்புகளும் ஓயாத வழிகாட்டல்களும் அனைத்திற்கும் மேலாக இறைவனின் அருட்துணையும் சேர்ந்து 2007ம் ஆண்டு இறுதிப்பகுதியில் ஆலய வேலைகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டன.

2008ம் ஆண்டு இந்த ஆலயத்தைத் திறந்து புனிதப்படுத்த எடுக்கப்பட்ட முடிவுகளின் நிமித்தம் 15.01.2008 அன்று மாலை 4.30 மணியளவில் புதிதாக புனர்நிர்மாணம் பெற்ற டோம் மற்றும் குருசு வடிவைக் கொண்டமைந்த திருப்பீடத்தைக்கொண்ட ஆலயம் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையினால் புனிதம் செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. இறைபிரசன்னம் நிறைந்த புதிய ஆலயத்தில் ஆயர் தலைமையில் மன்னார் குருமுதல்வர் உட்பட அருட்பணியாளர்களான ஜெயசீலன் (பங்குத்தந்தை - நானாட்டான்) டக்ளஸ் (பங்குத் தந்தை - அளவக்கை) டெஸ்மன் குலாஸ் (பங்குத்தந்தை - கற்கடந்த குளம்) நோபேட் ஆகியோர் அடங்கலாக முதல் கல்வாரிப்பலி புதிய பீடத்தில் நிறைவேற்றப்பட்டது.

*"இறைவா வேறு இடத்தில் நூறாண்டுகள் வாழ்வதைவிட உமது இல்லமாக நீர் உறையும் ஆலயத்தில் ஒரு நொடிப்பொழுது அமருவதே மேன்மையானது"*

*யே.பி. அவ்ரனிதாஸ் - சூரியகட்டைக்காடு.*

# உலகத் திருச்சபைச் செய்திகள்

## உலகாயுதப் பொருட்கள்மீது மட்டுக்கு மீறிய அன்பு செலுத்தாமல் ஏழைகளுக்குத் தர்மம் கொடுங்கள்!

### - திருத்தந்தையின் தவக்காலச் செய்தி -

உலகாயுதப் பொருட்கள்மீது மட்டுக்கு மீறிய அன்பு செலுத்தாமல் ஏழைகளுக்குத் தர்மம் கொடுக்குமாறு திருத்தந்தை 16ம் பெனடிக்ற் உலகக் கத்தோலிக்கருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பெப்ரவரி ஆறாந் திகதி புதன்கிழமை தொடங்கிய தவக்காலத்திற்கான திருத்தந்தையின் செய்தியில் ஏழைகளுக்கு உதவி செய்வதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். *"கிறிஸ்து உங்களுக்காக ஏழையானார்"* (2 கொரி 8.9) என்ற தலைப்பிலான அச்செய்தி, கிறிஸ்துவின் உயிர்ப்பை நோக்கிய இத்தவக்காலம் தபசின் காலம், அத்தோடு இக்காலத்தில் செபம் நோன்பு ஆகியவற்றைச் செய்யவும் அழைப்பு விடுகின்றது என்று கூறுகிறது. தவக்காலம் ஏழைகளுக்கு உதவி செய்வதற்கு ஏற்ற காலம், கிறிஸ்தவர்கள் கடவுளது மகிமைக்காக மட்டுமே தர்மம் செய்யும் எண்ணத்தைக் கொண்டிருக்க வேண்டும். இக்காலம் கடவுளின் இரக்கத்தை மீண்டும் கண்டுணர நம்மைத் தூண்டுகிறது, அதனால் நம் சகோதர சகோதரிகள்மீது மிகுந்த கருணையுள்ளவர்களாக மாறுகிறோம்.

நாம் கொண்டுள்ள பொருட்களுக்கு நாம் சொந்தக்காரர்கள் அல்ல, மாறாக அவற்றை நிர்வகிப்பவர்கள் என்பதையும் அச்செய்தியில் நினைவுபடுத்தும் திருத்தந்தை தர்மம் செய்வது தேவையில் இருப்போருக்குச் சிறப்பான விதத்தில் உதவுவதாகும் என்றும், உலகப் பொருட்களின் பற்றுகளினின்று விடுபட்டு சுய மறுப்பைப் பயிற்சி செய்வதற்கு இது ஏற்றது என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

*நீ தர்மம் செய்யும்போது உனது வலது கை செய்வது இடது கைக்குத் தெரியக்கூடாது* என்ற மத்தேயு நற்செய்தி வார்த்தைகளையும் மேற்கோள் காட்டிய அவர், தர்மம் செய்வது என்பது ஒருவர் தன்னிடமுள்ள பொருட்களைப் பகிர்ந்துகொள்வது என்று சொல்வதைவிட மனிதகுல மீட்புக்காகச் சிலுவையில் இறந்த இயேசுவின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி பிறரிடம் அன்புகாட்டி பிறரன்புச் செயல்களைச் செய்வதாகும் என்றார். 40 நாட்களைக் கொண்ட தவக்காலம், கிறிஸ்து நற்கருணையை ஏற்படுத்திய புனித வியாழன், மற்றும் அவர் சிலுவையில் அறையுண்டு மரித்த புனித வெள்ளியை நினைவுகூர்ந்து அவரின் உயிர்ப்பைக் கொண்டாடுவதோடு



நிறைவுபெறுகின்றது.

திருத்தந்தையின் இச்செய்தியை 'கோர் ஊனும்' (ஓரே மனம்) என்ற திருப்பீட பிறரன்பு அவையின் தலைவர் கர்தினால் பவுல் யோசேப் கோர்தெஸ் தலைமையிலான குழு நிருபர் கூட்டத்தில் வெளியிட்டது.



### ஈராக் திருச்சபைக்கு நன்கொடைகள்

ஈராக் திருச்சபைக்கு நன்கொடைகள் வழங்கப்படுவதும் தோழமையுணர்வு காட்டப்படுவது மட்டும் போதாது, மாறாக அத்திருச்சபை தனது அமைப்புமுறையை காலத்திற்கேற்ப மாற்றி மேய்ப்புப்பணித் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று அந்நாட்டுப் பேராயர் ஒருவர் கூறினார்.

ஜேர்மனியின் Aid to the Church in Need கத்தோலிக்கப் பிறரன்பு அமைப்பின் அழைப்பில் நேரில் அங்கு சென்று ஈராக் கிறிஸ்தவர்கள் நிலைமை பற்றி விளக்கிய கிர்குக் கல்தேய ரீதி பேராயர், ஈராக் திருச்சபை முதலில் குர்த் அரசுடன் பயமின்றி பேச்சுவார்த்தை நடத்தி கிறிஸ்தவர்களின் நிலைப்பாட்டை உறுதிசெய்ய வேண்டும் என்றார். பாக்தாத், மொசுல், கிர்குக் ஆகிய இடங்களில் கிறிஸ்தவர்கள் குறிவைத்துத் தாக்கப்படுவதால் ஏறத்தாழ பாதிக் கிறிஸ்தவர்கள் அண்டை நாடுகளில் அகதிகளாக அடைக்கலம் தேடியுள்ளனர். மற்றவர்களும் தொடர்ந்து வெளியேறி வருகின்றனர் என்றார் அவர்.

முதலில் இக்கிறிஸ்தவர்கள் பாதுகாப்பான வடபகுதியில் மீண்டும் குடியேற உதவி செய்யப்பட வேண்டும், ஈராக்கின் குர்த் அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி இவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து, வேலைவாய்ப்பை உருவாக்கும் நீண்டகாலத் திட்டங்களை வகுக்க வேண்டும் என்றார் பேராயர்.

## இயேசு சபையின் புதிய அதிபராக அடோல்போ நிக்கோலாஸ்

இயேசு சபையின் புதிய அதிபராக அருட்தந்தை அடோல்போ நிக்கோலாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஜனவரி 7ம் திகதி தொடங்கிய இயேசு சபையின் 35வது பொதுப் பேரவையில் கலந்துகொள்ளும் 226 பிரதிநிதிகள் இரண்டு வார செபம் மற்றும் கலந்தாய்வுக்குப் பின்னர், இயேசு சபையை நிறுவிய புனித லொயோலா இஞ்ஞாசியரின் 29வது வாரிசாக அருட்தந்தை அடோல்போ நிக்கோலாஸ் அவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

1936ல் ஸ்பெயினின் பலென்சியாவில் பிறந்த இவர், 1953ல் இயேசு சபையில் சேர்ந்தார். மத்ரித்தில் மெய்யியல் படிப்பை முடித்த பின்னர் ஜப்பானின் டோக்கியோவில் இறையியல் கல்வியை முடித்தார். உரோமையில் இறையியலில் உயர் கல்வியை முடித்த இவர், மனிலா மேய்ப்புப்பணி மைய இயக்குனர், ஜப்பான் இயேசு சபை மாநில அதிபர், கிழக்கு ஆசியா – ஓசியானியா இயேசு சபை அவையின் வழிநடத்துனர் எனப் பொறுப்புகளை வகித்த பின்னர் தற்சமயம் கிழக்கு தைமூர் இயேசு சபை மாநிலத்தின் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

ஸ்பெயினிலிருந்து ஜப்பானுக்கு மறை போதகராக நேராகச் சென்ற முதல் குரு அருட்தந்தை அடோல்போ நிக்கோலாஸ் கடந்த 46 ஆண்டுகளாக மறைப்பணியாளராகப் பணியாற்றி வருகிறார். இவருக்கு ஸ்பானியம், ஜப்பானியம், ஆங்கிலம், ப்ரெஞ்ச், இத்தாலியம் ஆகிய மொழிகள் தெரியும். அச்சபையின் 470 வருட வரலாற்றில் ஒரு தலைவர் நல்ல உடல் நலத்தோடு இருக்கும்போது அதிபர் பதவியை விட்டு விலகியது இதுவே முதன் முறையாகும். வத்திக்கான் வானொலி தொடக்கத்திலிருந்தே இயேசு சபையாரின்கீழ் இயங்கிவருகிறது.

## படைப்பிரிவிலும் குழந்தைத் தொழிலாளராகவும் உள்ள சிறார்களின் நிலை

உலகில் ஆயுதம் தாங்கிய சண்டை இடம் பெறும் 12க்கு மேற்பட்ட நாடுகளில் சிறார் படைப்பிரிவில் சேர்க்கப்படுவதும் அவ்விடங்களில் சிறார் பயன்படுத்தப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக ஐ.நா.பொதுச் செயலர் பான் கி மூனின் புதிய அறிக்கை கூறுகிறது.

2006 அக்டோபர் முதல் 2007 ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் இலங்கை, மியான்மார், ஆப்கானிஸ்தான், புருண்டி, மத்திய ஆபிரிக்க குடியரசு, நேபாளம், பிலிப்பைன்ஸ், சூடான், சோமாலியா, உகாண்டா, சாட் கொலம்பியா ஆகிய நாடுகளில் சிறார்கள் படைப்பிரிவில் சேர்க்கப்படுவது இடம்பெற்று வருவதாக அவ்வறிக்கை மேலும் கூறியது. ஆயுதம் தாங்கிய குழுக்கள் எல்லைகள் தாண்டிச் செல்வது தொடர்பான கவலையையும் முன் தெரிவித்தார்.

மேலும், மியான்மாரில் சிறார்களைப் படைக்கு அழைத்து வரும் தரகர்களுக்குப் பணம் கொடுக்கப்படுவதாக மனித உரிமை குழுக்கள் கூறுகின்றன. இன்னும் மியான்மாரில் சிறார் படைவீரர்கள் 70 ஆயிரம் வரை இருக்கலாம் என்றும் இக்குழுக்கள் கூறுகின்றன.

இதற்கிடையே, வேளாண்மை, உணவு விடுதிகள், தேனீர் கடைகள் போன்றவைகளில் வேலை செய்வோர் முதல் குப்பை பொறுக்குவோர் வரை இந்தியாவிலுள்ள குழந்தைத் தொழிலாளரின் எண்ணிக்கை சுமார் ஒரு கோடியே 62 இலட்சம் என்று குழந்தைத் தொழிலாளர் பற்றிய அண்மைக் கருத்தரங்கு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. இந்தியாவில் ஆறு கோடி குழந்தைகள் படிக்கவும் இல்லை, வேலைக்குச் செல்லவும் இல்லை என்று பெங்களூரில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேராசிரியர் அப்துல் அசீஸ் தெரிவித்தார்.

தாழ்த்தப்பட்ட, பழங்குடி இனம் மற்றும் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த குழந்தைகள்தான் அதிகமாகக் குழந்தைத் தொழிலாளராகவுள்ளனர், இந்தியாவில் இலவசக் கல்வி வழங்கப்பட்டாலும் ஏழைப் பெற்றோரின் குடும்ப நிலையே இதற்குக் காரணம் என்று அசீஸ் அறிவித்தார்.

## மதம் மாற உரிமை உள்ளது

### – அரபு நாடுகளின் ஆயர்கள் மத்தியில் திருத்தந்தை -

ஒவ்வொருவரும் தங்களது விசுவாசத்தைப் பொதுப்படையாகக் கடைப்பிடிப்பதற்கும் அவர்கள் விரும்பினால் பிற மதங்களுக்கு மாறுவதற்கும் உரிமை உள்ளது என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கூறியுள்ளார்

அரபு நாடுகளின் இலத்தீன் ரீதி ஆயர்கள் பேரவையின் உறுப்பினர்களைத் திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, மத்திய கிழக்கு பகுதியில் இடம்பெறும் தொடர் வன்முறைகளால் கிறிஸ்தவர்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டால் அப்பகுதி தொல் பொருள் ஆராய்ச்சிப் பகுதியாகவே மாறிவிடும் அபாயம் இருப்பதாகக் கவலை தெரிவித்தார். அப்பகுதி ஆயர்கள் மேய்ப்புப்பணியில் சவால்களை எதிர்நோக்குவது பற்றியும் குறிப்பிட்ட அவர், கடவுள் தம்மை நாடி வருவோரை ஒருநாளும் கைவிட மாட்டார் என்றுரைத்து அவர்களுடன் தமக்குடனான தன் ஒருமைப்பாட்டுணர்வையும் தெரிவித்தார்.

அரபு உலகிலுள்ள பழம் பெருமை மிக்க பிற மதங்களுடன் குறிப்பாக முஸ்லீம்கள் மற்றும் யூதர்களுடன் உரையாடல் அவசியம் என்றும் மனித மாண்பு, சம உரிமைகள், பொறுப்புகள், தேவையில் இருப்போர்மீது அக்கறை ஆகியவை குறித்த ஆயர்களின் பங்கையும் அவர் சுட்டிக் காட்டினார்.

## ஈராக்கில் ஆலயங்கள்மீது குண்டு வீச்சுத் தாக்குதல்

ஈராக்கின் வட பகுதியிலுள்ள கிர்குக நகரில் மூன்று கிறிஸ்தவ ஆலயங்கள் குண்டு வீசித் தாக்கப்பட்டுள்ளன. கடந்த 6ம் திகதி ஞாயிறன்று பாக்தாத்திலும் மொசுலிலும் கிறிஸ்தவ நிறுவனங்களும் கிறிஸ்தவ ஆலயங்களும் தாக்கப்பட்டன.

இது குறித்து அந்நாட்டிற்கான திருப்பீடத் தூதுவர் பேராயர் பிரான்சிஸ் சுலிக் காட் ஈராக் பிரதமர் நூரி அல் மலிக்கியைச் ,சந்தித்துப் பேசியபோது அவ்வன்முறையை நடத்தியவர்கள் நீதி விசாரணைக்கு உட்படுத்தப் படுவார்கள் என்றும் கிறிஸ்தவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் கூறினார்.

அத்தோடு திருத்தந்தை 16ம் பெனடிக்ற் ஈராக்கிற்குத் திருப்பயணம் மேற்கொள்ள வேண்டுமென்று பிரதமர் அழைப்பு விடுத்ததாக அரசுப் பேச்சாளர் அலி அல் தபாக் கூறினார். ஈராக் பிரதமர் கிறிஸ்தவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்படும் என்று கூறியிருந்தும் கிர்குக் பகுதியில் மூன்று ஆலயங்கள் தாக்கப்பட்டுள்ளன. இன்னும் கிர்குக் பகுதியில் ஆலயங்கள் தாக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

ஈராக்கில் சண்டை தொடங்கியதற்குப் பின்னர் பல ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் வெளியேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மனித உறுப்புகள் விற்பனையைக் கண்டிக்கும் பிலிப்பைன்ஸ் ஆயர் பேரவை

மனித உறுப்புகள் விற்பனைக்கு விடப்படுவதும் வியாபாரம் செய்யப்படுவதும் தன்னிலே ஒழுக்கநெறிப்படி ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. மேலும் இச்செயல் மனித மாண்புக்கும் தனித்துவத்துக்கும் மனிதனின் முக்கிய பண்புக்கும் எதிரானது என்று பிலிப்பைன்ஸ் ஆயர் பேரவை குறை கூறியுள்ளது.

மனிதன் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டவன் , என்பதால் மனித உடல் வியாபாரப் பொருளாகப் பயன்படுத்தப்படக் கூடாது என்றுரைத்தார் பிலிப்பைன்ஸ் ஆயர் பேரவையின் நன்னெறி ஆணையத் தலைவர் ஆயர் கோசே ஒலிவேரோஸ். உறுப்பு மாற்றங்கள் வாழ்வின் இறுதி நிலையை எட்டும் நோயாளிகளுக்குப் புதிய நம்பிக்கைகளைக் கொடுத்தாலும் மனித உறுப்புகள் வியாபாரம் செய்யப்படுவது, குறிப்பாக ஏழைகளின் பொருளாதாரத்துக்காக விற்பனை செய்யப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்றும் ஆயர் கூறினார். இறந்த பின்னர் உடல் தானம் செய்ய விரும்புவோரை தான் ஊக்குவிப்பதாக உரைத்த அவர், உறுப்பு வியாபாரத்தைக் கண்டிப்பதாகக் கூறினார்.

சிறுநீரகம், கணையம் உட்பட மனித உறுப்புகளைத் திருடி விற்பனை செய்வது ஆசியாவிலேயே அதிகம் இடம்பெறுகிறது.

## குழந்தைகள் இறப்புவீதம் அதிகரிப்புக் குறித்து யு,னிசெப் நிறுவனம்

உலகில் ஒவ்வொரு நாளும் 5 வயதுக்குட்பட்ட 26 ஆயிரம் குழந்தைகள் உயிரிழந்து வருவதாக யூனிசெப் நிறுவன அறிக்கை கூறுகின்றது. இதற்குத் தொற்று நோய், வயிற்றுப்போக்கு போன்றவைகளை முக்கிய காரணங்களாகக் காட்டும் ஐ.நா.வின் குழந்தைகளுக்கான யூனிசெப் நிறுவனம், உலகில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புகளில் 50 விழுக்காடு போதிய உணவின்மையால் இடம்பெறுகிறது எனவும் தெரிவிக்கிறது.

உலகில் நான்கிற்கு ஒரு குழந்தை போதிய எடையின்றி இருப்பதாகவும் 88 விழுக்காட்டு குழந்தைகளின் வயிற்றுப்போக்கு நோய்க்குச் சுத்த குடிநீர் இன்மையே காரணம் எனவும் யூனிசெப் நிறுவனம் அறிவித்தது. பிறந்து ஒரே மாதத்தில் இறக்கும் 40 இலட்சம் குழந்தைகளுள் நான்கில் ஒரு பகுதி இந்தியர்கள் என்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பில் 20 விழுக்காட்டுக்குமேல் இந்தியாவில் இடம் பெறுகின்றது என்றும் *"உலகக் குழந்தைகள் நிலை 2008"* என்ற தலைப்பிலான யூனிசெப் நிறுவன அறிக்கை தெரிவிக்கிறது.

## ஒரிசா கிறிஸ்தவர்கள் சார்பாக அமைதி ஊர்வலம்

ஒரிசாவில் கிறிஸ்து பிறப்புக் காலத்தில் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட கிறிஸ்தவர்களோடு ஒருமைப்பாட்டை தெரிவிக்கும் விதமாக அந்தமான் நிகோபார் தீவின் கிறிஸ்தவர்கள் அமைதி ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இவ்வூர்வலத்தில் கலந்துகொண்டோர் ஒரிசா கிறிஸ்தவர்கள் சார்பாக மனு ஒன்றையும் துணை ஆளுனர் போபிந்து சிங்கிடம் சமர்ப்பித்தனர். ஏற்கனவே போர்ட் பிளேர் ஆயர் அலெக்சியோ தாஸ் நேவெஸ் டயஸ் இந்திய குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டீலைச் சந்தித்து ஒரிசா கிறிஸ்தவர்கள் சார்பாக விண்ணப்பம் ஒன்றையும் வழங்கியுள்ளார்.

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## அருளைப் பொழிவாய் இந்த அவனி வாழ்ந்திட

கொட்டும் பனியிலும் கொடிய வெயிலிலும்
கூடவே இருந்த அன்னையே – எங்கள்
உற்ற உறவுகள் ஊரை இழந்துமே
ஊமையானாரே அன்னையே.

தங்கும் இடமின்றி தாபரிக்கும் உறவின்றி
தவிக்கும் உறவுகள் தெரியுதா? – உன்
பெயரைச் சொல்லியே பெரும்துயர் கொண்டுமே
பேதலித்தழும் குரல் கேட்குதா?

உண்ண உணவின்றி உடுக்கத் துணியின்றி
உறங்க இடமின்றி அலையுதே – உறவு
உன்னை எண்ணியே இன்னும் உணர்வுடன்
வாழ நினைக்குதே மானிடம்!

வல்லமை கொண்ட வடமுனை மாதாவே
வாழ்வினில் ஒளி தந்து எமை வாழவைப்பாயே
அவல ஒலி நீங்கி, அன்பு ஒளி பெருகி
அருளைப் பொழிவாய் இந்த அவனி வாழ்ந்திட!

## அடியோடு அறியாமை அழிய வேண்டும்

ஆர்ப்பரிக்கும் இந்தப் போர் முரசு
அலறல் ஒலி ஓயுமோ – எங்கள்
அப்பனும் பிள்ளையும் அன்புருவாகவே
வாழ்ந்திடும் காலம் வருமோ?

சூறாவளிகள் என்று ஓயும்? - எங்கள்
சுதந்திரக் காற்று என்று தீண்டும்?
மாதாவே உந்தன் கிருபையை
இந்த மாநிலம் ஒன்றே நன்கறியும்.

அழுகுரல் ஓய வேண்டுமே – எங்கள்
ஆற்றாமை அழிய வேண்டுமே
அன்பும் அறிவும் ஓங்க வேண்டுமே – எங்கள்
உலகு அன்புருவாய் மாற வேண்டுமே

வேத நெறிகள் வாழ வேண்டும். - இங்கு
வேண்டாத செயல்கள் வீழ வேண்டும்
ஆற்றலுறு இனம் உருவாக வேண்டும் - இங்கு
அடியோடு அறியாமை அழிய வேண்டும்.

*பி. ஜனனி, வங்காலை*

### தொடர் கட்டுரை – அங்கம் 58

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்



### 19. பேசாலைப் பாரம்பரிய உடக்காலான திருப்பாடுகளின் காட்சி

- ச. அந்தோனி மிராண்டா, பேசாலை

### நடத்துனர்கள், இயக்குபவர்கள்

பசாம் புத்தகம், கையேட்டுப் பிரதி, ஊதுகுழலுடன் நடத்துனர் ஒருவரும், இவருக்கு உதவியாக சிலரும் எப்போதும் ஆயத்த நிலையில் இருப்பர். ஒவ்வொரு உடக்கையும், சுமப்பதற்கு ஒருவரும், கைக்கம்பிகளுக்கு இருவருமாக மூவர் செயற்படுவர்.

பாரமான உடக்குகள் (உதாரணமாக, சிலுவை சுமத்தப்பட்ட இயேசுவின் உடக்கு) வைர மரச்சட்டத்திலான 'அச்சு' ஒன்றில் பொருத்தப்பட்டிருக்கும். இப்பாரமான அச்சை 6 - 8 பேர் வரை தோளில் சுமந்து செல்வர். எனவே இயேசு சிலுவை சுமந்து செல்லும்போது அல்லது சிலுவையில் அறையப்படும்போது தோன்றக்கூடிய இயேசு, மரியாள், பத்தியுள்ள ஸ்திரிகள், வெரோணிக்கம்மாள், சீரோன் சிமியோன், பரிசேயர், யூதர் கூட்டம், போர் வீரர்கள் ஆகியோரது உடக்குகளைச் சுமப்பதற்கும் கை, தலை கண் ஆகிய உறுப்புகளை அசைத்துப் பாவனை பண்ணுவதற்கும், ஏறத்தாழ நூற்றுக்கும் அதிகமானோர் கீழே நின்று தொழிற்படுவார்கள்.

### உடையலங்காரம்

எந்தவொரு பாத்திரமும் சிறப்புற வேண்டுமென்றால், மக்களால் பாராட்டப்பட வேண்டுமானால், நடிப்புத் திறமையுடன் பாத்திரம் பொருத்த ஆடை அணிந்திருக்கவேண்டும். எனவேதான் 'ஆள் பாதி ஆடை பாதி' என்றார்கள்.

இயேசு யூத குலத்தவர். வாழ்ந்த இடம் பலஸ்தீனா, போதித்த இடங்கள் யூதேயா, சமாரியா, கலிலேயா. சிறுவனாக நசரேத்து ஊரில் சீவித்தார். அவருடைய தாயார், இனபந்துக்கள் யாவரும் யூத குலத்தவர்கள். அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றவர்கள் யூதர்கள். குற்றம் சாட்டியவர்கள் யூத குருக்கள். தீர்ப்பிட்டவன் றோமானிய தேசாதிபதி. பரிகாசம் செய்தவர் ஏரோதரசன். போர்வீரர்கள் உரோமையர்.

எனவே ஒவ்வொரு பாத்திரமும் அக்காலத்தில் அவரவர் அணிந்திருந்த ஆடைகளைப் போலவே இவ்வுடக்குகள் அணிவிக்கப்பட்டன. நீண்ட அங்கிகள், மேலாடைகள், இடைக்கச்சுக்கள் முக்காடு துணி, அரச அணிகள், கிரீடங்கள், உரோமானிய போர்வீரர் கவசம் முதலிய அணி வகைகள் பயன்படுத்தப்பட்டன.

### காட்சியமைப்பு (Stage – Setting)

ஒவ்வொரு வியாகுல பிரசங்க நிகழ்வுக்கும் அதற்கேற்ற காட்சி அமைப்பு இடம்பெறும். இவ்வமைப்புக்கு வேண்டிய பொருட்கள் யாவும் முன்கூட்டியே திட்டமிட்டு ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கும். நீண்ட காலமாகத் திருப்பாடுகளின் காட்சியை எமது மக்கள் காண்பித்து வருவதால் பங்காற்றும் அநேகருக்கு ஒவ்வொரு காட்சியையும் எவ்வாறு அமைக்கவேண்டும் என்றும், அக்காட்சிகளுக்கு தேவையான பொருட்கள் எவையென்றும் நன்றாகத் தெரியும். எனவே ஒரு காட்சி முடிவுற்றதும், அடுத்த காட்சியை அமைப்பதற்கு தாமாகவே செயற்படுவார்கள்.

ஆசன சாலை, கெத்சமெனி பூங்கா, பெரியகுரு, பிலாத்து, ஏரோது ஆகியோரின் அரண்மனைகள், இயேசு கசையடிக்கப்பட்ட முற்றவெளி, சிலுவை சுமந்து சென்ற கசந்த வீதி, கல்வாரி மலை, அடக்கம் செய்யப்பட்ட கல்லறை, மரிய மதலேனாவுக்கு உயிர்த்தபின் காட்சி அளித்த தோட்டம், யோர்தான் நதிக்கரை, எம்மாவுசுக்கு செல்லும் வழி, இயேசு திருமுழுக்கு பெற்றதும் வான மண்டலம் திறக்கப்பட்டு பரிசுத்த ஆவி புறா வடிவத்தில் தோன்றியமை, இயேசு பசாசினால் சோதிக்கப்பட்டபோது வனாந்திர, யெருசலேம், தேவாலய சிகரம், மலை உச்சி ஆகிய காட்சிகள் இவற்றுள் சிலவாகும். இவ்வாறான காட்சிகளை இயக்குபவர்கள் துரிதகதியில் ஒழுங்குசெய்வார்கள்.

### ஆன்மீக நலன்கள்

திருப்பாடுகளின் காட்சிக்கான வேலைகள் ஆரம்பமானதும் இயேசுவின் உடக்குகளை வெவ்வேறு காட்சிகளுக்குச் சுமந்து செல்லும் நபர்களும் (புதுமைகள் செய்யும்போது, பூங்காவனத்திற்குச் செல்லும்போது, பிடிபடும்போது, சிலுவை சுமந்து செல்லும்போது) முக்கிய பங்காற்றும் மேஸ்திரிமார், உதவியாளர்கள் அனைவரும் சிறு பரித்தியாகங்கள் மூலம் தங்களைத் தூய்மையாக்கிக்கொள்வார்கள்.

உதாரணமாக, மதுபானம் அருந்துவதினின்றும், மாமிசம் புசிப்பதினின்றும், சண்டை சச்சரவுகளினின்றும் தவிர்த்துக்கொள்வார்கள். திருப்பாடுகளின் காட்சி ஆரம்பமாவதற்கு முந்திய நாளன்று இந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் சகலரும், தியான வழிபாட்டில் பங்கெடுத்து, ஒப்புரவு அருட்சாதனம் பெற்று அடுத்தநாள் திருவிருந்தருந்துவர். மிகக் கஷ்டமான அரங்கமைத்தல், உடக்குகளைச் சுமத்தல், இயக்குதல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களும், குளிர்பானம் தேனீரோடு களைப்பாற்றிக்கொள்வர். இவ்வாறு செப தப முயற்சிகளால் இறைவனோடும் பிறரோடும் ஒப்புரவாகி ஆன்ம நலம் பெறுவர். இக்காட்சியைக் காணவரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களில் ஏராளமானோரும் மனமாற்றம் பெற்று நலமடைந்து உள்ளதை நாம் அறிவோம்.

*(தொடரும்...)*

# சிறுகதை

## சமத்துவ ஊக்குனர்கள்???

**க. ஆர். எஸ். காந்தன்**

கோடை வெயிலில் பழைய சைக்கிளில் குன்றும் குழியுமான பாதையால் கஷ்டப்பட்டு வந்து சேர்ந்த டெனிங்ரனுக்கு "மாமாச் சுவாமி சாப்பிட்டுவிட்டு இப்பதான் நித்திரைகொள்ளப் போனவர்" என்று சமைக்கிற அப்பா கூறிய செய்தி ஏமாற்றமாக இருந்தது. "அவரைக் குழப்பக்கூடாது, களைப்பாய் படுக்கப் போயிருக்கக்கூடும்" என்று எண்ணி அப்பா கொடுத்த தேநீரை அருந்திவிட்டு வெளியில் கிடந்த வாங்கில் மனச்சஞ்சலத்தோடு அமர்ந்து கொண்டான். தன் சாதி மாறிய காதலை மாமாவை ஏற்கவைக்க எப்படியெல்லாம் கதைக்கவேண்டுமென்று பல தடவை மனஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தான்.

நித்திரை முடித்துக்கொண்டு சுவாமி வெளியே வந்தபோது டெனிங்ரனுக்கு மகிழ்ச்சி. பல்கலைக்கழக வாழ்வு பற்றிய விசாரிப்புகள் முடிந்ததும். சாதிராசாச் சுவாமி, "என்ன டெனிங்ரன் ஏதோ மனக்கலவரத்தில் இருக்கிறமாதிரி இருக்கு. என்ன விசயம்?" டெனிங்ரன் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்ததும் இந்த நேரத்துக்காகவே தான் இதுவரை காத்திருந்ததுபோல் பொருமத் தொடங்கினார் சாதிராசாச் சுவாமி. தான் மாமாவை ஏற்கவைக்க எடுத்த முயற்சி எல்லாம் தோல்வியில் முடிந்ததால் ஏமாற்றமும் வேதனையும் அவனை ஆட்கொண்டன. நீண்ட தூரம் பழைய சைக்கிளில் ஓடிவந்த களை மறுபுறம். "இந்த மாமா தான் ஒரு சுவாமி என்றுகூட யோசிக்காமல் மனதில் தோன்றியதையெல்லாம் வார்த்தையில் கொட்டுகிறாரே" என்று சிந்தித்தான்.

"மாமா, நீங்கள் சீறிப்பாயிறது ஏன் என்று எனக்குத் தெரியும். நான் சாளினியைக் காதலிக்கிறதில என்ன பிழை. அவள் சாதி குறைஞ்சவள். அவளை நான் கலியாணம் செய்தால் உங்களுக்கு சமுதாயத்தில அவமானம் என்றுதானே துள்ளுறியள். காதலிச்ச பிள்ளையைக் கைவிடச் சொல்லுறியள். அவளுக்கெண்டு ஒரு இதயமில்லையா? உணர்வுகள் இல்லையா? காதலிச்சுப்போட்டுச் சாதி தெரிஞ்சவுடனே ஏமாத்திறது உங்களுக்குப் பாவமாய் தெரியேலையா? குருமடத்திலை உங்களுக்கு என்ன பயிற்சி தருகினம். சாதி பார்த்துச் சமுதாயத்தை அழிக்கச் சொல்லியா? சமத்துவம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கச் சொல்லியா? மாமா"

நீதி உணர்வு பொங்கி வழிய கத்தித் தீர்த்தான். அவனது வார்த்தைகள் சற்றும் எதிர்பாராத ஈட்டியாய்க் குத்த, "ஓ நீ இப்ப வளர்ந்து வாய் காட்டத் தொடங்கிவிட்டாய். வாயை மூடு. யோசிச்சுக் கதை. நீ இப்ப தத்துவம்தான் கதைப்பாய், கலியாணம் முடிச்சாப்பிறகு எங்கடை ஆக்கள் உன்னை ஓரங்கட்டேக்கதான் உனக்கு சாதிபற்றி விளங்கும்" அவன் காதலை கைவிட ஒரு யுக்தியாக இந்தக் குண்டைத் தூக்கிப்போட்டார் சாதிராசாக் சுவாமி.

"பரவாயில்லை மாமா, ஒரு ஆளைக் காதலிச்சு அவளுக்காகக் கஷ்டப்பட்டால் எனக்கு அதிலை ஒரு சந்தோசமிருக்கும். உண்மையாய்க் காதலிச்சவளை ஏமாற்றிப்போட்டு, மனச்சாட்சியைச் சாகடிச்சு வாழுறதைவிட அவளுக்காகக் கஷ்டப்படுறது மேலானது என்று நினைக்கிறன். நீங்கள் என்ரை கலியாணப் பூசை வைப்பியள் என்று கனவு கண்டனான். ஆனால் நீங்கள் ஊருக்குப் பயந்து வரமாட்டியள் என்று விளங்குது. வெள்ளை அங்கி போட்டுக்கொண்டு நீங்கள் முன்மாதிரியாய் வாழ உங்களுக்காக மன்றாடுவன். போட்டு வாறன்" என்று வேகமாக வெளியே போனான் டெனிங்ரன்.

டெனிங்கரன் வளர்ந்து இப்ப நியாயம் கதைக்கிறான் என்பது மனதில் குத்தினாலும் அவனை மறுத்துப்பேச சொந்த நியாயம் ஏதும் இருக்கவில்லை.

சாதிராசாச் சுவாமி சமுதாயத்தில நல்ல சுவாமியென்று பெயரெடுத்தவர். இவரின் ஆளுமையின் இரகசியப் புற்றுநோயை தெரிந்த ஒரு ஆள் டெனிங்ரனின் தந்தை மங்கள ராசாதான். மங்களராசா ஏழை விவசாயிதான். தன் சகோதரங்களுக்காகவே உழைத்து ஓடாய்ப் போனவர். தன் சகோதரங்களின் நன்றி இன்மைகளை எல்லாம் சகித்துக்கொண்டு அவர்கள் வாழ்வை உயர்த்தியவர். தன் பாடசாலைக் கல்வியைக் காற்றில் பறக்கவிட்டாலும் கற்றலை நிறுத்திக் கொள்ளவில்லை. தன் வறுமையின் மத்தியிலும் எவரது ஆதரவுமின்றி தன் குறைந்த சம்பள உத்தியோகத்தில் தன் பிள்ளைகளைப் படிக்க வைத்துப் பட்டதாரிகளாக்கினார். அப்பாவை கஷ்டப்படவிடாமல், கலங்கவிடாமல் வடிவாய்ப் பார்க்க வேண்டும் என்று அவரை அன்போடும் நன்றியோடும் பராமரிக்கின்றனர் பிள்ளைகள்.

டெனிங்ரன் தன் காதல் பற்றி அப்பாவிடம் சொன்னபோது "பிள்ளை விரும்பிவிட்டான். ஒரு நல்ல குணமான பிள்ளையைத்தான் தெரிந்தெடுத்திருப்பான். என்ர மகனை நம்பி, தன் வாழ்வை ஒப்புக்கொடுத்த அந்தப் பெண் பிள்ளையின் மனத்தை உடைக்கக்கூடாது. அவர்களின் பெற்றோர்களைக் கலங்க விடக்கூடாது. என்ன கஷ்டப்பட்டு அந்தப் பிள்ளையைப் படிக்க வைச்சாங்களோ?" என்று புரிந்துணர்வு நிறைந்த இதயத்தோடு எண்ணிப் பார்த்தார்.

"தம்பி நான் உனக்கு என்ன சொல்லுறது. நீ படிச்ச பிள்ளை, பொறுப்புள்ள பிள்ளை, சரியான பிள்ளையைத்தான் காதலிச்சிருப்பாய். தங்கச்சியவேன்ரை வாழ்க்கையைப் பாதிக்குமோ என்ற கவலைதான். மற்றப்படி நீ அந்தப் பிள்ளையைக் கலியாணம் செய்யிறதுல எனக்கும், அம்மாவுக்கும் சம்மதம். மூத்த தங்கச்சிட கலியாணம் முடிஞ்சதும் நீ செய்தால் அவளுக்கு வரக்கூடிய பிரச்சினையாவது கொஞ்சம் குறையும் என்று நினைக்கிறன். எல்லாத்துக்கும் ஒரு நாளைக்குப் பிள்ளையைக் கூட்டிக்கொண்டுவந்து காட்டன்." அப்பாவின் வார்த்தை அவன் இதயத்தில் இனிக்க அப்பாவைக் கட்டி அணைத்து முத்தமிடவேணும் போலிருந்தது. அவனும் தன் பேர்சுக்குள் இருந்த சாளினியின் போட்டோவை மகிழ்சியோடு எடுத்துக் காட்டினான்.

"பிள்ளை நல்ல முகவெட்டான பிள்ளைதான். பிள்ளையையும் வீட்டுக்காரரையும் ஒரு நாளைக்கு வரச் சொல்லன்" என்று தாய் சிந்தா கூறத் தான் வானத்தில் பறந்துகொண்டிருப்பது போன்ற மகிழ்ச்சிப் பிரமையில் திழைத்தான்.

அம்மா, மூத்த தங்கச்சிக்குச் செய்து வைச்சிட்டுத்தான் நான் செய்வன். மற்றதம்மா, சாளினியின் அப்பாவும் கஷ்டப்பட்டவர். சீதனம் என்று தாறதக்கு ஒரு ஏக்கர் வயல்காணி மட்டும்தான் இருக்கு. வேற ஒன்றும் இல்லை. ஆனால் அவவுக்கும் எனக்கும் சம்பளம் வரும்தானே? நாங்கள் தங்கச்சி கரைசேர கட்டாயம் உதவி செய்வம். சாளினியைத் தன்னோடு இணைத்துக் கதைக்க ஆரம்பித்ததைக் கண்டு அம்மாவுக்கு உள்ளம் குளிர்ந்தது.

இவர்கள் உரையாடிக்கொண்டிருக்க சிஸ்ரர் அன்றி லீவிலை வந்து சேர்ந்தா. "அக்கா இவன் சாதிமாறிச் செய்யப்போறானாம் என்று என்னைச் சிஸ்ரர்மார் ஒரு நக்கலாக் கேட்கினம். எனக்குப் பெரிய வெட்கமாய் கிடக்கு. அதுகளின்ரை சபை சந்திக்கு நாங்கள் போவமோ? அதுகளை எங்கட சபை சந்தியிலை சேர்ப்போமா? இவனுக்கென்ன மூளை மாறிப்போச்சோ. கம்பசிலை உதுதானோ படிச்சவன். உங்கை கோயில் சபையிலை இருக்கிற சீர்திருத்தநாதன் தன்ரை மகன் அந்தக் கீழ்சாதிப் பெட்டையை றெஜிஸ்ரர் பண்ணிப்போட்டான் என்று என்ன விட்டிட்டா இருந்தவன். இரண்டு பேரையும் பிரிச்சு வைச்சிட்டான்தானே. நீங்களும் அப்படிச் செய்தால் என்ன? எங்களுக்குப் பெரிய வெட்கக்கேடு" என்று தாண்டவம் ஆடினா சமத்துவராணிச் சிஸ்ரர். இவர்தான் நீதிக்குழுவில் செயலாளர், புதிய சமுதாயம் படைப்போம் என்ற கருத்தில் இளைஞர்களுக்கு கருத்தமர்வு நடத்துகிற குழுவின் வளவாளர்களில் ஒருவர்.

"சரி அக்கா அவன் விரும்பிப்போட்டான். நல்ல குணமான பிள்ளை. படிப்பிலையும் கெட்டிக்காரி. இதைவிட வேற என்ன வேணும். உங்கை அவர் பாரம்பரிய நாதன் சுவாமி தன்ரை தம்பி சாதி குறைஞ்ச பிள்ளையைக் காதலிக்க அதுகளைப் பிரிச்சு வைச்சுப்போட்டுத் தங்கடை ஆட்களுக்கை ஒரு பிள்ளையை எடுத்தார். அவவின்ரை திமிரை ஊர் அறியும். அந்தத் தம்பி இப்ப என்னை உயிராய்க் காதலிச்சவளுக்கு நான் செய்த துரோகத்துக்கு கடவுளே தண்டனை தந்திட்டார் என்று சொல்லித் திரியிறானாம். அவன் இப்ப தமையன் சுவாமியைக் கண்டால் கொல்லுறன் என்று நிற்கின்றானாம்" சிந்தா அடக்கமாகச் சொல்லி முடித்தாள்.

சாதிராசாச் சுவாமி, பாரம்பரியநாதன் சுவாமி, சமத்துவராணிச் சிஸ்ரர், சீர்திருத்த நாதனை ஒரு பக்கத்திலும் தன் அன்புப் பெற்றோரை மறுபக்கத்திலும் வைத்து ஒப்பிட்டுப் பார்த்தான் டெனிங்ரன். தன் பெற்றோரின் முகத்தில் இயேசு சிரிப்பதைக் கண்டான். (யாவும் கற்பனை)

இறைவார்த்தை ஆண்டுச் சிறப்புக் கட்டுரை

# ஏன்? இறைவார்த்தையைத் தினமும் வாசிக்க வேண்டும்

வி.கிறிஸ்ரி குணராஜா
முதலியார்குளம், செட்டிகுளம்.

காரணம் இல்லாமல் காரியம் இல்லை. காரணத்தை அறிய ஏன் என்ற கேள்வி எழவேண்டும். தொடக்கத்திலே கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தார். மண்ணுலகை படைத்த கடவுள் அனைத்தையும் அதன்மேல் தோன்றச் செய்யக் காரணம் ஏன்? "மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது" (தொ.நூ 1:2) என்போமாகில் நாமும் வேதம் தெரியாத வெறும் வேதக்காரராகவே இருப்போம். எனவேதான் தினமும் (வேதத்தை) இறைவார்த்தையை வாசிக்க வேண்டும் என்று பணிக்கப்படுகின்றோம்.

வேதத்தை ஆராய்ந்து பார்த்தால் நாம் அறிவாளி ஆகலாம். அதேவேளை மறைநூல் அறிவு நம்முடைய அறிவுநிலையை பெருக்குவதற்காக மட்டுமே தேவையானது என நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. மாறாக அந்த அறிவின் மூலம் எமது அக நிலையை அழகுபடுத்தி புற நிலையில் முன்மாதிரியான அன்பிய வாழ்வை நாம் ஆழப்படுத்தலாம். அதன்மூலம் கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்திற்கு வழிசமைக்கலாம். எனவேதான் ஆவியானவரின் தூண்டுதலினால் எமது மன்னார் மறைமாவட்டம் இறைவார்த்தையை மையப்படுத்தி இவ்வாண்டினை இறைவார்த்தை ஆண்டாகப் பிரகடனப்படுத்தி இருக்கிறது.

இதனால் இவ்வாண்டு முழுவதும் இறைவார்த்தையை கற்றுக்கொடுப்பதோ அல்லது மறை அறிவில் இறைமக்களை தேர்ச்சி பெற்றவர்களாக மாற்றுவது மட்டுமல்ல திருச்சபையின் நோக்கம். வெறும் அறிவு வீணானது. அனுபவத்துடன் சேர்ந்த செயல்பாடுகள் இல்லாத எந்த அறிவும் வெறும் ஏட்டுச் சுரக்காயே. எனவே இறைவார்த்தைக்கேற்ப நமது வாழ்க்கையை மாற்றியமைக்க ஆவியானவரால் நாம் தூண்டிவிடப்படுகின்றோம். *"இவ்வாறு கடவுளின் மனிதர் தேர்ச்சிபெற்று நற்செயல் அனைத்தையும் செய்யத் தகுதிபெறுகின்றார்"* (2 தீமோ 3:17) என்பதற்கு அமைவாகத் திருச்சபையால் போதிக்கப்பட்டு வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கின்றோம். இந்தப் பயணமே இயேசுவைப்போல நாமும் தெய்வீகத் தன்மையில் மாறிக்கொண்டிருக்க நமக்கு உதவிசெய்கின்றது. இறைவனோடு தனிப்பட்ட ஒரு ஐக்கியத்தைக் கொண்டு வாழி வகுக்கின்றது. இயேசுவிடம் இருந்து கேட்டவைகளையும் அவர் தந்த அதிகாரத்தையும் பயன்படுத்திச் செயல்படுத்தும்போதுதான் தூய ஆவியின் துணையால் இயேசுவின் தந்தையாம் இறைவனின் சாயல் நம்மில் செயல்படவாய்ப்பு உண்டாகிறது.

இது இவ்வாறு இருக்க ஏன் இறைவார்த்தையை வாசிக்க வேண்டும் என்ற கேள்விக்கான சுருக்கமான பதில்கள் ஐந்தினை இறைவார்த்தையின் வெளிச்சத்தில் இருந்து சற்று ஆராய்ந்து பார்ப்போம். விதைப்பவன் உவமை பற்றிப் பல தடவை கேட்டு இருந்தாலும்கூட நாம் எங்கு விழுந்த விதை என்றாவது ஒருவிசை எண்ணிப்பார்க்க இன்று அழைக்கப்பட்டுள்ளோம். அதற்காகவே மீண்டும் இது விதைக்கப்படுகின்றது.

## முதலாவதாக

இறைவார்த்தையை நாம் படிக்கும்போதுதான் இறைவனுடைய அதி உன்னத தன்மையைக் காணமுடியும். இதுவே முதன்மையானதும் போதுமானதாகவும் இருக்கின்றது. இதைத்தான் தாவீது அரசர் திருப்பாடல் 138:2ல் *"அனைத்திற்கும் மேலாக உம் பெயரையும் உம் வாக்கையும் மேன்மையுறச் செய்துள்ளீர்"* என்று கூறுகிறார்.

எசாயா இறைவாக்கினர் 40:8ல் "நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றைக்கும் நிலைத்து இருக்கும்" என்றும் மத்தேயு 24:35ல் யேசுக்கிறீஸ்து, "விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும் என் வார்த்தைகளோ ஒழிந்து போகாது" என்கிறார். இயேசுவே அந்த வார்த்தையாகவும் இருக்கிறார் என்பதைக் கண்டுகொண்ட சீடர்களும், *"வாழ்வு தரும் வார்த்தை உம்மிடம் அன்றோ உண்டு?"* என்று பறைசாற்றுகின்றார்கள். எனவே இயேசுவை எவ்வளவு விசுவசிக்கிறோமோ அவ்வளவிற்கு இறைவார்த்தையையும் விசுவசிக்க வேண்டும் என்று இதன் மூலம் உணர்த்தப்படுகின்றோம். எனவே இன்றிலிருந்து இறைவார்த்தையைக் கிரமமாக வாசிக்க முனைவோமாக!

## இரண்டாவதாக

இறைவார்த்தையானது வல்லமை பொருந்தியது சக்திமிக்கது ஆற்றல் வாய்ந்தது என்பதை அதை வாசிக்கும்போதுதான் கண்டுகொள்ள முடிகின்றது. அது இல்லாத ஒன்றை உருவாக்கவும் (எபி 11:3) செய்கிறது. இதைச் சுருங்கக் கூறுவதாயின் இயேசு தம் சீடரை அனுப்பும்போது பேய்களை துரத்துவதற்கு சாட்டைகளையோ தடிகளையோ ஆயுதங்களையோ கொடுக்கவில்லை. நோய் நொடிகளைக் குணமாக்கக் கையில் மருந்து வகைகளையும் கொடுக்கவில்லை. மாறாக வார்த்தையையே கொடுக்கின்றார். எனவே இவ்வார்த்தையானது பரிசுத்தப்படுத்தவும் குணமாக்கவும் ஆற்றலைக் கொடுக்கின்றது. திருப்பாடல் 119:50 இன்படி *"உம் வாக்கு என் துன்பத்தில் எனக்கு ஆறுதல் அளிக்கிறது, ஏனெனில் அது எனக்கு வாழ்வளிக்கின்றது"* என்று தாவீது தன் அனுபவத்தில் இருந்து கூறுகின்றார். எனவே இறைவார்த்தையை நாம் வாசிக்க வேண்டும்.

## மூன்றாவதாக

இறைவார்த்தையைப் படிக்கும்போது வார்த்தையை உண்டவர்களைப் பற்றியும் அவர்கள் அடைந்த நன்மைகளைப் பற்றியும் அறியமுடியும். உதாரணமாக யோபு என்ற இறை மனிதனை நாம் எடுத்துக்கொள்ளலாம். *"அவர் உரைத்த ஆணையினின்று நான் விலகவில்லை அவர்தம் வாய் மொழிகளை அரும்பொருளின் மேலாகப் போற்றினேன்"* (யோபு 23:12) என்று சாட்சி பகர்ந்ததின் விளைவு முன்பு இருந்ததைவிட இரு மடங்கு ஆசீர்வாதம் பெற்ற மனிதனாக வாழ்ந்தார். எரேமியா இறைவாக்கினர் தெளிவாகக் கூறுகிறார், *"நான் உம் சொற்களைக் கண்டடைந்தேன், அவற்றை உட்கொண்டேன், உம் சொற்கள் எனக்கு மகிழ்ச்சி தந்தன. என் உள்ளத்திற்கு உவகை அளித்தன."* (எரே 15:16) என்பதுடன் அவர் அதே 19ம் வசனத்தில் எமக்குக் கூறுவது என்ன? உன் வாயில் இருந்து தீட்டானவற்றை (தீயதை) அகற்றி நாவைச் சுத்திகரித்து விலையேறப்பெற்ற இறைவனுடைய வார்த்தைகளை வைத்துவிடுவாயானால் அது யேசுவினுடைய வாயைப்போல் இருக்கும். நீ சொல்ல அது ஆகும், நீ கட்டளையிட அது நிற்கும், செழிமை ஓடிவரும். ஆகவே இறைவார்த்தைகளைப் பேச உன் நாவை பழக்குவி. அப்போது வெற்றி பெற்று நிறை வாழ்வை அனுபவிப்பாய். "... *பயனில நீக்கிப் பயனுள பேசின் நீ என் இறைவாக்கினனாக இருப்பாய்*" எரே 15:19) என்று இறைவன் சொன்னதை உண்டதால் அவர் ஒரு இறைவாக்கினரானார்.

இதைப்போல தாவீதும், "உமக்கு எதிராய் பாவம் செய்யாதவாறு உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன்" (தி.பா 119 :11). யேசு கூறுகின்றார், "மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாகக் கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர் என மறை நூலில் எழுதியிருக்கின்றதே" எனவே இதன் பின்னராவது இறைவார்த்தையை நாம் வாசிக்காமல் இருக்கலாமா?

## நான்காவதாக

இறைவார்த்தையை வாசிப்பதனால் நமக்கு ஆசீர்வாதம் கிடைக்கிறது. ஆசீர்வாதங்கள் பற்றி நாம் அடுக்கிக்கொண்டே போகலாம். இதில் திருப்பாடல் 119ல் அனேக காரியங்களைக் காணமுடியும். அதிலும் வசனம் 105 *"என் காலடிக்கு உம் வாக்கு விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே"* வசனம் 50ல் "துன்பத்தில் ஆறுதல் தந்து வாழ்வளிக்கின்றது" வசனம் 72ல் *"நீர் திருவாய் மலர்ந்த சட்டம் ஆயிரக் - கணக்கான பொன் வெள்ளிக் காசுகளைவிட எனக்கு மேலானது"* வசனம் 111 "உம் ஒழுங்குமுறைகளை என்றும் என் உரிமைச் சொத்தாகக் கொண்டுள்ளேன்" என்றும், "இருண்ட இடத்தில் ஒளிரும் விளக்கைப் போன்றது" (2பேதுது 1:19) எனவும், "எங்களது மகிழ்ச்சி நிறைவடையுமாறு உங்களுக்கு இதை எழுதுகிறோம்" (1யோ.1:4) என இருப்பதை எழுதித்தந்தார்கள். எனவே இவ்வாறான மேன்மை பொருந்திய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்வதற்கு இறைவார்த்தையை வாசிக்கப் பழகிக் கொள்ளவேண்டும்.



## ஐந்தாவதாக

வெறுமனே ஆசீர்வாதம் என்ற ஒரு பக்கத்தைமட்டும் கூறிச் செல்லாமல் இறுதியாக இறைவார்த்தையை அசட்டை செய்வதினால் ஏற்படும் கேடுகள் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று எச்சரிக்கப்படுகிறோம். அவற்றில் குறிப்பாக *"இறைகூற்றையும் சான்றுரையையும் நாடித் தேடுங்கள் என்று சொல்லாததினால் அவர்களுக்கு விடிவு காலம் வராது என்பது உறுதி. தலையைத் தாழ்த்தித் தரையை உற்றுநோக்குவார்கள். எங்கு நோக்கினும் காரிருள் கடும்துயர் மனவேதனைகளே புலப்படும். காரிருள் அவர்களை ஆட்கொள்ளும்"* (எசா 8:20,22).

எனவே அசட்டை செய்வதால் விடிவு இல்லை. இருளே இருக்கும். அடுத்து வஞ்சகமே ஏற்படும். இறைவார்த்தைகளை வாசிக்காவிட்டால் மற்றவர்கள் சொல்வதையே மனிதக் கோட்பாடுகளாகக் கற்றுக்கொள்ள நேரிடும். இதனால்தான் யேசு கூறுகின்றார், *"இவர்கள் என்னை வழிபடுவது வீண்* (மாற் 7:7) என்று.

இறைவார்த்தையை நாம் கண்டுகொள்ளாவிட்டால் துர் உபதேசங்களுக்கு மற்றவர்கள் எம்மை நடத்திச் சென்று விடுவார்கள் என்றும் எச்சரிக்கப்படுகின்றோம். ஆதலால் நாம் பிறருக்காக அல்ல எமது அறிவிற்காக வாசிக்க வேண்டும். அதை வாசிக்காவிட்டால் அழிவு வரும் என்று இயேசுவினால் மத்தேயு 7:26,27 இதன் மூலமாக இறுதியாக எச்சரிக்கப்படுகின்றோம். வசனம் 26இல் யேசு கூறுகிறார், *"நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படாத எவரும் மணல்மீது தம் வீட்டைக் கட்டிய அறிவிலிக்கு ஒப்பாவார். மழை பெய்தது, ஆறு பெருக்கெடுத்து ஓடியது, பெருங்காற்று வீசியது, அது அவ்வீட்டைத் தாக்க அது விழுந்தது, இவ்வாறு பேரழிவு நேர்ந்தது"* எனக் கூறுகிறார்.

நாம் வாழும் இந்த உலகில் அனேக தவறானஉபதேசங்களும் பிரிவினைச் சபைகளும் மலிந்து கிடக்கின்றன. நமது திருச்சபையின் போதனைகளையும் வழிகாட்டுதலையும் மற்றவரோடு ஒப்பிட்டுப் பார்க்கவும், நாம் செலுத்தும் ஆராதனையும் வழிபாடும் நமது நடவடிக்கைகளும் பிறர்மீது நாம் கொண்டுள்ள எண்ணப்பாடுகளும் சரிதானா என்று அறிந்துகொள்ளவும் இறுதி நாளில் எதுவும் தெரியாது என சாட்டுப்போக்குச் சொல்லாமல் இருக்கவும் நாம் தினமும் இறைவார்த்தையை வாசிப்போம் வாழ்வாக்குவோம். ●

# தவக்காலம் உளமாற்றத்திற்கான அழைப்பு

R. A. அமலநாதன், யாழ்ப்பாணம்

திருச்சபையின் வழிபாடுகள் ஐந்து பெரும் ஆண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பல காலங்களாக முதல் ஞாயிறு வாரத்தோடு ஆரம்பிக்கப்பட்டு கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழாவோடு நிறைவடைகிறது. திருவருகைக்காலம், கிறிஸ்து பிறப்புக்காலம், பொதுக்காலம், தவக்காலம், பாஸ்காக் காலம், மீண்டும் பொதுக்காலம் என்று திருச்சபையின் வழிபாடுகள் ஒரு ஒழுங்குமுறையில் முன்னெடுக்கப்படுவதை நாம் காண்கின்றோம்.

மீண்டும் 2008ம் ஆண்டுக்கான தவக்காலம் இறைவனின் மாபெரும் கொடையாக எமக்கு வழங்கப்பட்டுள்ளது. திருநீற்றுப் புதனோடு ஆரம்பிக்கப்பட்டு குருத்து ஞாயிறு வரையுள்ள காலத்தையும் குருத்து ஞாயிறில் இருந்து பாஸ்கா ஞாயிறுவரை உள்ள புனித வாரத்தையும் கொண்டதாக தவக்காலம் அமைகின்றது. இத்தவக்காலம் ஒப்புரவின் காலம் என்றும் மனமாற்றத்தின் காலம் என்றும் அழைக்கப்படுகிறது.

பாவத்தின் அடிமைத்தனத்தில் வாழ்ந்து மூவொரு இறைவனுக்கும் எமக்கும் இடையே உள்ள உன்னதமான உறவை நாம் இழந்து வாழ்ந்து வருகின்றோம். வானகத்தந்தைக்கும் எமக்கும் இடையே இருக்கும் அப்பா, பிள்ளைகள் என்ற புனிதமான தொடர்பு நாம் பாவத்திற்குள்ளே வாழ்ந்து வருவதனால் முறிவடைகின்றது. இறைமகன் யேசுவுக்குள் நாம் எல்லோரும் சகோதரர்கள், எம் மீட்பராம் யேசுவின் விலைமதிக்க முடியாத திருஇரத்தத்தால் மீட்கப்பட்ட நாம் அனைவரும் உடன்பிறப்புக்கள் என்பதை மறந்து எம் சகோதரர்களோடும் அயலவர்களோடும் உறவிலே முரண்பட்டு வாழ்ந்திருக்கிறோம். இறைவனுக்கும் எமக்கும் இடையே இருக்கும் உறவையும், அயலவனுக்கும் எமக்கும் இடையே இருக்கும் சகோதரத்துவத்தையும் மீண்டும் சீர்செய்வதற்கும் உறவிலே ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தவும், எல்லாவற்றையும் மறந்து சமாதானத்தோடும், ஒப்புரவோடும்கூடிய ஒரு புதிய உறவை ஏற்படுத்தவும் தவக்காலம் அழைப்பு விடுக்கிறது. இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள் (யோவேல் 2:12) எனும் இறைவார்த்தையினூடாக யோவேல் வழியாக இறைவன் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். அருள் நிறைந்தவரான, அபரிமிதமான இரக்கமுள்ளவரான நீடிய பொறுமையும் தண்டிக்கக் காலம் தாழ்த்தும் இறைவனாகிய ஆண்டவர் நம்முடைய மனமாற்றத்திற்காகவும் இறைமனித ஒப்புரவுக்காகவும் காத்துக்கொண்டிருக்கிறார்.

எமக்காக மனித அவதாரம் எடுத்த இறைமகன் யேசுகூட பாவம் தவிர மற்ற அனைத்திலும் எம்மைப் போலிருந்தார். நாற்பது நாட்கள் உண்ணா நோன்பிருந்து செபத்துக்குள் வாழ்ந்து வானகத் தந்தையோடு ஒரு நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தினார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவராக அதே ஆவியால் வழிநடத்தப்பட்டார். பாலைவனத்தில் சோதனைக்கு ஆளானபோது அதனை மேற்கொண்டு நமக்கெல்லாம் முன்னுதாரணமாகத் திகழ்கிறார்.

இத்தவக்காலத்தில் நாம் பாவச் சோதனைகளில் இருந்து வெற்றிபெற இறைவன் நமக்கு ஆற்றலையும் அருளையும் தருகின்றார் என்பதை உணர்ந்துகொண்டு விழிப்போடு செபத்தில் நிலைத்திருப்போம். தவக்கால இறைவார்த்தைகளும், அந்த இறைவார்த்தை தரும் கிறிஸ்தவ விழுமியங்களும், பாவம் சார்ந்த வாழ்வையும் அதனால் வரும் தீமைகளையும் அழித்து துன்பங்கள் வேதனைகள் வழியாக நம்மை புனிதமடையச் செய்து புதுவாழ்வைத் தருவதோடு இத்துன்பங்களின் பின்னால் மகிமையான வாழ்வு உண்டு என்பதை நிதர்சனமாக்குகிறது.



அத்தோடு இப்புனிதமான தவக்காலத்தில் இறைமகன் இயேசுவின் துன்பம் நிறைந்த பாடுகளை நாம் தியானிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் எமது அன்றாட வாழ்வில் முகம் கொடுக்கும் அனைத்துத் துன்பங்களையும் வேதனைகளையும், இழப்புக்களையும் எமது வாழ்வின் சிலுவைகளாக ஏற்றுக்கொண்டு பொறுமையோடு தாங்கி நின்று சிலுவை சுமக்கும் யேசுவோடுகூட வழிநடப்போம்.

மூவொரு கடவுளின் நிறைவான அருட்பொழிவோடு, இறைவார்த்தையின் ஒளியில் வாழ்ந்து மனமாற்றம் பெறும் நாம் மனமாற்றத்தின் வெளி அடையாளமாகத் துன்பவேளைகளிலே சிலுவைகளை சுமக்கும்போது இறைபுகழ் பாடவும், எமது பாவ வாழ்விற்குப் பரிகாரமாக தவமுயற்சிகளிலும் ஒறுத்தல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வாழ்வதன் மூலம் இறைவனுக்கும் எமக்கும் இடையே புதுஉறவு மலரவும் வழிவகுப்போம். நாமும் புதுப்பிறப்படைந்து மற்றவர்களையும் புதுப்பித்து பாஸ்கா விழாவை மகிழ்வோடு கொண்டாடுவோம். ●

# ஜெருசலேம்* பயண அனுபவம்*

யா. பெஞ்ஜமின்
மூத்த மறைவாழ்வுப் பணியாளர்,
ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்.



எனது மனைவியையும், என்னையும் புனித நகராம் ஜெருசலேமுக்கு பயணிக்க அழைத்த இறைவனுக்கு முதற்கண் உள்ளம் கனிந்த நன்றியோடு ஆராதனையும் செலுத்துகின்றேன். எதிர்பாராத இந்தப் பயணமானது எமக்கு இறைவன் கொடுத்த விசேட அழைப்பெனவே கருதுகிறேன். வார்த்தை மனுவுருவாகி தடம்பதித்த இடங்களை, எமது ஊனக் கண்ணால் பார்க்கவும் தொட்டுணரவும் அருள்பாலித்தமை பெரும் பேறெனக் கருதுகிறேன்.

## எதிர்பாராத தொலைபேசி அழைப்பு

கொழும்பிலுள்ள எனது மகன் தொலைபேசியில் என்னுடன் தொடர்புகொண்டு "ஜெருசலேமுக்குப் புனித பயணம் மேற்கொள்ளத் தயாராகுங்கள்" என்று சொன்னபோது எதிர்பாராத இந்த இன்ப அதிர்ச்சியில் தடுமாறிப் போனேன். இந்த வேளையில் ஏற்கெனவே சாதாரணமாக நடக்கக் கஸ்ரப்படும் என்னால் ஜெருசலேம் மலைகளில் நடக்க முடியுமா? என்ற கேள்வி என் மனதில் எழத்தொடங்கியது. செய்வதறியாது திகைத்துப்போய் உட்கார்ந்துவிட்டேன்.

## செய்தி :- 01

### *பரிந்துரைச் செபம் பாதங்களுக்கு வலுவூட்டியது*

இத்தருணத்தில் எனதுள்ளத்தில் "உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு, அவரையே நம்பியிரு, அவரே உன் சார்பில் செயலாற்றுவார்" (தி.பா. 37:5) என்ற திருப்பாடலை நான் உச்சரிக்கத் தொடங்கினேன். நம்பிக்கையோடும் உற்சாகத்தோடும் செயல்பட்ட நான், செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் எனது பொறுப்பிலுள்ள குழந்தை இயேசு புரம், நூறு வீட்டுத்திட்டம் ஆகிய வலய இணைப்பாளர்களிடம் இதனை வெளிப்படுத்தி என் காலுக்கு வலுவூட்டச் செபிக்கும்படி அவர்களை வேண்டினேன். அதே வாரத்தில் எமது பங்குத்தந்தை அருட்தந்தை எஸ். தேவராஜா கொடுதோர் அவர்களிடம் இதே வேண்டுகோளை முன்வைத்தேன். அத்தோடு அருட்தந்தை டலிமா, அருட்தந்தை கிறிஸ்ரியன் வாஸ் அருட்தந்தை நேசன், அருட்தந்தை ஏ. பிலிப் (என்னை இறைபணியில் உருவாக்கியவர்) ஆகிய இந்த இறைபணியாளர்கள் அனைவரிடமும் ஆசிபெற்று எனது பயணத்தைத் தொடர்ந்தேன். அவ்வேளையில் அருட்பணியாளர்களின் ஆசீரும் (எமில் நகர், குழந்தை இயேசு புரம், நூறுவீட்டுத்திட்டம்) பணியாளர்களின் செபமும் கேட்கப்பட்டதை எனது உடலில் உணர்ந்தேன்.

2007 ஒக்டோபர் மாதம் 20ம் திகதி, கொழும்பிலிருந்து விமானம் மூலம் ஜோர்தானிலுள்ள அம்மான் விமான நிலையத்தை அடைந்தோம். பின்னர் அங்கிருந்து சாக்கடல் உள்ள பகுதிக்குப் பயணமானோம். அங்கு பஸ்ஸிலிருந்து இறங்கிச் சென்று குளித்துவிட்டு நன்நீரில் வந்து மீளவும் தோய்ந்து உடை மாற்றி, மீளவும் நடந்துவந்து பஸ்ஸில் ஏறிய பின்னரே இறைவன் அருளால் இவ்வளவு தூரம் நடக்க முடிந்த கால்களின் வலிமை குறித்து எண்ணிப்பார்த்து, "நான் உனக்கு வலிமை அளிப்பேன், உதவி செய்வேன், என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன்" (எசா.41:10) என்ற வசனத்தை செபித்து ஆண்டவருக்கு நன்றி கூறினேன்.

அதன்பிறகு பஸ் நசரேத்தூர் நோக்கி பயணித்தது. போய்க்கொண்டிருக்கும் வழியில் கடல் மட்டத்தைவிட 1200 அடி தாழ்வான ஜெரிக்கோ பட்டணத்தின் வனப்பையும் (City of a thousand palma) என்று அழைக்கப்படும் இப்பகுதியை பஸ்ஸில் பயணித்தபடி பார்வையிட்டோம். பாலைவனத்தில் ஓர் சோலைவனத்தை அமைத்த இறைவனின் வல்லமையை நினைந்தவண்ணம் அவரைப் போற்றிப் புகழ்ந்தேன். பிறவிக் குருடனான பாத்திமேயு (மாற். 10), வரிதண்டுவோருக்குத் தலைவரான சக்கேயு (லூக் 19), என்னும் இருவருடைய அக இருளை அகற்றி ஒளியேற்றிய நினைவு என் உள்ளத்தில் உதித்தது. "எனது அகத்திலுள்ள இருளை அகற்றி, உமக்கு சாட்சிய வாழ்வு வாழும் பணியாளனாக என்னை மாற்றியருளும் இறைவா!" என்று செபித்தவண்ணம் நசரேத்தூரை நோக்கிப் பயணித்தோம்.

நசரேத்திலுள்ள மரியாளுக்கு மங்கள வார்த்தை சொன்ன பேராலயத்தை அடைந்ததும் மெய்சிலிர்த்துப் போனேன். தூய அன்னை நடமாடிய இடத்தில் நிற்கிற மெய்யுணர்வு என்னைச் சிறிது தடுமாற வைத்தது. அன்று ஒக்ரோபர் மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை. அத்தகைய பேராலயத்தின் மத்தியிலுள்ள வாசகப் பீடத்தில் நின்று, விடுதலைப்பயண நூலில் இருந்து 17: 8-13 வரையான வாசகப் பகுதியை வாசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. வாசகத்திலே குறிப்பிட்டுள்ளபடி அமலேக்கயருடனான யுத்தத்தின்போது மோயீசனது சோர்ந்துபோன கைகளை உயர்த்திப் பிடித்தவாறு வெற்றிகண்ட இஸ்ராயேல் போன்று, அடியானையும் புனித பூமியிலே தாங்கி வந்து என் கால்களுக்கு வலுவூட்டிய என் இறைவனுக்கு உள்ளுணர்வோடு நன்றி கூறினேன்.

இதனைத் தொடர்ந்து, வேறொரு தினத்தில் தபோர் மலைக்குப் பயணம் பண்ணினோம். மலையடிவாரத்தில் பயணிக்கும்போது, ஆண்டவர் மறுரூபமான மலையுச்சியிலுள்ள ஆலயம் ஒரு சிறு புள்ளிபோன்று தென்பட்டது. அப்பொழுது நான் எனது மனைவியிடம், "இவ்வளவு உயரமுள்ள ஆலயத்திற்கு எம்மால் நடக்கமுடியுமா?" என்று கேட்டபொழுது, அதற்கு என் மனைவி, "ஆண்டவர் வழிநடத்துவார்" என்று பதிலளித்தார். மலையைச் சுற்றிப் பயணித்த பஸ் மலையின் மேலே ஓர் இடத்தில் தரித்து நின்றது. அந்த இடத்தில் இறங்கி எப்படியாகிலும் தவழ்ந்து சென்றாவது ஆண்டவர் மறுரூபமான அந்த இடத்தை நான் தொட்டு முத்திசெய்ய வேண்டும் என்ற பேராவலில் செல்லவிருக்கும் தூரத்தைப் பெரிதுபடுத்தாமல் நான் நடக்க முயன்றேன். பயணத்திற்கு பொறுப்பாயிருந்த திரு. கூல் மேயர் நான் நடக்க முயல்வதைக் கண்டு, "திரு. பெஞ்ஜமின் அவர்களே, உங்களால் நடக்க முடியாது. பஸ் நிறுத்திய இடத்திலேயே நில்லுங்கள்" எனக்கூறினார்.

நான் மறுத்து எப்படியாகிலும் அந்த இடத்திற்குச் சென்றேயாக வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறினேன். அதற்கு அவர், "நில்லும் நான் உம்மை கூட்டிச்செல்வேன்" என்றார்.

அதன்படி என்னை அங்கிருந்து ஒரு சிறிய வாகனத்தில் அழைத்துச் சென்றார். அங்கிருந்து மலைமேலுள்ள படிக்கட்டுகளின் மூலம் குறிப்பிட்ட ஆலயத்தைச் சென்றடைந்தோம். ஆலயத்திலிருந்து 12 படிக்கட்டுகள் கீழிறங்கிச் சென்றால் ஆண்டவர் மறுரூபமான மலைப்பகுதி இருக்கிறது. ஆலயத்தின் பீடமானது அந்த இடத்தின் மேலாக அமைக்கப்பட்டுள்ளது. பக்தியோடு அந்த புனிதமான இடத்தை அனைவரும் முத்திசெய்து ஆராதித்தோம். எல்லோருமே அந்த இடத்தில் நிற்க நான் மனக்கிளர்ச்சியின் காரணமாக மீண்டும் ஆலயத்தின் உயரப்பகுதிக்குச் சென்று ("ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கின்றேன்" 1சாமு 3:10) என்ற மனநிலையோடு, "ஆண்டவரின் மாட்சி இவ்விடத்தில் ஒளிர்ந்தது, இந்த மலைப்பாங்கான இடத்திலும் இவரின் ஒளிப் பிம்பம் பிரகாசித்ததுபோல் உமது அடியானாகிய என்னையும் உமது மாட்சிமைமிக்க ஒளியால் நிரப்பி, எமது பங்கில் உள்ள வலயங்களில் உமது பயனுள்ள கருவியாக என்னை மாற்றும்" என வேண்டிக்கொண்டேன்.

தொடர்ந்து தலைமைக் குருக்களின் உயரமான அரண்மனைக்கு நான் செல்ல முயலும்போது "நடக்கமாட்டீர்" என்று அவர் தடுத்தார். இருந்தும் நானோ, "அதை நான் பார்க்க வேண்டும்" என்று அவருக்கு முன்னமே சென்றுவிட்டேன். யோவான் 18ம் அதிகாரத்தில் குறிப்பிட்டபடி இயேசு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இடமான அன்னாஸ், கைப்பாஸ் என்ற தலைமைக்குருக்களின் அரண்மனையைப் பார்வையிட்டோம். கட்டிடத்தின் மேல் தளத்திலிருந்து இயேசுவை அடைத்துவைத்த இடமான இருள் நிறைந்த குகைப்பகுதிக்கு இறங்கிச் சென்றோம்.

இருள் சூழ்ந்த ஒடுக்கமான அந்த கரடுமுரடான சுவர்ப்பகுதியிலே வேதனையின் கொடூர நிலையில் இயேசுவின் திருஉடல் பின்புறமாக சாய்ந்து நின்ற அடையாளம் காணப்பட்டது. அவற்றின்மீது பக்தியோடு கைவைத்து தொட்டு அனுபவித்த அந்த நிகழ்வு உண்மையிலேயே இறைவனால் அருளப்பட்ட ஆசீர்வாதமாக ஏற்றுக்கொண்டேன். அத்தோடு அந்தப் புனித நிலத்தை முழந்தாள்படியிட்டு முத்திசெய்தேன்.

அங்கிருந்து இயேசுவை பிலாத்துவின் அரண்மனைக்கு கூட்டிச் செல்லவும், மீளவும் இயேசு சிலுவையோடு ஏறிச்சென்றதுமான பாடுகளின்போது அவர் பதித்த அதே படிக்கட்டுகளில் சிலுவையோடு துயரப்பட்டு செல்லுகின்ற இயேசுவோடு நானும் நடக்கிறேன் என்ற உணர்வு அதே படிக்கட்டுகளில் நானும் நடந்தபோது எனக்கு ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியின் உணர்வோடு களைப்பேதும் அற்ற நிலையில் உற்சாகத்தோடு படியேறிவந்த என்னைப் பார்த்து, அங்கிருந்த யூத மரபினரான வழிகாட்டி அப்படியே அலாக்காக என்னைத் தூக்கி வெற்றியின் சின்னமாக தன் பெருவிரலைக் காட்டி "You are very great. Though you are old, you are not old but you are very very young" *(நீர் மிகவும் பெரியவர்! நீர் வயதானவராக இருந்தாலும் நீர் இன்னும் இளமையானவராகவே இருக்கின்றீர்)* என்றார். மகிழ்ச்சி அக்களிப்போடு நான் அதற்கு, "I am not seventy two but twenty seven" *(எனக்கு எழுபத்தி இரண்டு வயது (72) அல்ல இருபத்தி ஏழு (27) வயது)* என்று பதில் கூறினேன். அவர் சிரித்தார்!

செபத்தின் வல்லமையையும் அதன் ஆற்றலையும் வழிகாட்டியின் வாய் மொழியாகவும் எனது அனுபவ ரீதியாகவும் பரிந்துரைச் செபம் கேட்கப்பட்டதை உணர்ந்து என் வலய மக்களையும், பங்கையும் அந்த இடத்தில் ஆண்டவனுக்கு ஒப்புக்கொடுத்து நன்றி உணர்வோடு துதித்தேன்.

## செய்தி :- 02

### *உள்ளதைப் பகிர்தலே உண்மையான அன்பிய வாழ்வு*

இறைவனின் எழில்மிகு படைப்புக்களில் இருந்து மனிதன் கற்றுக் கொள்ளவேண்டிய அன்பிய வாழ்வின் வழிமுறையின் அர்த்தங்களை நான் கற்றுக்கொண்டேன்.

9200 அடி உயரமான பனிமூட்டம் நிறைந்த கோர்மோன் மலை, இஸ்ராயேல் நாட்டின் வடமுனையில் உள்ளது. இம்மலைப் பிரதேசத்திலிருந்துதான் நீரூற்றுப் பயணித்து ஜோர்தான் நதியாக வெளிவந்து, திபேரியாக் கடலை நிரப்பி, அதிலிருந்து வெளியேறும் நீர் சாக்கடலுக்குள் சங்கமமாகின்றது. இந்நீரருவி தன்னுடைய கனி வளங்கள் யாவற்றையும் கொடுத்து பாலைவனமான இந்நாட்டை சோலைவனமாக மாற்றுகின்றது. இயற்கையின் மூலம் இறைவன் கற்றுத்தருகிற அன்புறவுப் பாடத்தை இது காண்போருக்கு கற்றுத்தருகிறது.

திபேரியாக் கடல் பகுதிகூட இந்நதியின் இணைப்பால் பல்லின மீன் வளங்கள் கொழிக்கும் செல்வப் பூமியாக மாறி நிற்கிறது. இதன் மூலம், மனிதன் தனது தேவைகளைப் பூர்த்திசெய்து மகிழ்ச்சி நிறை வாழ்வை அடைய உதவுகிறது.

இவ்வடையாளங்களூடாக இறைவன் தரும் செய்தி இதுவே! "உள்ளதைப் பகிர்தலே உண்மையான அன்பிய வாழ்வு" அன்பியப் பணியாளர்களாகிய நாம் நம்மிடமுள்ள வளங்களால் சூழவுள்ள குடும்பங்களுக்கு வலுவூட்டி, ஆன்மீக செழிப்பூட்டி இறை வார்த்தை-யென்ற நீரால் நிரப்பி வளம்பெறச் செய்து ஈற்றிலே சாக்கடலிலே சங்கமமாகும் ஜோர்தான் நதியைப்போல இறைவனோடு சங்கமிக்க வேண்டும் என்ற இனிய செய்தியை இந்த இயற்கை அனுபவத்தின் ஊடாகப் பெற்ற நான் எஞ்சிய காலத்தில் எனது ஆற்றலையும், சக்தியையும் முழுமையாக பிரயோகித்து அன்பிய வாழ்வை முன்னெடுக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் உருவாகியது.

## செய்தி :- 03

### *தளர்ந்துபோன விசுவாசத்தைத் தாங்குபவர் இயேசு*

அற்புதங்கள் நிகழ்ந்த அதே திபேரியாக் கடலிலே நாமும் படகேறிப் பயணிக்க அரியதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. படகிலே திருப்பலி நடைபெற்றுக்கொண்டிருந்தது. நற்கருணை மன்றாட்டு நேரம் கடலின் நடுப்பகுதியில் பயணித்தோம். அந்த வேளையில் மிதக்கின்ற படகின் மேற்தளத்தில் இருந்தவாறே "ஆண்டவரே எங்களைப் காப்பாற்றும், மடிந்து போகிறோம்" என்று கதறிய சீடர்களை நோக்கி, "குறைவான விசுவாசம் உள்ளவர்களே, ஏன் இவ்வளவு பயம்?" என்று கூறி காற்றைக் கடிந்துகொண்டார்" என்ற இந்நற்செய்தி பகுதி என் கண்முன்னே காட்சியாக வந்தது.

குருவானவர் நற்கருணை எழுந்தேற்றம் செய்யும்வேளை. நற்கருணையைப் பார்த்து, "ஆண்டவரே விசுவாசக் குறைவினால் நான் தளர்ந்து வீழ்ந்து போகாமல் உம்கரம் என்னைத் தாங்கிக்கொள்ள வரம்தாரும்" என்று வேண்டிக்கொண்டேன்.

## செய்தி :- 04

### *தூய உள்ளத்தோடு ஆண்டவரை அணுகினால் ஆசீர் கிடைக்கும்*

இருபது வருடங்களுக்கு மேலாக வாக்குத்தத்தத்தின் பேழையை வைத்திருந்த சிற்றாலயத்தை காண்கின்ற பாக்கியம் எமக்குக் கிடைத்தது. இதே வாக்குத்தத்தத்தின் பேழையை இஸ்ராயேல் மக்கள் வைத்திருந்தபோது அவர்களுக்கு ஏற்பட்ட தொடர் வெற்றிகளைக் கண்ணுற்ற பிலிஸ்தியர் தாமும் வெற்றி பெறவேண்டும் என்ற சுயநல நோக்கோடு கவர்ந்து சென்றனர். தங்களோடு இந்தப் பேழையை வைத்திருந்தபோது கஸ்ரம் துன்பம் தோல்விகள் ஏற்பட்டதனால் இப்பேழையை மீண்டும் கொண்டுவந்து விட்டுப்போனார்கள் என்கின்ற வரலாறு என் நினைவுக்கு வந்தது. "போட்டி பொறாமை காரணமாக குறுக்கு வழிகளில் இறை அருளையும், ஆசீரையும் பெற முயல்வது தண்டனைத் தீர்ப்பையே வருவிக்கும். மாறாக உள்ளார்ந்த உணர்வோடு இறைவனைத் தேடுகின்ற உள்ளங்களுக்கு இறையருள் பெருக்கெடுத்துப் பாயும்" என்கின்ற செய்தியே இந்த இடத்தைத் தரிசிக்கும்போது என்னுள் எழுந்தது.

இந்த ஆலயத்தின் முகப்பிலே வாக்குத்தத்தத்தின் பேழையும், வில் ஒன்றின்மேல் மாதாவின் உருவமும் வடிவமைக்கப் - பட்டுள்ளது. தன்னுதரத்திலே இறை மகனைத் தாங்கிய வகையில் மரியாள் வாக்குத்தத்தத்தின் பேழையென அழைக்கப்படுகிறாள். *'அம்மா மரியே நீயொரு பேழை'* என்ற பாடல் வரிகளை என் வாய்கள் முணுமுணுக்கத் தொடங்கின.

இறைவனை இதயத்துள் ஏற்றிவைத்து பணி செய்தால் பணி வாழ்வு சிறக்கும். இல்லையேல் எம் பணியானது வெறும் மனித முயற்சியாகி நாளடைவில் செயலிழந்து போகும் என்ற செய்தி இந்த ஆலய முன்றலில் என் மனதில் தோன்றியது.

இறுதியாக ஜெஸ்தமெனித் தோட்டத்தில் 10 நிமிட தியானத்தின்பின் ஆண்டவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இடத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் இருந்து புறப்பட்டு பாடுகளின் பாதையில் வெளிநடந்து பரிசுத்த கல்லறை அமைந்துள்ள ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து மீண்டமை எனக்கும் எனது மனைவிக்கும் கிடைத்த பெரும் பேறு எனக் கருதுகின்றேன். ஆண்டவருக்கே எங்கள் மனமார்ந்த நன்றிகள்! ●



# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்:
அதிவந்தனைக்குரிய ஆயர்
இராயப்பு யோசப் ஆண்டகை

## தேசிய சமாதானப் பிரிவு

இயக்குனர்:
அருட்தந்தை
பெப்பி சோசை அடிகளார்

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## வாழ்வுதய சமாதானக் குழு மாணவர்களுக்கான சமாதானச் செயலமர்வு

வவுனியா மறைக்கோட்டத்தில் இயங்கிவரும் வாழ்வுதய சமாதானக்குழு மாணவர்களுக்கான சமாதானக் கருத்தமர்வானது வவுனியா பம்பைமடு பிரதேசத்தில் கடந்த 22.01.2008 அன்று காலை 9.30 மணிக்கு இறைவார்த்தைப் பகிர்வுடன் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் வாழ்வுதய இயக்குனர் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கான தனது செய்தியாக மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகளை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும் எனவும் நம்பிக்கையுடையவராகவும், நன்றியுள்ளம் கொண்டவர்களாகவும் வாழவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் எவ்வாறு தம்மைச் சுய மதிப்பீடு செய்வது தொடர்பான உரை வழங்கப்பட்டது. ஒவ்வொருவரும் தமது பலங்கள், பலவீனங்கள், சாதனைகள், ஆற்றல்கள் என்பவற்றை இனங்காண்பது தொடர்பாகவும், பலவீனங்களைப் பலமாக மாற்றிக்கொள்வது தொடர்பாகவும் வாழ்வுதய சமாதானப் பிரிவு ஊக்குவிப்பாளர் திரு. எஸ். பெனிற்றஸ் அவர்களால் வளவுரை வழங்கப்பட்டது. சமாதானப் பிரிவு இணைப்பாளரினால் மாணவர்களுக்கான விவிலிய அறிவூட்டல்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது வாழ்வுதய கல்விப் பிரிவினரும் கலந்துகொண்டு மாணவர்களுக்கான மாதாந்தக் கல்வி ஊக்குவிப்பு உதவிகளையும் வழங்கினார்கள். வவுனியா கள ஊக்குவிப்பாளர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந் நிகழ்வில் வாழ்வுதய இயக்குனர் மற்றும் சமாதானப் பிரிவு இணைப்பாளர், கல்விப் பிரிவு இணைப்பாளர் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 46 மாணவர்கள் பங்குபற்றி பயன்பெற்றனர்.

## வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் வளர்ச்சிக்கான சமாதானச் செயலமர்வு

நானாட்டான் பிரதேசத்தில் இயங்கிவரும் வாழ்வுதயக் கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான சமாதானச் செயலமர்வானது 26.01.2008 அன்று நானாட்டான் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிராமிய விழிப்பூட்டல் குழு இணைப்பாளர் அவர்களினால் கருத்துரை வழங்கப்பட்டது. கிராம மட்டத்தில் உள்ள தேவைகளை எவ்வாறு இனம்காணுவது மற்றும் தேவை மதிப்பீட்டை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும், கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகள் எதிர்காலத்தில் எவ்வாறு சிறப்பாக கொண்டுசெல்லப்பட இருக்கின்றது போன்றவை தொடர்பாக பூரண விளக்கமளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சமூகம் ஒன்றில் ஏற்படுகின்ற முரண்பாடு ஒன்றினை எவ்வாறு தீர்ப்பது, வன்முறையற்ற வகையில் வாழ்வது தொடர்பாகவும் சமாதானப் பிரிவு பணியாளர் திரு. ஏ. ஜோர்ஜ் குரூஸ் அவர்களால் கருத்துரை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குடும்ப உளவியல் தொடர்பாக சமாதானப் பணியாளர் எஸ். பெனிற்றஸ் அவர்களாலும் வளவுரைகள் வழங்கப்பட்டன.

நானாட்டான் பிரதேச ஊக்குவிப்பாளர் வி. ஜே. பிரதீபன் ஒழுங்கமைத்த இந்நிகழ்வில் 30 குழு உறுப்பினர்கள் பங்குபற்றி பயன்பெற்றனர்.





## ஆச்சிபுரம் பிரதேச கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான சமாதானக் கருத்தமர்வு

வவுனியா மறைக்கோட்டத்தில் உள்ள ஆச்சிபுரம் பிரதேச வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான சமாதானக் கருத்தமர்வு நிகழ்வானது கடந்த 17.01.2008 அன்று ஆச்சிபுரத்தில் நடைபெற்றது.

கிறிஸ்தவ, இந்து மத வழிபாடுகளுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார் கலந்துகொண்டு உரையாற்றினார். குழுக்களுக்கான தனது செய்தியில், நாம் அனைவரும் வெவ்வேறு மதங்களைச் சார்ந்திருந்தாலும் உண்மை, மனச்சாட்சி, நம்பகத்தன்மை ஆகிய விழுமியங்களை கொண்டு வாழவேண்டும் எனவும் குழுக்களுக்கு வழங்கப்படுகின்ற விழிப்பூட்டல் கருத்துக்கள், ஊக்குவிப்புக்கள் என்பன பயன்மிக்கதாக அமைய வேண்டும் எனவும், ஒன்றுபட்ட சமாதானமான வாழ்க்கை வாழவேண்டும் எனவும் கருத்துக்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து கிராமம் ஒன்றின் அத்தியாவசியத் தேவைகளை எவ்வாறு இனங்கண்டுகொள்வது மற்றும் அவற்றை எவ்வாறு உருவாக்கிக்கொள்வது தொடர்பாக கிராமிய விழிப்பூட்டல் குழு இணைப்பாளர் திரு. அன்ரன் ராஜகாரியர் அவர்களால் கூறப்பட்டது. பழைய ஏற்பாட்டு நூல்களில் சமாதானம் பற்றிய கருத்துக்கள் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றது என்பது தொடர்பாக சமாதானப் பிரிவு இணைப்பாளர் திரு. சி. எம். ஏ. ஜெயதாஸ் அவர்களால் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து குடும்ப உளவியல் தொடர்பாகவும், குடும்பத்தில் ஒவ்வொருவரது பொறுப்புக்கள் தொடர்பாகவும், நாம் எவ்வாறு குடும்பத்தில் இயல்பாக்கம் அடைவது தொடர்பாகவும் சமாதானப் பிரிவு பணியாளர் திரு. எஸ். பெனிற்றஸ் அவர்களால் கருத்துரை வழங்கப்பட்டது.

வவுனியாப் பிரதேச கள ஊக்குவிப்பாளர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்நிகழ்வில் வாழ்வுதய இயக்குனர், கோமரசன்குளப் பங்குத்தந்தை அருட்தந்தை எஸ். சகாயநாதன் மற்றும் வாழ்வுதய சமாதானப் பிரிவு, கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் 74 குழு அங்கத்தவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர். பயன்மிக்க இந்நிகழ்வினை ஒழுங்குபடுத்தி வழங்கியவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டதுடன், எதிர் காலங்களில் இவ்வாறான நிகழ்வுகளை வழங்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சீட் நிறுவனத்தின் இரு வெளிக்கள அலுவலர்களும் பங்குபற்றி இக்கருத்தமர்வின் பயன்பற்றி எடுத்துக்கூறினார்கள்.







## மடுக்கரையில் சிரமதான நிகழ்வு

கடந்த 18.01.2008 அன்று அளவக்கை பங்கிற்குட்பட்ட மடுக்கரைக் கிராமத்தில் சிரமதானம் ஒன்று நடைபெற்றது. இங்கு அமைந்துள்ள முன்பள்ளியில் மாணவர்களுக்கான மைதானம் அமைப்பதற்கான சிரமதானம் நடைபெற்றது. இதில் 40 பேர் கலந்துகொண்டனர். சமயப் பாகுபாடு இன்றி முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர் மட்டும் அல்லாது ஊர், ஆலய சபை உறுப்பினர்களும், பெண்கள் சங்கம், வாழ்வுதய வெளிக்கள அலுவலர்களான வி. ஜெ. பிரதீபன் ஜெராட் என்பவர்களும் கலந்துகொண்டனர். இச்சிரமதானப் படங்களையே கீழே காண்கின்றீர்கள்.







# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

*"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"*

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## மடு, மாந்தை மேற்குப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கான

# புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள்

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் மனித நேயப்பணிகளில் புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவின் பணிகள் சமகாலத்தில் மிகவும் தேவைப்படும் பணிகளுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. குறிப்பாக தற்போது நாட்டில் போர்ப் பதற்றமும், அழிவுகளும் நாளுக்குநாள் அதிகரித்துவரும் இவ்வேளையில் மன்னார் மறைமாவட்டத்தைப் பொறுத்தவரையில் மடு, மாந்தை மேற்குப் பிரதேசங்களில் இப்போரின் அழிவுகள் மென்மேலும் அதிகரித்தவண்ணம் காணப்படுகின்றன. இப்பிரதேசங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தற்காலிகமாகக் குடியமர்ந்து வருகின்றனர்.

இந்நேரத்தில் கறிற்றாஸ் வாழ்வுதயம் பற்பல புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. நிவாரணப் பணியாக கடந்த மாதத்தில் மட்டும் வழங்கப்பட்டவை பின்வருமாறு: மடு, பெரியமடு, கள்ளியடி, கூராய், ஆத்திமோட்டை ஆகிய இடங்களில் இடம்பெயர்ந்து வசிக்கும் 4772 அங்கத்தவர்களைக் கொண்ட 1252 குடும்பங்களுக்கு அரிசி 5800 கி. கி. மாவு 5800 கி. கி. சீனி 2425 கி.கி. பருப்பு 4712 கி.கி. ரின்மீன் 2527, தேயிலை 345 கி.கி. சவற்காரம் 1500, பால்மா 105 பக்கேற் போன்றவை வழங்கப்பட்டுள்ளன. உலர் உணவு அல்லாத பொருட்கள் சாறம் 817, துணிவகைகள் 817 (3m துண்டு) சேட் 733, பெட்சீற் 817, பேசின் பிளாஸ்ரிக் 696, நுளம்பு வலை 770, சாறி 463, பானை 200, சட்டி 797, ஆண்களுக்கான உள்ளுடுப்பு 797 என்பன 817 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட 29.01.2008ல் மடுப்பகுதியில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலில் இறப்பு இழப்புக்களைச் சந்தித்த 13 குடும்பங்களுக்கு உடன் நிவாரணமாக அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா, தேயிலை, ரின்மீன் என்பன வழங்கப்பட்டதோடு, இச்சம்பவத்தில் உயிரிழந்த 16 பேருக்கு மரணச்சடங்கு கொடுப்பனவாக 170,750.00 ரூபா பணமாக வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு தட்சனாமருதமடுவிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்ற 75 குடும்பங்களுக்கு தலா ஒரு நபருக்கு 500.00 ரூபாய்ப்படி 130,000.00 ரூபா பணமாக வழங்கப்பட்டுள்ளது. இவற்றோடு பெரியமடு இடம்பெயர்ந்த முகாமிற்கு 3 மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. கள்ளியடிக்கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களுக்கு தற்காலிகக் கொட்டகையும் அமைத்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் 25 வீடுகள் அமைப்பதற்கான வேலைகளும் நடைபெற்று வருகின்றன. மற்றும் வெள்ளாங்குள வைத்தியசாலைக்கு 50x16 நீளமுடைய நோயாளர் விடுதியும் அமைத்துக்கொடுப்பதுடன் 50 பெற்சீற், 50 பிளாஸ்றிக் பாய் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. வைத்தியச் செலவாக விடத்தல்தீவு பங்குத்தந்தை ஊடாக 21 நபர்களுக்கு 20,500.00 ரூபா வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு மருத்துவப் போக்குவரத்துச் செலவாக ஒரு நபருக்கு 1000.00 ரூபாவும், மரணவீட்டுக் கொடுப்பனவாக ஒரு நபருக்கு 3000.00 ரூபாவும், மடுவில் ஒரு நபருக்கு வைத்தியச் செலவாக 2000.00 ரூபாவும் பணமாக வழங்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட 247 முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவும் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு தட்சனாமருதமடு இடம்பெயர் முகாமில் நடைபெறும் பாடசாலையில் கல்வி பயிலும் 207 மாணவர்களுக்கு சி.ஆர். கொப்பி 96, 160 பக்க கொப்பி 184, 120 பக்க கொப்பி 161, 80 பக்க கொப்பி 232, 40 பக்க கொப்பி 140 ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. மேலும் மேற்படி பிரதேசங்களில் கல்வி புகட்டும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல்களும் நடாத்தப்பட்டு வருகின்றன.

## உதவிக்கரப் பிரிவின் கடந்தமாத செயற்பாடுகள்

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் உதவிக்கரப் பிரிவானது தனது மனிதநேயப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. தற்போது பிறமாவட்டங்களிலும் நடமாடும் சேவைமூலம் இப்பணிகளை ஆற்றிவருகின்றது.

குறிப்பாக உதவி நாடிவரும் கால்பட்டி, செயற்கைக்கால், சக்கரநாற்காலி, கைப்பட்டி தேவைப்படும் பயனாளிகளுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கால்பட்டி என்பது ஒரு பயனாளிக்குப் பொருத்துவது மிகவும் கடினமானது. பாதிக்கப்பட்ட ஒரு பயனாளியின் பழக்கப்பட்ட செயற்பாடுகளில் இருந்து சாதாரண மனிதனின் செயற்பாட்டிற்குள் அவரைக் கொண்டுவருவது மிகவும் சிரமமான விடயம். அந்த கால்பட்டியினைத் தயாரிப்பதற்கு முதலில் இயன்மருத்துவரின் ஆலோசனையும், பயிற்சியும் அந்தப் பயனாளிக்கு வழங்கப்படும். பின் அவருக்கு எப்படியான கால்பட்டி பொருந்தும் என்பதுபற்றி இயன்மருத்துவருடன் சேர்ந்து உதவிக்கரப் பிரிவின் தொழில்நுட்பவியலாளர்கள் கலந்துரையாடி தெரிவுசெய்வார்கள். பின் அது தயாரிக்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வழங்கப்படும். இக்கால்பட்டி வழங்கப்பட்டு சில மணி நேரங்கள் பயிற்சி வழங்கப்படும். குறிப்பிட்ட சில வாரங்கள், மாதங்களின் பின் அவர்களைச் சந்தித்து அவர்களுக்கென வழங்கப்பட்ட கால்பட்டியின் உபயோகம் பற்றி கேட்டால் மிக உதவியாக உள்ளதாகத் தெரியப்படுத்துவார்கள்.

இவ்வாறாக இப்பிரிவினரின் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த மாதத்தில் செயற்கைக்கால், சக்கரநாற்காலி, கைப்பட்டி போன்ற தேவையுள்ள பயனாளிகளுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



### *கறிற்றாஸ் – இத்தாலி ஸ்தாபனத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட செயலமர்வில்*

## வாழ்வுதயப் பணியாளர்கள் பங்கேற்பு

*கறிற்றாஸ் இத்தாலி* ஸ்தாபனம் இலங்கையில் *கறிற்றாஸ் சிறிலங்கா*வின் ஊடாக தமது மனிதநேயப் பணிகளை ஆற்றிவருகின்றது. இதன் செயற்பாடுகள் பல. அதில் ஒன்று ***விசேட தேவை உள்ளோருக்கான*** செயற்றிட்டம் அண்மையில் மேற்படி ஸ்தாபனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. Social Animation and Buildind Awaress on Disability எனப்படும் இந்தப் பயிற்சிச் செயலமர்வில் வாழ்வுதயப் பணியாளர்கள், சமாதானப் பிரிவு இணைப்பாளர் திரு. சி.எம்.ஏ. ஜெயதாஸ், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளர் திரு. எஸ். இராஜகாரியர் மற்றும் உதவிக்கரப்பிரிவு அலுவலர் திரு. எஸ். றஞ்சித் மற்றும் முருங்கன் பிரதேச சமாதானப் பிரிவு ஊக்குவிப்பாளர் திரு.எஸ். இராஜேஸ்வரன் ஆகியோர் பங்குகொண்டு பயன் அடைந்தனர். இச்செயலமர்வு கொழும்பு பலவத்தப் பிரதேசத்தில் உள்ள CHPB கட்டிடத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வினை கொழும்பு கறிற்றாஸ் சிறிலங்காவின் தேசிய இயக்குனர் அருட்தந்தை டேமியன் பெர்னாண்டோ அவர்கள் ஆரம்பித்து வைத்தார். இச்செயலமர்வினை பெல்ஜியம், இத்தாலி நாடுகளைச் சேர்ந்த சகோதரிகள் நடாத்தினார்கள். இச்செயலமர்வில் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்ட (விசேட தேவை உள்ளோர்) மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளும், எவ்வாறு நாம் மேற்படி நபர்களுக்கு பணியாற்ற வேண்டும் என்பது தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

அத்தோடு இத்திட்டத்தை இலங்கை நாடு பூராகவும் கொண்டுசெல்ல கறிற்றாஸ் இத்தாலி அமைப்பு முயற்சிகள் எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கணனிப் பயிற்சியில்

## வாழ்வுதயம்

வாழ்வுதயத்தின் கணனி மற்றும் ஆங்கிலப்பயிற்சி பெறும் மாணவர்களுக்கான சர்வமத சமாதானக் கருத்தமர்வானது சமாதானப் பிரிவினருடன் இணைந்து வாழ்வுதயம் கணனிப் பிரிவினால் 23.02.2008 அன்று நடாத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு வாழ்வுதய இயக்குனர் அவர்கள் வருகைதந்து ஆசியுரை வழங்கினார்.

2007ல் புரட்டாதி தொடக்கம் மார்கழி மாதம் வரை கணனிப்பயிற்சி மேற்கொண்டு பயிற்சிகளை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வானது 25.02.2008ல் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு வாழ்வுதய இயக்குனர் பெப்பி அடிகளாரும் மன்னார் பேராலய பங்குத்தந்தை தேவராஜா கொடுதோர் அவர்களும் வருகைதந்து சிறப்பித்தனர்.

### கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகள் கிராமிய மட்டத்தில்

# பெரும் வரவேற்பைப் பெற்றுவருகின்றது

கறிற்றாஸ் சிறிலங்காவின் தேசிய திட்டமாகிய கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகள் கறிற்றாஸ் மன்னார் வாழ்வுதயம் ஊடாக 2000ஆம் ஆண்டு தொடக்கம் மன்னார் மறைமாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இன்றுவரை மன்னார் மறைமாவட்டத்தில் 154 கிராமியக் குழுக்கள் மறைமாவட்டம் பூராக பரவலாக அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இக்குழுக்களுக்கு சமூக, பொருளாதார, கலை, கலாச்சார, ஆன்மீகம் தொடர்பான விழிப்பூட்டல்கள் கொடுக்கப்பட்டு இம்மக்களை வலுவுள்ளவர்களாக மாற்றுவதற்கும் சமூக மாற்றத்திற்காகவும் இச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இச்செயற்பாடுகள் தற்பொழுது கிராமிய மட்டத்தில் பெரும் வரவேற்பையும் பெற்று திறம்பட செயற்பட்டு வருகின்றது. இச் செயற்பாடுகளில் கடந்த மாதம் மட்டும் செயற்படுத்திய செயற்பாடுகள்.

### சுய தொழில் திட்டம் :

கிராமியக் குழுக்களின் சுய தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக சிறு குழுக்களுக்கு பொருளாதார ஊக்குவிப்பு தொடர்பான விழிப்பூட்டல்கள் ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் பொறுப்பாக இருக்கும் வாழ்வுதய வெளிக்கள அலுவலர்கள் ஊடாக வழங்கப்பட்டு வந்துள்ளது. தற்பொழுது சாந்திபுரம் கிராமியக் குழுக்கள் மெழுகுதிரி தயாரித்தல் சுய தொழிலும், மாவிலங்கேணி குழுக்கள் உணவுப் பொதி தயாரித்து விற்பனை செய்தல் முயற்சியிலும் சாந்திபுரம் 65 வீட்டுத்திட்டத்தில் இயங்கும் கிராமியக் குழுக்கள் அரிசிமா பொதி செய்து விற்பனை செய்தல் முயற்சிகளிலும் வவுனியா பிரதேசக் குழுக்கள் மிக்சர், கடலை பொதி செய்து விற்பனை செய்யும் தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

### பிரதேசமட்ட ஒன்றுகூடல்

கிராமியக் குழுக்களின் மன்னார் தீவு B பிரதேசத்திற்கான பிரதேச மட்ட ஒன்றுகூடல் கடந்த மாதம் மன்னார் நடுக்குடா கிராமத்தில் நடாத்தப்பட்டுள்ளது.

இதில் 40 கிராமியக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இக்குழு உறுப்பினர்களின் பிரதேச ரீதியான செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் குடும்பப் பொருளாதாரத் திட்டமிடல் தொடர்பாகவும் கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகளின் இணைப்பாளர் திரு எஸ். அன்ரன் ராஜகாரியர் அவர்களினால் விளக்கம் கொடுக்கப்பட்டது. அத்துடன் இப்பிரதேசத்திற்குப் பொறுப்பாக இருந்து செயற்படும் செல்வன் பெனிற்ரஸ் அவர்களினால் கருத்துரையும் வழங்கப்பட்டு ஒன்றுகூடல் நிறைவுபெற்றது.

### புதிய குழு உருவாக்கம்

மன்னார் தோட்டவெளிக் கிராமத்தில் வாழ்வுதயம் முன்னெடுக்கும் வீட்டுத்திட்டத்தை மேலும் சிறப்பாகவும் துரிதமாகவும் முன்னெடுப்பதற்காகவும் இக்கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கிலும் இக்கிராமத்தில் மேலும் இரண்டு புதிய கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்குழு உறுப்பினர்களுக்கு GYB , SIYB எனப்படுகின்ற வியாபார அபிவிருத்தி தொடர்பான வதிவிடப் பயிற்சிகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கிராமிய விழிப்பூட்டல் பிரிவு பணியாளர்களுக்கான ஒன்றுகூடல்

கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகளை பிரதேச மட்டங்களினூடாக பொறுப்பாக இருந்து வழிநடத்தும் பணியாளர்களுக்கு கடந்தமாதம் *"இறைவார்த்தை காட்டும் பணிவாழ்வு"* என்னும் தலைப்பில் ஆசிரியர் திரு. எஸ். அந்தோனிபிச்சை அவர்களினால் விளக்கம் கொடுக்கப்பட்டது. இக்கருத்துரை பணியாளர்களின் பணி வாழ்வுக்கு மேலும் உரம் சேர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

அத்தோடு தேசிய நிலையத்தில் நடைபெற்ற தேசிய செயற்குழு ஒன்றுகூடல் தொடர்பாகவும் "விசேட தேவையுள்ளோருக்கான பணிகள்"



தொடர்பான கருத்தமர்வு பற்றியும் கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளர் திரு. S. அன்ரன் ராஜகாரியர் (ராஜன்) அவர்கள் தெளிவுபடுத்தினார்.

இவ்வொன்றுகூடல்கள் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்பட்டு வருகிறது. இந்த ஒன்று கூடல்களின் மூலம் பணியாளர்கள் விழிப்பூட்டல் பற்றிய தெளிவுகளையும் பெற்றுவருகின்றனர்.

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

*அடிப்படைவாத பெந்தக்கோஸ்தே சபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.*

தருவது தஞ்சை டோமி

## தொடர் – 07

***7. எப்படி மரியா என்ற பெண்ணிடம் கன்னிமையும், தாய்மையும், ஒருசேர இருக்க முடியும்? மரியா என்றென்றும் கன்னி என்ற விசுவாசக் கோட்பாட்-டைப் புரிந்துகொள்ள முடியவில்லையே?***

கன்னிமையும், தாய்மையும் எப்படி ஒரு பெண்ணிடம் விளங்க முடியும்? ஆனால், மரியன்னையிடம் கன்னிமையும், தாய்மையும் ஒரு சேர இருப்பதை விசுவசிக்கும்படி கத்தோலிக்கத் திருச்சபை அழைக்கின்றது. இந்த விசுவாசமும் திருச்சபையின் தொடக்கம் முதலே மக்களிடம் காணப்பட்ட ஒன்று.

கி.பி. 649ல் கூடிய லாத்தரன் பொதுச் சங்கம் மரியாவின் கன்னிமை பற்றி புனித அந்தியோக்கு இஞ்ஞாசியாருடைய கூற்றைக் கையாண்டு, மரியா இயேசுவின் பிறப்புக்கு முன்னரும், பிறப்பின்போதும், அதற்குப் பின்னரும் கன்னியாகவே இருந்தார் என்று உறுதி செய்தது. அதாவது அன்னை மரியா தூய ஆவியால் கருத்தரித்தார். எந்தவிதமான களங்கமும், பாதிப்புக்களும் இன்றி இயேசுவைப் பெற்றெடுத்தார். வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே வாழ்ந்தார் என்பதாகும். பின் திரிதெந்து, இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கங்களில் இப்போதனை வலியுறுத்தப்பட்டது.

### கன்னிமை என்றால் என்ன?

**1. உடல்கூறு கண்ணோட்டத்தில் (Physical point of view) :** கன்னிமை என்பது உடலைப் பாலியல் பயன்பாடு அதாவது உறவு இல்லாமல் காத்துக்கொள்வது.

**2. அறநெறிக் கண்ணோட்டத்தில் (Moral point of view) :** கன்னிமை என்பது தகாத சிற்றின்பப் பழக்கங்கள், நாட்டங்கள், தேடல்கள் இல்லாமல் காத்துக்கொள்வது.

**3. ஆன்மீகக் கண்ணோட்டத்தில் (Spiritual view) :** இறைவனோடு ஒருவர் கொண்டுள்ள மிக நெருக்கமான உறவினாலே, பிளவுபடாத மனத்துடன் தன்னை முழுவதும் அவருக்கு அர்ப்பணித்தல்.

### மரியாவின் கன்னிமை இறையியல்

இயேசு உண்மையில் இறைமகன் என்ற விசுவாசம் மரியாவின் கன்னிமைமையால் உறுதிசெய்யப்படுகிறது. கன்னிமை அன்னையின் அர்ப்பணத்தையும், கீழ்ப்படிதலையும் சுட்டிக்காட்டப்படுகிறது. மரியாவின் கன்னிமை அவர் இறைவனின் தாய் என்பதில்தான் அர்த்தம் பெறுகிறது. மரியாவின் கன்னித் தாய்மை என்பது நம் மீட்புக்கான இறைத்திட்டம் எவ்வளவு உயர்ந்தது என்பதை உணர்த்துகிறது.

ஆக, அன்னை மரியாவின் கன்னித் தாய்மையை நாம் உடல் கண்ணோட்டத்தில் அல்லாமல் அறநெறி மற்றும் ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். மரியாவின் கன்னித்தாய்மை மீட்புத்திட்டத்தின் மாண்பை உணர்த்தும் விதத்தைச் சிந்தித்து விசுவசிக்க வேண்டுமெயொழிய அதை விமர்சிப்பதோ, அஞ்ஞானப்படுவதோ கூடாது.

*(கேள்வி பதில் தொடரும்...)*

---

# பொதுநிலையினர் வாழ்வில் இறைவார்த்தை

## இறைவார்த்தை ஆண்டையொட்டிய சிந்தனைக் கட்டுரைத் தொடர் - 4

- திரு. மாட்டின் டயஸ், (பேசாலை) இளைப்பாறிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் -

**இரண்டாவது மகிழ்ச்சிநிறை மறையுண்மை :-**
தேவதாய் எலிசபேத்தம்மாளைச் சந்திக்கின்றார். (இந்நிகழ்வு புனித லூக்காவின் நற்செய்தியில் மிகவிரிவாக நமக்குத் தரப்படு-கின்றது. லூக்கா சீரிய நாட்டு அந்தியோக்கியா நகரைச் சேர்ந்தவர். புற இனத்தவர் (யூதர் அல்லாதவர்) புனித பவுலோடு இணைந்து திருத்தொண்டாற்றியவர். விடயங்களை மிக நுட்பமாக ஆய்ந்து, தெளிவாக ஆதாரங்களோடு தருவதுதான் இவரது நற்செய்தியின் சிறப்பு.

**இந்த மறையுண்மையில் விரியும் ஏனைய உண்மைகள்**
**I.** மரியாள் இறைவனின் தாய் என்பதை எலிசபெத் பரிசுத்த ஆவியால் நிறைந்தவராய் உறுதிப்படுத்துகின்றார். “என் ஆண்டவரின் தாய் என்னிடம்வர நான் யார்?” (லூக் : 1:43).
**வேண்டுதல் :-** 1. தேவதாயின் அடைக்கலத்தையும் ஆதரவையும் வேண்டிச் செபித்தல்.
2. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வரம்வேண்டிச் செபித்தல்.

**II.** முன்னோடியான யோவானின் வருகை உறுதிப்படுத்தப் படுகின்றது.
1. “உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை அக்களிப்பால் துள்ளிற்று.” எலிசபேத்தின் வார்த்தைகள். (லூக் 1:44)
2. “கருவுற முடியாதவர் எனச் சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம்” கபிரியேல் தூதன் (லூக் 1:36)
**வேண்டுதல் :-** 1. நம் குடும்பங்களிலே எதிர்பார்க்கப்படுகின்ற நல்ல காரியங்கள் நிறைவேற வேண்டிச் செபித்தல்.
2. குழந்தைச் செல்வங்கள் இல்லாத குடும்பங்களை இறைவன் மழலைகளால் நிரப்பச் செபித்தல்.

**III.** தேவதாய் பேறுபெற்றவள் என மீண்டும் ஒரு வாழ்த்து – உறுதிப்படுத்தல்.
1. “பெண்களுக்குள் நீர் ஆசீர்பெற்றவர். உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசீர்பெற்றதே” - எலிசபெத் (லூக். 1:42).
2. “ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்” - எலிசபேத் (லூக் 1:45).
3. “இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறு பெற்றவர் என்பர்” :- மரியாள் (லூக் 1:48).
**வேண்டுதல் :-** இறைவன் நமக்கும், நமது குடும்பம், சமூகத்துக்குச் செய்த நல்ல காரியங்களுக்கு நன்றி சொல்லல்.

**IV.** மரியாளின் பிறரன்புச் செய்கையின் வெளிப்பாடு - முதிர்ந்த வயதில் கருவுற்றிருக்கும் எலிசபேத்துக்கு உதவுவதற்காக யூதேயா மலைநாட்டின் ஊருக்குச் செல்கிறார்கள் (லூக். 1:49).
**வேண்டுதல் :-** தேவையில் வாழ்கின்ற - சிறப்பாக முதியவர்கள் - நோயாளர்களுக்கு உதவும் மனநிலையைத்தர வரம் வேண்டல்.

**V.** யோவான், யேசுவின் முதற் சந்திப்பு - கருவிலுள்ளபோதே
**வேண்டுதல் :-** 1. நல்ல உயர்ந்த எண்ணங்களைக் கற்றுக்கொள்ளவும், அவற்றை நிறைவேற்றவும் வரம் வேண்டல்.
2. நல்ல பிறரன்புப் பணிகளை கிராமத்தில் - மறைமாவட்டத்தில் முன்னெடுத்துச் செல்கின்ற மக்களுக்கு சிறப்பாக ஆயர் குருக்கள் பொதுநிலைப் பணியாளர்களுக்கு இறையாசீர் வேண்டிச் செபித்தல்.

**VI.** முன்னுரைக்கப்பட்ட இறைவார்த்தைகளின் நிறைவேற்றம் இறைவனின் வேண்டுதல் திட்டம் எம்மில் எதுவெனக் கண்டறிந்து அதன்படி வாழ ஆவியின் வரம் வேண்டல்.

**மூன்றாவது மகிழ்ச்சிநிறை மறையுண்மை :-**
யேசு பெத்தலேகம் ஊரில் மாட்டுத் தொழுவத்தில் பிறக்கின்றார். வைத்தியசாலைகளில் நேர்சிங்கோம் (Nursing Home) வீடுகளில், அகதி முகாம்களில் குழந்தைகள் பிறப்பது சாதாரணமானது. பயணங்களின்போது பஸ்வண்டி, விமானங்களில் குழந்தைகள் பிரசவிக்கப்படுவது அபூர்வம். மாட்டுத்தொழுவத்தில் பிறந்த முதல் குழந்தையும், இறுதிக் குழந்தையும் யேசுவாகத்தான் இருக்கும். புனித பவுல் அடிகளார் கூறுவார்,“சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு கிறிஸ்து கீழ்படிபவரானார். நாம் இதையும் சேர்த்துக்கொள்ளலாம். மாட்டுத் தொழுவத்தைத் தன் பிறப்பிடமாகத் தெரிந்துகொள்ளும் அளவிற்கும் அவர் கீழ்படிபவரானார். ஏனெனில் இது தற்செயலான நிகழ்வல்ல. முன்னுரைக்கப்பட்டவை நிறைவேறுதற்கான நிகழ்வு.

இம்மறையுண்மையில் விரியும் ஏனைய நிகழ்வுகளும் அத்தோடு தொடர்புபடுத்தக்கூடிய வேண்டுதல்களும்.
**1. மீட்பு ஏழ்மையில் தோன்றுகின்றது**
**வேண்டுதல் :-** 1. ஏழ்மையை – ஏழ்மையில் வாழ்வோரை நேசிக்கும் மனப்பக்குவம் கேட்டு வேண்டல்.
2. இந்நாட்களில் துயரங்களில் வாழ்வோருக்காக சிறப்பாக அகதி-களாக முகாம்களிலும், பொது மண்டபங்களிலும், மரநிழல்களிலும் தஞ்சமடைந்திருப்போரின் நல்வாழ்வுக்காக வேண்டல்.

**2. தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம் ஆரம்பமாகின்றது.**
பழைய ஏற்பாடு, கிறிஸ்துவின் வருகைக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு இனத்தைக் கடவுள் ஆயத்தப்படுத்திய வரலாறாகும். அது கிறீஸ்துவை மையப்படுத்தியதாகவே இருந்தது. இப்போது அது நிறைவேற ஆரம்பித்துள்ளது.
**வேண்டுதல் :-** எம்மிடமிருந்து இறைவன் எதை எதிர்பார்க்கிறாரோ அதைத் தெரிந்துகொள்ளவும், அதன்படி வாழவும் வரம் கேட்டல்.

**3. விண்ணுலகின் மகிழ்ச்சி :** *உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை* என்ற தூதர்களின் பாடல் மூலமாக மண்ணுலகுக்குத் தெரிவிக்கப்படுகின்றது.
**வேண்டுதல் :-** விண்ணுலகத்தின் மகிழ்ச்சிக்கான வாழ்வாக நமது வாழ்வை மாற்றிக்கொள்ள இறைவனிடம் வரம் வேண்டல். “மனம் திரும்பும் ஒரு பாவியின் மட்டில் விண்ணுலகில் அதிக மகிழ்ச்சி உண்டாயிருக்கின்றது” கிறிஸ்து.

**4. முதலில் எளியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது.**
மந்தையைக் காவல் காத்துநின்ற இடையருக்கே முதல் மரியாதை. அவர்களுக்குத்தான் கடவுளைத் தரிசிக்க முதல் அழைப்பு (லூக் 2:10-11).
**வேண்டுதல் :-** 1. ஏழ்மையையும், தாழ்மையையும் நேசிக்கும் வாழ்வைத் தரவேண்டுதல்.
2. இறைவனை நாம் நலிவுற்றோரில் கண்டு பணிசெய்ய வேண்டல்.

**5. கிறிஸ்துவின் பிறப்பு ஒரு தனி இனத்துக்குமான மீட்பன்று, முழு உலகத்துக்குமான மீட்பு: என்பது திருக்காட்சியில் நிரூபிக்கப்படுகின்றது.**
“அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சி-யூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்துள்ளார்” (லூக் 2:10-11).
“வீட்டுக்குள் அவர்கள் போய்க் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள். நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள்” (மத் 2:11).
**வேண்டுதல் :-** கிறிஸ்து நம் ஆண்டவர், நம் இறைவன், நமக்காகப் பிறந்த மீட்பர் என்று ஏற்றுக்கொண்டு அவரை மட்டுமே ஆராதிக்க வரம் வேண்டல்.

**6. ஆதியில் இறைவன் முதற்பெற்றோருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்றார்.**
“உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம்” (தொ.நூ.3:15.).
**வேண்டுதல் :-** கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் அளித்திருக்கும் வாழ்வு தனித்துவமானது. இதைப் புரிந்துகொண்டு நமது வாழ்வை வாழும் வரம் கேட்டல்.

**நான்காவது மகிழ்ச்சிநிறை மறையுண்மை :-**
தேவதாயும் சூசையப்பரும் திருக்குழந்தையை தேவாலயத்தில் காணிக்கையாக்கி மகிழ்கின்றனர். இம்மறையுண்மையில் விரியும் ஏனைய நிகழ்வுகள்.

1. பிறந்தது கடவுளின் குழந்தையாகினும் குறிக்கப்பட்ட நியமங்-களுக்கு அமைய எல்லாச் சடங்குகளும் நிறைவேற்றப்படுகின்றன. தூய்மைச் சடங்கு இங்கு நிறைவேற்றப்படுகின்றது. “ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும் என்று ஆண்டவருடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது. அச்சட்டத்தில் கூறியுள்ளவாறு இரு மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக் குஞ்சுகளை அவர்கள் காணிக்கையாகக் கொடுக்கவேண்டியிருந்தது. (லூக் 2:23-24).



**வேண்டுதல் :-** இறைவனின் திருச்சித்தத்துக்கு அமைவான திருச்சபையின் கட்டமைப்பைப் புரிந்துகொண்டு அதற்கிசைய வாழ வரம் கேட்டல்.
2. இறைவன் தங்களுக்குத் தந்த குழந்தைச் செல்வத்துக்காக மரியாளும், சூசையும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றனர்.
**வேண்டுதல் :-** இறைவன் எங்களுக்கு வழங்கும் ஒவ்வொரு வினாடி வாழ்வும் வரங்களே. இவற்றோடு இணைந்து எவ்வளவு கொடைகள் உணவு, உடை, வீடு வாசல், பதவி, வருமானம், கல்வி, பிள்ளைகள், அவர்களின் திறன்கள், ஆற்றல்கள் இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இவற்றிற்காக நன்றி கூறுதல்.
3. கிறிஸ்துதான் மீட்பர் என நான்காம் நபர் இனம் காட்டுகின்றார். சிமியோன் “ஆண்டவரே உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்யும். ஏனெனில் மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன (லூக் 2:29:31). முதலாவது கபிரியேல் தூதன், இரண்டாவது எலிசபேத் அம்மாள், மூன்றாவது இடையருக்கு அறிவித்த தூதன், நான்காவது சிமியோனுக்கு அறிவிக்கிறார்.
**வேண்டுதல் :-** எமது அயலில் ஏழ்மையில் இருக்கின்ற கிறிஸ்தவர்களை இனம்காணவும் அவர்களுக்கு உதவவும் வரம் கேட்டல்.

**ஐந்தாவது மகிழ்ச்சிநிறை மறையுண்மை:**
மூன்று நாட்கள் மகனைத் தேடி மூன்றாம் நாள் ஜெருசலேம் தேவாலயத்தில் கண்டு மரியாளும் சூசையும் மகிழ்கின்றனர். “அவரைக் காணாததால் அவரைத் தேடிக்கொண்டு எருசலேமுக்-குத் திரும்பிச் சென்றார்கள். மூன்று நாட்களுக்குப் பின் அவரைக் கோவிலில் கண்டார்கள். (லூக். 2:45-46)
இந்த மறையுண்மையில் விரியும் நிகழ்வுகள்.
1. பாஸ்கா விழா ஆண்டுதோறும் ஜெருசலேமுக்குப் போவார்கள் (லூக் 2:41)
**வேண்டுதல் :-** ஒவ்வொரு நாளும் கடவுளால் வழங்கப்படும் கொடை என்பதை ஏற்றுக்கொண்டு அதைத் தகுந்த விதமாக வாழ இறைவனிடம் வரம்வேண்டல்
2. பன்னிரெண்டு வயதிலேயே யேசு இறையரசை, இறைவார்த்தை-யை வாழ்ந்து அதைப் பிறருக்கு அறிவிக்கின்றார். அவற்றைக் கேட்ட அனைவரும் அவருடைய புரிந்துகொள்ளும் திறனையும் அவர் அளித்த பதிலையும் கண்டு மலைத்துப் போயினர். அவருடைய பெற்றோரும் அவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். (லூக் 2:47-48)
**வேண்டுதல் :-** இறையரசை, இறைவார்த்தையை அறிவிக்க வயது ஓர் எல்லை இல்லை. எல்லா வயதினரும் எல்லா நிலை-யினரும் செய்யக்கூடிய பணியே இது. இதற்கான சிறப்பு வரத்துக்காக வேண்டல்.
3. கிறிஸ்து இறைச்சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவே பிறந்தார், வாழ்ந்தார், பாடுகள் பொறுத்து சிலுவையில் உயிர் நீத்தார். “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள். நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?” (லூக் 2:49)
**வேண்டுதல் :-** நம்மை வழிநடத்துகின்ற இறைத்திட்டத்திற்காக நன்றி கூறுதல். இறைவன் நம்மைக் கரம்பிடித்து அழைத்துச் செல்லவும் வேண்டல்.
4. தமது ஒரே மகனைக் காணாததால் மரியாளும் சூசையும் படும் அங்கலாய்ப்பும், துயரமும் கண்டடைந்தபோது ஏற்படும் மகிழ்வும்.
**வேண்டுதல் :-** நமது வாழ்வில் மறைக்கப்பட்டிருக்கும் மறைந்திருக்கும் நன்மைத்தனங்கள் யாவும் கடவுளின் அருளால் கைகூடவும், சிறப்பாக நமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகவும் வேண்டுதல்.
இவ்விதம் மகிழ்ச்சி நிறை மறை உண்மைகளைப் பார்த்தோம். தொடர்ந்து அடுத்த இதழில் துயரம் நிறைந்த உண்மைகளைப் பற்றிப் பார்ப்போம்.

*(இத்தொடர் பற்றிய உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன)*

# நாற்பது நாட்கள்



(சென்ற இதழ் தொடர்ச்சி)

அருட்பணி. கி. அந்தோனிதாஸ் டலிமா

## திரு விவிலியத்தில் நோன்பின் பண்புகள்

### 01. சட்டங்களாக :-

1. ஏழாம் மாதம் பத்தாம் நாள் குடிமக்களும் உங்களோடு வாழும் அன்னியரும் வேலை ஒன்றும் செய்யாமல் நோன்பிருக்க வேண்டும். இது உங்களுக்கு என்றுமுள்ள நியமம் ஆகும். (லேவி. 16:29)

2. அது உங்களுக்கு நோன்பு நாள். அந்த நாள் நீங்கள் முழு ஓய்வெடுக்கும் ஓய்வு நாள். இது என்றுமுள நியமம் ஆகும். (லேவி. 16:31)

### 02. ஆண்டவரிடம் ஆலோசனை பெற :-

1. இஸ்ரயேல் மக்கள் அனைவரும் பெத்தேலுக்கு வந்து அழுதனர். அங்கே ஆண்டவர் திருமுன் அமர்ந்து அன்று மாலைவரை உண்ணா நோன்பு இருந்தனர். மேலும் அவர்கள் எரிபலிகளையும் நல்லுறவுப் பலிகளையும் ஒப்புக்கொடுத்தனர். (நீதி. 20:26)

2. அப்பொழுது யோசபாத்து அச்சமுற்று, ஆண்டவரை நாடுவதில் உறுதிபூண்டு, யூதா மக்கள் யாவரும் நோன்பிருக்குமாறு கட்டளையிட்டார். (2 குறி. 20:3)

3. சூசானில் காணப்படும் அனைத்து யூதரையும் ஒன்று சேர்ப்பீராக! எனக்காக நோன்பிருந்து, மூன்றுநாள் இரவு பகல் உண்ணாமலும், குடியாமலும் இருப்பீராக! நானும் என் செவிலியரும் அவ்வாறே நோன்பிருப்போம். சட்டத்திற்குப் புறம்பே எனினும் நான் மன்னரிடம் செல்வேன்! அழிவதாயின் அழிகின்றேன். (எஸ். 4:16)

4. அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரை வழிபடும்போது தூய ஆவியார் அவர்களிடம், 'பர்னபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்கென நான் அழைத்திருக்கிறேன். அந்தப் பணிக்காக அவர்களை ஒதுக்கிவையுங்கள்' என்று கூறினார். (திப. 13:2)

5. அவர்கள் நோன்பிருந்து இறைவனிடம் வேண்டினார்கள்: தங்கள் கைகளை அவ்விருவர்மீது வைத்துத் திருப்பணியிலமர்த்தி அவர்களை அனுப்பி வைத்தார்கள். (திப. 13:3)

6. அவர்கள் ஒவ்வொரு திருச்சபையிலும் மூப்பர்களைத் தேர்ந்தெடுத்து நோன்பிருந்து இறைவனிடம் வேண்டித் தாங்கள் நம்பிக்கைகொண்டிருந்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தார்கள்: (திப. 14:23)

7. இவ்வாறு பல நாள்கள் கழிந்தன. நோன்பு நாளும் ஏற்கெனவே கடந்துவிட்டது. அதன்பிறகு கப்பலில் பயணம் செய்வது ஆபத்தானது என்று பவுல் ஆலோசனை கூறினார். (திப. 27:9)

### 03. இறைவனிடமிருந்து இரக்கம், மன்னிப்பு, (மனமாற்றம்) பெற :-

1. ஆகவே அவர்கள் மிஸ்பாவில் ஒன்றுகூடி தண்ணீர் மொண்டு ஆண்டவர் திருமுன் ஊற்றி, அன்று நோன்பிருந்து, 'ஆண்டவருக்கு எதிராக நாங்கள் பாவம் செய்துவிட்டோம்" என்று அறிக்கையிட்டார். சாமுவேல் மிஸ்பாவில் தங்கி இஸ்ரயேல் மக்களுக்கு தலைவராய் இருந்தார். (1 சாமு. 7:6)

2. அச்சொற்களை ஆகாபு கேட்டவுடன் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு வெற்றுடல்மீது சாக்கு உடை உடுத்தி, நோன்பு காத்துச் சாக்குத்துணிமீது படுத்தான்: பணிவோடு நடந்துகொண்டான். (1அர. 21:27)

3. இவற்றைப்பற்றிக் கேள்விப்பட்டதும் நான் உட்கார்ந்து அழ ஆரம்பித்தேன்: பல நாள்கள் துக்கம் கொண்டாடினேன்: மேலும் நான் நோன்பிருந்து விண்ணகக் கடவுளின்முன் மன்றாடினேன்: (நெகே. 1:4)

4. சாக்கு உடை அணிந்து, புழுதியைத் தங்கள்மேல் பூசிக் கொண்டு நோன்பிருக்குமாறு அம்மாதத்தின் இருபத்து நான்காம் நாளன்று மக்கள் ஒன்றுகூட்டப்பட்டனர். (நெகே. 9:1)

5. மன்னரின் வார்த்தையும் நியமமும் எந்தெந்த மாநிலங்களை அடைந்தனவோ, அங்கெல்லாம் இருந்த யூதரிடையே பெரும் புலம்பலும், நோன்பும், கண்ணீரும், அழுகையும் விளங்க, அனைவரும் சாக்கு உடை அணிந்து சாம்பல் பூசிக்கொண்டனர். (எஸ். 4:3)

6. ஆதலால் நீ அங்குப் போ. நோன்பு நாளன்று அங்கு குழுமியிருக்கும் மக்களின் செவிகளில் விழும்படி, நான் சொல்லச் சொல்ல நீ எழுதி வைத்த ஆண்டவரின் சொற்களை ஏட்டுச்சுருளினின்று படித்துக்காட்டு. தம் நகர்களிலிருந்து அங்குவரும் யூதா மக்கள் அனைவரும் கேட்கும்படியும் நீ அதை வாசித்துக்காட்டு. (எரே. 36:6)

7. யோசியாவின் மகனும் யூதாவின் அரசனுமான யோயாக்கிம் ஆட்சியேற்ற ஐந்தாம் ஆண்டு ஒன்பதாம் மாதத்தில் எருசலேம் மக்கள் எல்லாரும், யூதாவின் நகர்களினின்று எருசலேமுக்கு வந்திருந்த மக்கள் அனைவரும் ஆண்டவர் திருமுன் நோன்பு இருந்தனர். (எரே. 36:9)

8. நான் நோன்பிருந்து சாக்கு உடை அணிந்து சாம்பலில் அமர்ந்து என் தலைவராகிய கடவுளிடம் திரும்பி மன்றாடி வேண்டிக்கொண்டேன். (தானி. 9:3)

9. உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள்: வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள்: ஊர்ப்பெரியோரையும் நாட்டில் குடியிருப்போர் அனைவரையும் உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்தில் கூடிவரச் செய்யுங்கள்: ஆண்டவரை நோக்கிக் கதறுங்கள். (யோவே. 1:14)

10. இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள் என்கிறார் ஆண்டவர். (யோவே. 2:12)

11. சீயோனில் எக்காளம் ஊதி எச்சரியுங்கள்: புனிதமான உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள்: வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள். (யோவே. 2:15)

12. நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக்கொண்டனர். (யோனா.3:5)

13. அதற்குச் செவிசாய்த்த யாவரும் அழுது உண்ணா நோன்பிருந்தனர்: ஆண்டவர் திருமுன் வேண்டுதல் செய்தனர். (பாரூ. 1:5)

### 04. இழப்பிலும் கவலையிலும் :-

1. பின்பு அவர்களுடைய எலும்புகளை எடுத்து யாபேசில் தமரிஸ்கு மரத்தின் அடியில் புதைத்துவிட்டு, ஏழு நாள்கள் நோன்பு இருந்தனர். (1 சாமு. 31:13)

2. சவுலுக்காகவும் அவருடைய மகன் யோனத்தானுக்காகவும் ஆண்டவரின் மக்களுக்காகவும் இஸ்ராயேல் வீட்டாருக்காகவும் அவர்கள் அழுது புலம்பி மாலைவரை நோன்பு இருந்தார்கள். ஏனெனில் அவர்கள் வாளால் மடிந்துவிட்டார்கள். (2 சாமு. 1:12)

3. அப்போது அவர்களுள் வலிமைமிக்கோர் அனைவரும் புறப்பட்டுச்சென்று சவுலின் பிணத்தையும், அவர் புதல்வர் பிணங்களையும் எடுத்து அவற்றை யாபேசுக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்த ஒரு கருவாலி மரத்தடியில் அவர்கள் எலும்புகளை அடக்கம் செய்து, ஏழு நாள் நோன்பிருந்தனர். (1குறி. 10:12)

4. நோன்பிருந்து நான் நெக்குருகி அழுதேன்: அதுவே எனக்கு இழிவாய் மாறிற்று. (திபா. 69:10)

5. நோன்பினால் என் முழங்கால்கள் தளர்வுறுகின்றன: என் உடல் வலிமை இழந்து மெலிந்துபோகின்றது (திபா. 109:24)

### 05. இறைவனிடமிருந்து அருள் பெற :-

1. தாவீது அக்குழந்தைக்காக ஆண்டவரிடம் மன்றாடினார். உண்ணா நோன்பு மேற்கொண்டு உள்ளே சென்று இரவெல்லாம் படுத்துக்கிடந்தார். (2 சாமு. 12:16)

2. குழந்தை உயிரோடிருந்தபோது ஒருவேளை ஆண்டவர் இரங்குவார்: அவனும் பிழைப்பான் என்று நினைத்து நான் உண்ணா நோன்பிருந்து அழுதேன். (2 சாமு. 12:22)

3. இப்போது அவன் இறந்துவிட்டான். இனி நான் ஏன் உண்ணா நோன்பு இருக்கவேண்டும்? என்னால் அவனைத் திருப்பி கொண்டுவர முடியுமா? நான்தான் அவனிடம் சொல்ல முடியுமே ஒழிய, அவன் என்னிடம் திரும்பி வர மாட்டான் என்று கூறினார். (2 சாமு. 12:23)

### 06. சுயநலத்திற்காக :-

1. அம்மடல்களில் அவள், நீங்கள் ஒரு நோன்பு அறிவித்து நாபோத்தை மக்கள் முன்னிலையில் அமரச் செய்யுங்கள். (1 அர.21:9)

2. அவர்கள் ஒரு நோன்பு அறிவித்து, நாபோத்தை மக்கள் முன்னிலையில் அமர்த்தினர். (1 அர. 21:12)

### 07. இறைவனிடமிருந்து வரும் பாதுகாப்பையும், வெற்றியையும் பெற :-

1. இதன்பின் எங்கள் கடவுள்முன் எங்களையே நாங்கள் தாழ்த்திக் கொண்டு, எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும், எங்கள் எல்லா உடைமைகளுக்கும் பயணம் நலமாக அமைய வேண்டுமென்று மன்றாடுமாறு, அகவா ஆற்றருகே நோன்பு ஒன்று அறிவித்தேன். (எஸ்ரா. 8:21)

2. எனவே நாங்கள் நோன்பிருந்து, இதற்காக எங்கள் கடவுளிடம், வேண்டிக்கொண்டோம். அவரும் எங்கள் மன்றாட்டைக் கேட்டருளினார். (எஸ்ரா. 8:23)

3. இஸ்ரயேலின் ஆண்கள் யாவரும் கடவுளை நோக்கி மிகுந்த ஆர்வத்துடன் கூக்குரலிட்டார்கள்: நோன்பிருந்து தங்களையே தாழ்த்திக்கொண்டார்கள். (யூதி. 4:9)

4. ஆண்டவர் அவர்களது குரலுக்குச் செவிசாய்த்தார்: அவர்களது கடுந்துன்பத்தைக் கண்ணுற்றார்: ஏனெனில், யூதேயா முழுவதிலும் எருசலேமில் எல்லாம் வல்ல ஆண்டவரது கோவில் முன்னிலையிலும் மக்கள் பல நாள் நோன்பிருந்தார்கள். (யூதி.4:13)

5. நீர் போய், சூசாவில் உள்ள யூதர்களை ஒன்றுகூட்டும். எல்லாரும் எனக்காக உண்ணா நோன்பிருங்கள். இரவு பகலாக மூன்று நாள்களுக்கு உண்ணவோ பருகவோ வேண்டாம். நானும் என் பணிப்பெண்களுங்கூட நோன்பிருப்போம். அதன்பின் சட்டத்துக்கு எதிராக நான் மன்னரிடம் செல்வேன். இதனால் நான் இறக்க வேண்டியிருந்தாலும் சரியே என்றார். (எஸ்(கி). 4:16)

6. அன்று அவர்கள் நோன்பிலிருந்து சாக்கு உடை உடுத்தித் தலைமீது சாம்பலைத் தூவி, தங்கள் ஆடைகளைக் கிழித்துக் கொண்டார்கள். (1 மக். 3:47)

7. அவர்கள் எல்லாரும் அவ்வாறே செய்தார்கள்: மூன்று நாள் இடைவிடாமல் கண்ணீர் சிந்தி உண்ணா நோன்பிருந்து குப்புற விழுந்து இரக்கமுள்ள ஆண்டவரை மன்றாடினார்கள். தக்க ஏற்பாடுகளோடு இருக்குமாறு யூதா அவர்களுக்கு ஊக்கமூட்டினார். (2 மக். 13:12)

8. அவர் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார். அதன் பின் பசியுற்றார். (மத். 4:2)

9. இவ்வகைப் பேய் இறை வேண்டலினாலும் நோன்பினாலுமேயன்றி, வேறு எதனாலும் வெளியேறாது என்றார். (மத். 17:21)

### 08. இறைவன் அளித்த விடுதலையை மகிழ்ந்து கொண்டாட :-

1. யூதராகிய மொர்தக்காயும் அரசி எஸ்தரும் இட்ட ஆணையின்படி, பூரிம் என்ற இந்த நாள்களை யூதரும் அவர்களின் வழிமரபினரும் குறிக்கப்பட்ட காலத்தில் நோன்பு, புலம்பல் நாள்களாகக் கடைப்பிடிக்க வேண்டும். (எஸ். 9:26)

### 09. அனைவரின் தேவைக்காகவும் (பரிந்துரைச் செபம்) :-

1. நானோ, அவர்கள் நோயுற்றிருந்தபோது சாக்கு உடுத்திக் கொண்டேன்: நோன்பிருந்து என்னை வருத்திக்கொண்டேன்: முகம் குப்புற வீழ்ந்து மன்றாடினேன். (திபா. 35:13)

### 10. இறைவன் சொல்வதும் விரும்புவதுமான நோன்பு :-

1. நாங்கள் உண்ணா நோன்பிருந்தபொழுது, நீர் எங்களை நோக்காதது ஏன்? நாங்கள் எங்களைத் தாழ்த்திக் கொண்டபோது நீர் எங்களைக் கவனியாதது ஏன்? என்கிறார்கள். நீங்கள் நோன்பிருக்கும் நாளில் உங்கள் ஆதாயத்தையே நாடுகின்றீர்கள்: உங்கள் வேலையாள்கள் அனைவரையும் ஒடுக்குகின்றீர்கள். (எசா. 58:3)

2. இதோ, வழக்காடவும், வீண் சண்டையிடவும், கொடும் கையால் தாக்கவுமே நீங்கள் நோன்பிருக்கிறீர்கள்! இன்றுபோல் நீங்கள் உண்ணா நோன்பிருந்தால் உங்கள் குரல் உன்னதத்தில் கேட்கப்படாது. (எசா. 58:4)

3. ஒருவன் தன்னை ஒடுக்கிக்கொள்ளும் நாளையா நான் உண்ணாநோன்பின் நாளாகத் தெரிந்துகொள்வது? ஒருவன் நாணலைப்போல் தன் தலையைத் தாழ்த்திச் சாக்கு உடையையும் சாம்பலையையும் அணிந்துகொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? இதையா நீங்கள் நோன்பு என்றும் ஆண்டவருக்கு உகந்த நாள் என்றும் அழைக்கின்றீர்கள்? (எசா. 58:5)

4. கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு! (எசா. 58:6)

5. பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக்கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு! (எசா. 58:7)

6. படைகளின் ஆண்டவரது கோவிலில் இருக்கும் குருக்களையும் இறைவாக்கினர்களையும் கண்டு, 'நாங்கள் இத்தனை ஆண்டுகளாகச் செய்துவந்ததுபோல் ஐந்தாம் மாதத்தில் நோன்பிருந்து புலம்ப வேண்டுமா? என்று கேட்டு வரவும் இவர்களை அனுப்பினார்கள். (செக். 7:3)

7. நாட்டின் எல்லா மக்களுக்கும் குருக்களுக்கும் நீ கூறவேண்டியது: இந்த எழுபது ஆண்டுகளாக ஐந்தாம் மாதத்திலும் ஏழாம் மாதத்திலும் நோன்பிருந்து ஓலமிட்டு அழுதீர்களே, எனக்காகவா நோன்பிருந்தீர்கள்? (செக். 7:5)

8. படைகளின் ஆண்டவர் கூறுவது இதுவே: நான்காம் மாதத்தின் நோன்பும், ஐந்தாம் மாதத்தின் நோன்பும், ஏழாம் மாதத்தின் நோன்பும், பத்தாம் மாதத்தின் நோன்பும் யூதா குடும்பத்தார்க்கு மகிழ்ச்சியும் களிப்பும் நிறைந்த மாபெரும் திருவிழா நாள்களாக மாறிவிடும். ஆதலால் வாய்மையையும் நல்லுறவையும் நாடுங்கள். (செக். 8:19)

9. தம் கைம்மைக் காலத்தில் ஓய்வுநாளுக்கு முந்தினநாளும் ஓய்வுநாள் அன்றும், அமாவாசைக்கு முந்தின நாளும் அமாவாசை அன்றும், இஸ்ரயேல் இனத்தாருக்குரிய திருநாள்கள், மகிழ்ச்சியின் நாள்கள்தவிர மற்ற நாள்களில் நோன்பிருந்து வந்தார். (யூதி. 8:6)

10. மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப்போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக்கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். (மத். 6:16)

11. நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். (மத். 6:17)

12. அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது: மாறாக. மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார். (மத். 6:18)

13. பின்பு யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து, நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை? என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள். (மத். 9: 14-15)

14. அவருக்கு வயது எண்பத்து நான்கு. அவர் கோவிலைவிட்டு நீங்காமல் நோன்பிருந்து மன்றாடி அல்லும் பகலும் திருப்பணி செய்துவந்தார். (லூக். 2:37)

*(தொடர்ச்சி 19ம் பக்கம்...)*

வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை
இலகு தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!

# வாழ்வும் வழிபாடும்

தருவது வலண்டின் ஜோசப்





## வழிபாடும் ஓர் இயக்கமே

தொடர் – 15

இது கணினிகளின் காலம். எந்தவொரு செயலையும் விரைவாகவும், துல்லியமாகவும் செய்ய பல்வேறு உத்திகள் உருவாகிவிட்டன. இந்தக் காலக்கட்டத்தில் மக்களின் கூட்டமைப்புகள் கூட 'இயக்கங்களாக' மாறிக்கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு குடும்ப விழாவுக்குக் கூடுபவர்களிடம்கூட, ஏதாவது சாதிக்க வேண்டும், வீணாக நேரத்தை செலவழிக்கக்கூடாது என்ற எண்ணம் உருவாகிக்கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் வழிபாட்டுக்கு வரும் மக்கள் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து வருகின்றார்கள். தங்கள் சுமைகளையெல்லாம் சொல்லி ஆறுதல் பெறவோ, இறையனுபவத்தைப் பெறவோ, நம்பிக்கையில் உறுதிபெறவோ மக்கள் ஆலயங்களுக்கு வந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்த மக்களின் அடிப்படையான ஆழமான தேவைகளை வழிபாடு எப்படிச் சந்திக்கிறது? எப்படியெல்லாம் உருமாற்றுகிறது? என்பதைச் சிந்திப்பதே சிறப்பான அனுபவமாக இருக்கின்றது.

### இயக்கம் I

### ஒன்றுகூட்டுபவர் இறைவன்

வழிபாட்டின் மையம் ஒன்றுகூடுகின்ற மக்கள் கூட்டம். இந்து சமயம் போன்ற பிற சமயங்களில் தனியாகவோ அல்லது குடும்பமாகவோ சென்று ஆண்டவனை சந்தித்துவிட்டு வருவதே வாடிக்கை. ஆனால், கிறிஸ்தவ சமயத்தில் வழிபாடு என்றாலே அங்கு 'இறைமக்கள் கூடுதல்' தேவைப்படுகின்றது.

இறைமக்களை ஒன்றுகூட்டுபவர் இறைவன் என்பது கிறிஸ்தவ மதத்தின் ஆழமான நம்பிக்கை. என்ன அடிப்படையில் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடுகின்றார்கள் என்பதை இறைவன் மட்டும் அறிவார். திருமுழுக்கு பெற்ற எவருக்கும் எந்தவொரு வழிபாட்டுக் கூட்டத்திலும் பங்குபெற உரிமை இருக்கிறது.

இது ஒரு குடும்ப வழிபாடு என்றோ, சாதிய வழிபாடு என்றோ, துறவற சபையைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே உரிய வழிபாடு என்றோ எந்த நபரையும் திருச்சபையின் வழிபாட்டிலிருந்து ஒதுக்கிவைக்க முடியாது.

கொரிந்து நகரில் பணக்கார, ஏழை வேறுபாடுகள் இருந்த நேரத்தில், பவுல் அடியார் திருவழிபாட்டுக் கூட்டத்திற்கு மக்களை அனுமதிக்கவில்லை என்பதை அவரது திருமுகமே காட்டுகின்றது. (1கொரி 11:27 தொ).

நம்முடைய தமிழ் சமுதாயத்தில் சாதி வேறுபாடுகளால் மக்கள் வழிபாட்டில் பிரித்துவைக்கப்பட்ட நேரங்களில் ஒரு சில பணியாளர்கள் எவ்வளவு சிறப்பான விதத்தில் இறைவாக்குப் பணி செய்து வழிபாட்டில் சாதியத்தை வேரறுத்தார்கள் என்பது நமக்குத் தெரியும்.

இறைமக்களின் சமமான மாண்புமிக்க ஒன்றுகூடுதல் ஒன்றே வழிபாட்டின் முதல்நிலை. இவ்வாறு கூடுகின்ற நேரத்தில் இறை செய்தி உடனிருக்கும் ஒவ்வொருவர் மூலமாகவும் கிடைக்கின்றது என்பது வழிபாட்டு இயலின் மற்றொரு நம்பிக்கை.

இறைவனால் அழைத்துவரப்பட்ட நபர் இறைச் செய்தியைத் தாங்கிவருகிறார் என்பது நிச்சயம்தானே! ஒருவர் ஒருவரை ஏற்றுக்கொள்ளும் நேரத்தில் புதியதொரு உணர்வுபூர்வமான இயக்கமே அங்கு உருவாகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. வாழ்த்தும், அறிமுகமும், ஒப்புரவும், இணைந்து செபிப்பதும் இந்த இயக்கத்தைத் தீவிரப்படுத்துகின்றன.

### இயக்கம் II

### இறைவார்த்தையும் பதில் மொழியும்

இறைவார்த்தை இல்லாமல் எந்தவொரு வழிபாடும் இருக்க முடியாது என்பது திருச்சபையின் தீர்க்கமான முடிவு. ஒப்புரவு அருளடையாளத்தில்கூட இறைவார்த்தையை முதன்மைப்படுத்தவே அண்மைக் காலத்துத் திருச்சபை ஆவணங்கள் நம்மைப் பணிக்கின்றன.

இறைவார்த்தை என்பது ஏதோ விவிலியத்தை வாசித்து விளக்குவது மட்டுமல்ல. இறைவார்த்தையே இறைமக்கள் நடுவில் நடக்கின்ற ஓர் இயக்கமாகும். இறைவார்த்தை என்பது இறைவன் எவ்வாறு செயல்படுகின்றார் என்பதைக் காட்டும் காவியத் தென்றல். கேட்கின்ற இறைமக்கள் உளம் திறந்து அந்த இறைவார்த்தைக்குப் பதில்தர முயல்கின்றனர். வாசிக்கப்படும் இறைவார்த்தை மக்களின் இதயங்களை ஊடுருவும்போது பிறக்கும் இனிய உணர்வுகளே பதிலுரைகள்.

இறை வார்த்தை முழக்கம்
↓
மக்களின் பதிலுரை
↓
பொங்கி எழும் நம்பிக்கை உணர்வுகள்
↓
பக்குவமான பகிர்வு
↓
புதிதாகப் பிறக்கும் வாழ்வு தரும் இறைவார்த்தை

இவை திருப்பாடல்களாகவோ, விவிலிய வார்த்தைகளைக் கொண்டு அமைத்த கீதங்களாகவோ எழுவது நமது வழிபாட்டின் அமைப்பு. இந்தப் பதிலுரைப்பாடல்கள் மக்கள் மத்தியில் பதிலாகும் நம்பிக்கை உணர்வுகளை வளர்த்தெடுக்கின்றன. இறைவார்த்தையும், விவிலியப் பதில் மொழிகளும் ஏதாவது ஒரு தாக்கத்தை இறைமக்களின் உள்ளங்களில் உருவாக்குகின்றது.

இந்த உணர்வுகளைப் பக்குவமாகப் பகிர்வதற்கு வழிபாடு வாய்ப்பு அளிக்கின்றது. பொதுவாக கத்தோலிக்க வழிபாட்டில் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்புத் தரப்படுவதில்லை என்பதுதான் பலரின் குறைபாடு. ஒருவேளை சுதந்திரமாக விரும்புபவர்களையெல்லாம், விரும்பியபடியெல்லாம் பேசச்செய்வது கத்தோலிக்கத் திருச்சபையின் நோக்கமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், திருச்சபையின் வழிபாடுகள் விசுவாச உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்புக்கள் கொடுக்கின்றன. செபங்களாக, அனுபவப்பகிர்வாக நம்பிக்கை மனநிலையாக, பதிலுரையாக, பாடலாக, ஏன் அங்க அசைவுகளாகக்கூட இந்தப் பகிர்வுகள் நடக்கின்றன. இதற்கான வாய்ப்புக்களை, பொது நலனையும் நம்பிக்கை உணர்வையும் பாதிக்காத வகையில் இறைமக்களுக்கு வழங்கத் திருச்சபை தயாராக உள்ளது. பகிர்வில் பிறக்கும் இறைவார்த்தை இறைவனின் அன்றைய உரையாடல், தூய ஆவியானவர் இந்த வார்த்தைகளை ஒவ்வொருவரின் இதயங்களிலும் பொழிகின்றார்.

### இயக்கம் III

### நினைவுகள் நிகழ்வுகளாதல்

நன்றியில் புகழ்தல்
↓
நலம் தரும் பிரசன்னம்
↓
உருவாகும் உயிர் உறவு
↓
உடலெடுக்கும் இறை சக்தி

பெற்றுக்கொண்ட இறைவார்த்தை இயல்பாகவே நன்றி உருவெடுக்கின்றது. யூத சமயத்தில் 'பெராக்கா' என்ற வார்த்தை 'நன்றியால் துதிபாடுதல்' என்ற நல்லதொரு பண்பைக் குறிக்கின்றது. யூதர்கள் ஒன்றுகூடும் நேரத்தில், இறைவன் தங்கள் வாழ்க்கையில் செய்த அரும்பெரும் செயல்களை நினைத்துப் பார்க்கின்றார்கள். இயல்பாகவே நன்றி அவர்களின் இதயத்தில் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இந்தவொரு இனிய பண்பைத்தான் வழிபாட்டு மரபாக நமக்கு அவர்கள் விட்டுச்சென்றிருக்கின்றனர்.

நன்றி, நலம் தரும் இறைபிரசன்னத்தை இந்தப் பூமிக்கு இழுத்து வருகின்றது என்றால் அது மிகையாகாது. நன்றியில் இதயம் தன்னை மறக்கின்ற நேரத்தில் இறைபிரசன்னம் வியப்புக்குரிய விதத்தில் நம்மை வந்தடைகின்றது.

அப்பத்தைப் பிட்டு நன்றி கூறும் நேரம் ஆண்டவன் இயேசுவின் பிரசன்னம் அறியப்படும் முறையில் தங்கள் நடுவே இருப்பதை ஆதிக்கிறிஸ்தவர்கள் உணர்ந்து அனுபவித்தனர்.

எந்தவொரு வழிபாட்டிலும் இயேசுவின் உயிர்ப்புப் பிரசன்னம் இருக்கிறது என்பது காலங்காலமாகக் கிறிஸ்தவர்கள் அனுபவித்து வந்த வாழ்க்கைப் பாடம்.

இந்தப் பிரசன்னம் வழிபாட்டில் உறவாகிறது. இறை உறவை வழிபாட்டில் அனுபவிக்க முடியும் என்பது திருச்சபையின் அனுபவம். இறை உறவை அனுபவிக்க முடியாவிட்டால் வழிபாட்டில் ஏதோ ஒரு குறை இருக்கின்றது என்பது தெளிவு.

இறைவன் அச்சத்திற்குரியவர் அல்லர், அன்பு உறவுக்குச் சொந்தக்காரர். இந்த அன்பு உறவு எல்லாவித மனித உறவுகளையும் கடந்து நிற்பது, எல்லா மனித உறவுகளையும் ஆழமாக்குவது. அந்த உறவை உண்மையிலும் ஆவியிலும் வழிபடும் நேரத்தில் இறைவன் தருகிறார் என்பது சமாரியப் பெண்ணுக்கு இயேசு தந்த மிகப்பெரிய நற்செய்தி.

இயேசுவின் பிரசன்னம் வழிபாட்டில் 'மனுவுரு எடுக்கும்' பிரசன்னமாக மலர்கின்றது. அன்று எவ்வாறு யூத மக்கள் மத்தியில் இறைவன் மனுவுரு எடுத்தாரோ அதே மறைபொருள் வழிபாட்டிலும் நடக்கிறது. அதே இயேசுவைக் காணவும், உரையாடவும் அருமையான வாய்ப்பை அமைத்துத் தருகிறது வழிபாடு.

### இயக்கம் IV

### ஆவியில் ஒன்றிணைதல்

ஆவியில் மகிழ்ச்சி
↓
ஆவியில் ஒன்றிப்பு
↓
ஆவியின் வல்லமை
↓
ஆவியின் சாட்சியம்

திருவழிபாட்டில் இறையாவியின் செயல்பாடுகள் மிகச் சிறப்பானவை. இயேசுவின் பிரசன்னம் உயிரளிக்கும் இறையாவியின் செயல்பாடாக மலர்கிறது. இறையில் மகிழும் இணையில்லாத பேறு இறை மக்கள் சமுதாயத்திற்குக் கிடைக்கின்றது. எந்தவொரு வழிபாட்டிலும் அகமகிழ்தல் இடம்பெறுகிறது. இயேசு ஆவியில் அக்களித்துத்தான் 'அப்பா தந்தையே'! என்று அழைத்தார். "*தூய ஆவியால் யார் இயக்கப்படுகிறார்களோ அவர்கள்தான் கிறிஸ்தவர்கள்*" என்கிறார் பவுல் அடியார்.

ஆவியில் மகிழ்ச்சி என்பது இனிய அனுபவம். இந்த அனுபவம் கிறிஸ்தவ சமுதாயத்தை ஒன்றிக்கச் செய்கிறது. தூய ஆவியானவர் திருப்பலியில் அப்பத்தையும் இரசத்தையும் ஆண்டவரின் உடலாக மாற்றுவதுபோல இறைமக்கள் சமுதாயத்தையும் ஒரே உடலாக மாற்றுகிறார். நாம் அனைவரும் கிறிஸ்துவின் உடல் என்ற இனிய ஒன்றிப்பு நிலையை எய்துகிறோம். கிறிஸ்துவின் உடல் என்ற உள்ளுணர்வு நம்மிடையே உள்ள அத்தனை வேறுபாடுகளையும் அடியோடு களைவதற்கு உதவுகிறது.

ஆவியில் ஒன்றிப்பு என்பதன் முதல் வெளிப்பாடு அடுத்தவரிடம் இருக்கும் ஆவியின் வல்லமையை, அருங்கொடையை உணர்தல். ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான கொடையை இறைவன் தந்திருக்கிறார். அந்தக் கொடையை உணரும் நிலையே ஆவியின் வழிபாட்டின் மற்றொரு இயக்கம். ஆதித்திருச்சபையில் இறைவாக்கு உரைத்தனர், பரவசப் பேச்சுப் பேசினர், குணம் அளித்தனர். நலிந்தவரைத் தூக்கிவிட்டனர் என்றெல்லாம் படிக்கின்றோம். ஆவியின் அருங்கொடையை வழிபாட்டில் உணர்ந்த காரணத்தால்தான் இவ்வாறு நிகழ்ந்திருக்கிறது. அந்த ஆவி சாட்சியம் சொல்ல ஒவ்வொருவரையும் தூண்டியெழுப்புகிறார்.

சாட்சிய வாழ்வு என்பது 'ஆவியின் கொடைகளைச் செயல்படுத்தும் அற்புத வாழ்வு'. *நற்செய்தி அறிவிக்காவிடில் எனக்கு 'ஐயோ கேடு'* என்ற பவுல் அடியாரின் மனநிலை கொண்ட வாழ்வு. இத்தகைய வாழ்வுக்கு நம்மைத் தூண்டுபவர் தூய ஆவியே!

### இயக்கம் V

வழிபாட்டிலிருந்து வாழ்வுக்கு
↓
வர்ழ்த்துச் சொல்லுதல்
↓
ஆசீர் அளித்தல்
↓
வாழ்வுப் பயணம்

திருவழிபாட்டின் மற்றொரு இயக்கம் வாழ்வு நோக்கிய பயணம். இந்தப் பயணம் வாழ்த்தோடு துவங்குகிறது. 'ஒருவருக்கொருவர் சமாதானத்தை அறிவித்துக்கொள்வோம்'. 'ஆண்டவர் உங்களோடு இருப்பாராக' போன்ற வார்த்தைகள் இந்த வாழ்த்துப் பகுதியை வளப்படுத்துகின்றன. மனமார வாழ்த்தும் பண்பு வழிபாட்டில் இன்றியமையாத அருள் தென்றல். வாழ்த்துக்கள் எப்போதும் மனிதர்களின் உன்னதமான உணர்வு வெளிப்பாடுகள்.

வாழ்த்துக்களிலிருந்து இறையாட்சிக்குச் செல்வது மற்றொரு இயக்கம். ஆசீர் மூவொரு இறைவனின் உறவுத் தோழமை. தந்தை – மகன் – தூய ஆவியார் நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நம்மோடு உறவுகொள்ளக் காத்திருக்கிறார் என்ற உறுதியை ஆசீர் நமக்கு அருளுகின்றது. ஆசீர் வழங்கும் பணி திருப்பணியாளருக்கு உரியது என்பது உண்மைதான். ஆனால், வழிபாடு முடிந்தவுடன் இறைமக்கள் அருகில் உள்ளவர்களைச் சந்தித்து ஆசீர் வழங்குவது வழிபாட்டின் இயல்போடு செல்லும் இனிய பண்பு. வழிபாட்டுக்கு முன் அன்னியராக இருந்தவர்கள் கூட வழிபாட்டிற்குப்பின் ஆண்டவரில் உடன் பிறப்புக்களாகின்றனர்.

இந்த வழிபாட்டு இயக்கமே மனிதனை வாழ்வுக்கு உந்தித் தள்ளுவதில்தான் வெற்றியடைகின்றது. புதிய பயணம், புதிய வாழ்வு என்ற புதுமையை ஈன்றெடுப்பதே திருவழிபாடு என்ற இயக்கத்தின் சிகரம்.

## இணையும் இயக்கங்கள்

வழிபாடு என்ற இயக்கம் வாழ்வில் நிகழும் பல்வேறு இயக்கங்களோடு நம்மை இணைக்கிறது. இயற்கையைப் புதுமையாகப் பார்க்கும் இனிய கலையை வழிபாடு கற்றுத் தருகிறது. மனிதர்களின் பல்வேறு புனித இயக்கங்களோடு நம்மையும் இணைத்துக்கொள்ள வழிபாடு தூண்டுகின்றது. ஓடிக் கொண்டிருக்கும் நதியாக மனித வாழ்வை மாற்றி அமைக்கும் பணியைச் செய்யும் திருவழிபாடுகள்தான் மக்களுக்கு இன்று தேவை!

வழிபாட்டை இயக்கமாக்குவது இறைவன் செயல் என்றாலும் அதற்கு இறைவன் பயன்படுத்தும் மொழி மனிதர்களே என்ற உண்மையை இன்னும் நாம் புரிந்துகொள்ளாதது வேடிக்கை தானே!

*(வழிபாடு தொடரும்...)*

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 50

சொல்லின் செல்வர்
இளவாலை அமுது

## அன்னையின் பின்னர் என்ன நடக்கும்?

உலக அந்தங்களில் உள்ள மக்களாலும் மதிப்புப் பெற்றவர் அன்னை. அவரை இறைவனின் அடியாள் என்பதை எதிரிகளும் ஏற்றுக்கொள்வர். இன்று அன்புப் பணியாளர் சபை 123 நாடுகளில் கிளை பரப்பியுள்ளது. 1369 மருத்துவமனைகள், 755 பணிமனைகள், 469 அறிவாலயங்கள் உலகில் சேவையின் தென்றலை வீசுகின்றன. அன்னைக்கு 80 வயதானபோது (1990) இன்னொரு தலைவரைத் தேர்ந்துகொள்வதற்காகக் கல்கத்தாவில் சபையைச் சேர்ந்த கன்னியர்கள் கூடினார்கள். அங்கே வாக்குச்சீட்டு அளிக்கலாயினர். ஒருவரைத்தவிர அனைவரும் சபையை அடியிட்ட அன்னையே தொடர்ந்து தலைமைப் பதவியை ஏற்கவேண்டும் என்று ஆசித்தனர்.

அந்த ஆசையற்ற ஒருவர், அவர்தான் அன்னை திரேசா. இனியும் தொடர்ந்து பணிசெய்யத் தன்னால் இயலாது என்று கடந்த ஆண்டின் இறுதியில் (1996) ஏற்பட்ட சுகவீனத்தின் பின்னர் அன்னை மறுத்துவிட்டார்.

..............................

திரேசாவின் கால்கள் பூமியில் நடமாடினாலும் எல்லை கடந்த தெய்வீக அருள் நிரம்பிய ஆன்மா. மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில் சரியான சமநிலையில் வாழும் புனிதர் என்பர்.

அன்னையை பூமியின் நல்வாழ்வினதும் எல்லை கடந்த கடவுள் பற்றுடைய ஞான ஆன்மாவினதும் ஒரு கூட்டுப்படிவம் என்றும் கூறுகிறார்கள்.

பெயர் பெற்ற இந்திய அறிஞர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள். –

"முற்றிலும் வேறுபட்ட மனிதத் தன்மைகள் எல்லாம் கணக்குவழக்காக ஒன்றுசேர்ந்து பூரணமான மனித வடிவமானால் அந்த மூலகத்தில் இருந்து பிறப்பதே பரிசுத்ததனம்" என்கிறார். அன்னை திரேசாவின் இறையருள் சார்ந்த வழியானது செபமும் தியானமும் உள்ள வாழ்வு அன்புப் பணிபுரிய எவ்வாறு சமநிலைக்கு வந்து தொடர்புகொள்கின்றன எனக் காட்டுகிறது. அவருடைய ஆற்றல் ஒரு விரலில் இருக்கிறது. அந்த விரல் ஆண்டவனைத் தொட்டவாறு இருக்கிறது. கல்கத்தாவுக்கு உலகின் எல்லாத் திசைகளிலுமிருந்து நாளாந்தம் பார்வையாளர் வருகிறார்கள். அங்கே நடைபெறும் பணிகளைப் பார்வையிடுகிறார்கள். சிலர் பணிகளில் தாங்களும் பங்குபற்ற விரும்புகிறார்கள்.

அவ்வாறு பங்குபற்றியவர்களுடைய வாழ்வே திசைமாறி-யிருக்கிறது. உல்லாச வாழ்வையும் அலங்காரங்களையும் பகட்டுகளையும் தூக்கி வீசி எறிந்தார்கள். உணவு – உடை – வீடு என்பவற்றில் அவசிய தேவையை மாத்திரம் கருத்தில் கொண்டார்கள்.

அன்புப் பணியாளர் சபையின் தொண்டர்களாகி ஆங்காங்கு சபைக்குச் சேவை புரிகிறார்கள். சிலர் தியான மடங்களில் சேர்ந்து செப வேண்டுதல்களில் திரும்பினார்கள். செபத்தில் குளித்தால் தெய்வ மணம என்று உணர்ந்தார்கள்.

சிலர் அயலட்டத்தில் பிறர்பணி செய்வதில் ஈடுபட்டார்கள். சிகை அலங்காரம் செய்துவந்த ஆங்கில நாட்டுப் பெண் தொழிலையே நீக்கிவிட்டு ஏழைகளுக்கு ஊழியம் செய்யத் தொடங்கினார். கல்கத்தாவில் பணிமனைகளில் ஏழைகள் மத்தியில் நடைபெறும் சேவைகளில் இறைவனின் அருள் வெள்ளம் மிதந்து கொண்டிருக்கிறதை அவர்கள் மட்டிட நேரம் செல்லவில்லை.

..............................

அன்னை அவர்களுடன் பேசும்போது தன்முன்னால் நிற்பவரில் அன்னை முழுக் கவனமும் செலுத்துபவர். அவர் அமெரிக்க ஜனாதிபதியாய் இருக்கலாம். அல்லது ஐந்து அணா வைத்திருக்கும் வறிய சின்னப் பெண்ணாய் இருக்கலாம். கூட்டத்தில் அன்னை உரையாற்றும் போது ஒவ்வொருத்தரும் தன்னைப் பார்த்துத் தனக்கே இவற்றைக் கூறுகிறார் என்று உணர்வு தட்டும். மனித உள்ளங்களின் வாசலால் ஊடுருவிப் புகுந்துவிடுகிறார்.



"கல்கத்தாவுக்குச் சென்றேன். என் பிற்காலத்தையிட்டு ஒரு தீர்மானம் எடுக்க என்னால் முடியவில்லை. அன்னை மேல்வீட்டில் புதுமணத் தம்பதிகளோடு பேசிக்கொண்டிருந்தார். என்னைத் திரும்பிப் பார்த்தார். எப்போது நீர் தீர்மானம் எடுத்து முடிப்பீர்?" என்று கேட்டார். என்னை முன்பின் அறியாத அன்னை இவ்வாறு கேட்டதும் திடுக்கிட்டேன். சிலையாய்ப் போனேன். என் நிலைமையை ஆழமாய் அன்னை அறிந்துகொண்டார். கோயிலுக்குச் சென்று கண்ணீர் விட்டேன். நீண்டகாலம் பின்போட்டிருந்ததை அன்றே முடிவுக்குக் கொண்டுவந்தேன் என்றார் அந்த இளம்பெண்.

..............................

திருச்சபையின் சட்டங்களில் அன்னை திரேசாவுக்கு திறமை தேவையாயிருக்கவில்லை. பொதுவான விடயங்களில் அவரெடுக்கும் முடிவுகள் போற்றத்தக்கவையாய் இருந்தன. எந்த வினாவுக்கும் தெளிவாக நிதானமாகப் பளிச்சென்று பதில் அளிப்பார். பெண்களைப் பற்றியும் அவர்களுடைய சிறப்பான திருத்தொண்டுகள் பற்றியும் வினவும்பொழுது அன்னை திரேசா தனக்குப் பக்கபலமாக அன்னை மாமரியைத் தொட்டுக்கொள்வார்.

அவர் இயேசுவின் தாயார்.

"மாமரியாள் எங்களுக்குச் சிறப்பான முதற்குருவாய் இருந்திருக்கலாம், ஆனால் அவள் தன்னை இறைவனின் வேலைக்காரி என்றுதான் அழைக்கிறாள்" என்று திரேசா பெண்குலத்துக்கு விளக்கம் அளிக்கின்றார். அன்னை அமைத்த எந்த இல்லங்களிலும் மாமரியின் உருவமே வாசலில் இடம்பெற்றுள்ளது. உய்ர்ந்த பரிசுத்த தனம், தூய்மை, கற்பு, தியாகம், புனிதமான தாய்மை இவற்றின் சாயல் மாமரியே! அன்னை திரேசாவின் வெள்ளைச் சேலையும் நீலக்கோடுகளும் அன்னை மரியாள் உலகில் பல இடங்களில் தோன்றியபோது கண்ட உடையின் தழுவலே!.

*மாமரியே! இயேசுவின் தாயே! உமது இதயத்தை எனக்குத் தந்தருளும். அது அழகுமயமானது, தூய்மையானது, மாசு அணுகாதது, அன்பிலும் மானிட நேசத்திலும் நிரம்பியது. அந்த இதயத்தின் மூலமாக சீவிய அப்பத்தின் இயேசுவைப் பெற்றுக் கொள்வேன். அவரை உம்மைப்போல நேசிப்பேன். மானிட வேடத்தில், துயர் தரும் ஏழைகளிலும் ஏழைகள் மத்தியில் மறைந்திருக்கும் இயேசுவுக்கு உம்மைப்போல சேவை செய்வேன்.*

இந்த வேண்டுதலை அன்னை திரேசாவும் அன்புப் பணியாளர் சபைச் சகோதரிகளும் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். அன்னை திரேசா, தனக்குப்பின் சபையின் சுமைதாங்கியாயிருக்க சக்தி குறைந்த ஒருவரை இறைவன் தெரிவார். வல்லமையின் கரங்களால் வழிநடத்துவார் என்கிறார்.

(கங்கை தொடர்ந்து பாயும்)

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.58

தவக்காலத்தைக் கடந்து கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவில் நிற்கின்றோம். கிறிஸ்துவின் உயிர்ப்புத்தான் திருச்சபையினதும், இறைவார்த்தையினதும் அடி அத்திவாரம். இறைவார்த்தையை மையப்படுத்தியதான சிந்தனைகளை இந்தத் தபசுகாலம் முழுவதும் நாம் கேட்டோம். இறைவார்த்தைத் தியானங்களும், தவக்கால வழிபாடுகளும் நம்மில் உண்மையில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளனவா? இதற்கு நாம் ஒவ்வொருவரும்தான் விடை சொல்ல வேண்டும். "எனக்காகத்தான் இறைவார்த்தை" என்று நினைக்கின்றேனா? "அவர், அடுத்த வீட்டுக்காரர், இவர் இந்தத் தெருவில் இருக்கின்றவர், அவர்கள்தான் இந்த வார்த்தைகளுக்கு எதிராக வாழ்கின்றவர்கள். அவர்களுக்குத்தான் இவை பொருத்தமானவை" என்று பிறருக்கு அதை ஒதுக்கிக் கொடுத்துவிடுகின்றோமா?

***இனி வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் திருத்தூதர்பணி 13ம், 14ம், 15ம் அதிகாரங்களிலிருந்து தொகுக்கப்படுகின்றன.***

1) சவுலும், அவரோடு இருந்தவர்களும் பெருகை நகரிலிருந்து எங்கு சென்றனர்?

2) இஸ்ரயேல் மக்கள் தங்களுக்கு ஓர் அரசர் தேவை என்று கேட்டபோது கடவுள்சவுல் என்பவரை அவர்களுக்கு அளித்தார். இந்தப் சவுல் யாருடைய மகன்?

3) அந்தியோக்கிய செபக்கூடத்திலே ஓய்வுநாளின்போது இஸ்ராயேல் மக்களின் வரலாறு கூறி இயேசுவே உண்மையான மீட்பர் என உறுதிப்படக் கூறிய திருத்தூதர் யார்?

4) திருத்தூதர்கள் பவுலும் பர்ணபாவும் தங்கள் கால்களில் ஒட்டியிருந்த தூசியையும் அந்தியோக்கிய நகர மக்களுக்கு உதறிவிட்டு எங்கு சென்றார்கள்?

5 "நீர் எழுந்து நேராக நில்லும்" என்று கூறி பவுல் நடக்கமுடியாத ஊனமுற்றவரைக் குணமாக்கினார். இது எங்கே நிகழ்ந்தது?

6) திருத்தூதர் பவுலும், பர்ணபாவும் தங்கள் மேலுடைகளைக் கிழித்துக்கொண்டு கூட்டத்துள் பாய்ந்து தம்மைச் சூழ்ந்திருந்த மக்களை பயனற்றவை செய்வதாக ஏன் கூறினர்?

7) யூதர் மக்களைத் தூண்டிவிட்டு, பவுல்மேல் கல்லெறிந்து அவரைக் கொல்ல முயற்சித்தது எங்கே நிகழ்ந்தது?

8) லிஸ்தீராவிலிருந்து பர்ணபாவும் பவுலும் எங்கு சென்றனர்?

9) நாம் பல வேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும்...... இது யாருடைய வாக்கு?

10). பெருகை நகரிலிருந்து திருத்தூதர்கள் வந்து சேர்ந்த இடம் எது?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 56 இற்கான கேள்விகளுக்கு 42 பேர் விடையளித்திருந்தனர்.

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

**பொ. வெரோணிக்கா, 46, வன்னிக்கோட்டம், சிரம்பரபுரம், வவுனியா**

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. ம. அஜிதா சோசை, 6ம் வட்டாரம், வங்காலை
2. அருட்சகோதரி மேரி பற்றீசியா, றம்பாவ, அனுராதபுரம்.
3. ஆர். யேசுராஜா, சின்னக்கரிசல், பேசாலை, மன்னார்.
4. எம். றினோஷன், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
5. இ. நிறோஜனா, வேப்பங்குளம், நேரியகுளம், வவுனியா.
6. அ. கரோலின் கீர்த்திக்கா, 70, பேராலயவீதி, திருகோணமலை.
7. சிறகுடைந்த இளஞ்சிட்டு, தோட்டவெளி, மன்னார்.
8. பா. சோபா வாஸ், குழந்தையேசுபுரம், மன்னார்.
9. இ. ஒலின்ரா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
10. செ. மெலாணி நிசாந்தினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.

# சிலுவையை நோக்கி

பீற்றர் கிறிஸ்பி குரூஸ்,
பேசாலை.

இறைவார்த்தை ஆண்டுக்குள் நாம் நடைபயில தவக்காலத்தின் கதவுகள் திறந்துவிடப்பட்டிருக்கின்றன. தவக்காலம் என்றாலே பலர் நோன்பு இருப்பது, பாதயாத்திரை போவது என்று மட்டும் எண்ணிவிடுகிறார்கள். தவக்காலத்திலே எமது உடலை உள்ளத்தை ஒறுத்து சிலுவையை நோக்கிப் பார்ப்பதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

கிறிஸ்தவ வேதத்தின் அடிப்படை, ஆணிவேர் எல்லாமே இந்தச் சிலுவைதான். கிறிஸ்து சுமந்து சென்று மரித்த சிலுவையை நாம் நோக்கிப் பார்ப்போமானால் அதுவே நமக்கு பாவத்தில் இருந்து மீட்பு வழங்குவதாக அமையும். அதிலிருந்து வழிந்தோடிய இரத்தமே நமக்கு இரட்சணியத்தை அருளியது. அந்தச் சிலுவையை நாம் உற்றுநோக்கிப் பார்ப்போமானால் அந்தச் சிலுவையில் பிரிந்த உயிரே நமக்கு வாழ்வு தந்தது.

சிலுவை அவமானத்தின் சின்னம், அந்தச் சிலுவையை இயேசு மீட்பின் சின்னமாக்கினார். கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நமக்கு அது வெற்றியின் சின்னம். "சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு ..." என்ற வார்த்தையே சிலுவையின் பெருமையை இயம்பி நிற்கின்றது. பவுல் அடியார் கூறுகின்றார், "சிலுவை பற்றிய செய்தி அழிந்துபோகின்றவர்-களுக்கு மடமையே. ஆனால் மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை" (1கொரி 1:18). பெருமை பாராட்ட விரும்புகிறவன் ஆண்டவரைக் குறித்தே பெருமை பாராட்டட்டும் என்று திருமறை கூறுகின்றது. "நானோ நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப்பற்றியும் ஒரு போதும் பெருமை பாராட்டமாட்டேன்". (கலா 6:14) ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது.

ஆதித்தாய் தகப்பன் விலக்கப்பட்ட மரத்தின் கனியை புசித்த அந்தக் கணமே உலகம் சிலுவையில் அறையப்பட்டுவிட்டது. அன்று தீமை செய்த மரம் கருக்கொண்டு உலகம் உண்டானது முதல் முடிவுவரை உள்ள பாவம் அனைத்தையும் பிரசவித்தது. அந்தப் பாவங்களின் கழுவாய்தான் இயேசு தொங்கிய சிலுவை மரம். இயேசு சொல்லுகிறார், "என்னைப் பின்பற்ற விரும்புகின்றவன் தனது சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்பற்றக்-கடவான்". இயேசு எனது சிலுவையைச் சுமந்துகொண்டு என்று சொல்லவில்லை மாறாக தனது சிலுவையை சுமந்துகொண்டு எனது சிலுவையை நோக்கிவரட்டும், எனது சிலுவையில் அவனது சிலுவையை இறக்கிவைக்கட்டும். அவனது வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய விசுவாசப்பயணம் எனது சிலுவையை நோக்கியதாக இருக்கட்டும் என்று கூறுகின்றார்.

"பாலை நிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டதுபோல மானிட மகனும் உயர்த்தப்பட வேண்டும்" (யோவா 3:14) இந்த வார்த்தையிலே நாம் சிலுவையை நோக்கிப் பார்க்க வேண்டும் என்ற உண்மையான கருத்து உணர்த்தப்படுகின்றது. மோசேயால் உயர்த்தப்பட்ட வெண்கலப் பாம்பு விடுதலை கொடுக்கவில்லை. அதைப் பார்க்கும்படி சொன்ன இறைவார்த்தையே விடுதலை வழங்கியது. வேதாகமத்தில் சர்ப்பம் சாத்தானின் குறியீடு. உயர்த்தப்பட்ட வெண்கலச் சர்ப்பமோ கிறிஸ்துவுக்கு நிழலுருவமாக இருந்தது. உலகத்துக்கு பாவத்தைக் கொண்டுவந்தது சாத்தான். உயர்த்தப்பட்ட சர்ப்பத்தைப் பார்க்கும்போது பாவத்தின் நிமித்தம் பாம்பினால் கடிபட்டு விஷமேறியவன் உள்ளம் குத்தப்படுகின்றது. பாவநிலை உணர்த்தப்படுகின்றது. பாவம் செய்ததால் இறைவன் தந்த தண்டனை இது என்று தெளிவடைகிறான். அங்கே பாவ அறிக்கை இடம்பெறுகின்றது. இறைவனின் கரம் தொடுகின்றது, குணமடைகிறான்.

கிறிஸ்துவும் தாம் சிலுவையில் உயர்த்தப்பட வேண்டும் என்று கூறுகின்றார். உலகத்தின் இதயத்தில் உயர்த்தப்படுகின்றார். சிலுவை மரத்திலே மூன்று ஆணிகளால் அறையப்பட்டு உயர்த்தப்படுகின்றார். பாவ விஷத்தால் நரக தண்டனைக்கு நேராக மரித்துக்கொண்டிருக்கும் எந்தப் பாவியும் சிலுவையை நோக்கிப் பார்க்கும்போது சிதைவுண்ட உடலோடு இரத்தம் கொப்பளித்துக்கொண்டிருக்கும் இயேசுவினால் தொடப்படுவான். ஏனென்றால் "நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது" (உரோ. 6:6) சிலுவையை நோக்கிப் பார்க்கும்போது ஊனியல்பின் செயற்பாடுகள் செயலிழந்துபோய்விடும். சிலுவையை நோக்கிப் பார்க்கும்போது நமது பாவங்கள் சாபங்கள் அனைத்தையும் இயேசு நிர்மூலமாக்கிவிடுவார். முள்முடி சூட்டப்பட்டு கிறிஸ்துவின் தலையிலிருந்து வழிகின்ற இரத்தம் வாழ்க்கையை குத்தி வேதனைப்படுத்திக்கொண்டிருக்கிற சாபங்களை முறித்துப்போடும். "கிறிஸ்து உனக்காக சாபமாகி சிலுவை மரத்திலே தன்னுடைய இரத்தத்தை ஊற்றினார்" என்று வேதத்தில் பார்க்கிறோம். அந்த இரத்தம் சாபத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ளும்.

தெய்வீக அன்பு சொரியப்படுவது சிலுவையில் இருந்து. அந்த இரக்கத்தின் ஊற்றில் நனைய நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது இந்தத் தவக்காலம். கொத்தி எருப்போட காலங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. கனியை எதிர்பார்க்கின்றார் இறைவன். சிலுவையை நோக்கிப் பார்ப்போம். சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் கனியைச் சுவைப்போம்.

## குடும்பக் குவலயம்



# குடும்பப்பிரச்சினை ஒரு சமூகப்பிரச்சினை

ஆசிரியர்
எம். எம். நிக்சன்
மன்/பெரியமடு ம.வி



குடும்பம் சமூகத்தின் ஒரு அலகு அல்லது ஒரு அங்கம் எனலாம். பல குடும்பங்கள் ஒன்றிணையும்போது அங்கே ஒரு சமூகம் தோன்றுகின்றது. இந்த வகையில் ஒரு குடும்பத்தின் வளர்ச்சியும் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது. குடும்பத்தில் தோன்றும் ஒவ்வொரு பிரச்சினையும் சமூகத்தைப் பாதிக்கின்றது. "BEAUTIFUL MIND CREATES BEAUTIFUL HOME, BEAUTIFUL HOME CREATES BEAUTIFUL SOCIETY" (அழகான உள்ளம் அழகான இல்லத்தை உருவாக்கும், அழகான இல்லம் அழகான சமுதாயத்தை உருவாக்கும்) எனக் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் இடையேயான தொடர்பை ஆங்கிலத்திலே கூறுவார்கள்.

குடும்ப அமைப்பைப் பாதிக்கும் காரணிகளாக போர், இடப்பெயர்வு, வறுமை, மதுபாவனை, இழப்புக்களை ஈடுசெய்யாமை, நவீன மயமாக்கல் போன்றவற்றைக் கூறலாம்.

குடும்பத் தலைவனோ அன்றேல் தலைவியோ யுத்தத்தினால் இறந்துவிட்டால் அக்குடும்பத்தின் இயல்பான இயக்கம் பாதிக்கப்படும். குடும்ப வளர்ச்சிக்காக அவர்கள் ஆற்றிய பணிகள் ஸ்தம்பிதமடைகின்றன. இதன் காரணமாக எஞ்சிய உறுப்பினர்கள் சமூகத்தில் ஒருவகையில் புறக்கணிக்கப்படுகின்றனர்.

கணவனை இழந்த மனைவி சமூக நிகழ்வுகளில் முன்னிற்பதில் சமூகம் தடைவிதிக்கின்றது, அன்றேல் சமூகம் அவர்களைப் புறக்கணிக்கின்றது. தந்தை, தாயை இழந்த பிள்ளைகள் அன்புத்தேவை, பாதுகாப்புத்தேவைக்காக ஏங்குகின்றனர். இவைகள் பூர்த்தியாக்கப்படாத நிலையில் சகபாடிகளுடன் தம்மை ஒப்புநோக்கி தாழ்வுச்சிக்கல்களுக்கும் ஆளாகின்றனர். தனது பாடசாலை வாழ்க்கையில் தந்தை, தாய் தொடர்பாக ஆசிரியர்களோ அல்லது யாராவது கதைக்கும்போது அவர்களின் மனஎழுச்சி மாற்றமடைகின்றது. அதாவது மறை உணர்வுகளை நோக்கித் தள்ளப்படுகின்றனர். வகுப்புகளில் தனிமை நாட்டம், குழுச்செயற்பாடுகளில் ஒதுங்கியிருத்தல் போன்ற உணர்வுகளை வெளிக்காட்டுவதையும் காணக்கூடியதாக இருக்கும்.

குடும்பங்களின் இடப்பெயர்வானது குடும்ப அங்கத்தவர்களின் இயல்பான வாழ்வு, கல்வி, சுகாதாரம், பொருளாதார நிலை என்பவற்றைப் பாதிக்கின்றன. தமக்குரிய சொந்த இடத்தில் சௌகரியமாக வாழ்ந்த குடும்பம் இடப்பெயர்வால் பல்வேறுபட்ட சமூகங்களுடன் விரும்பியோ, விரும்பாமலோ வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. தாம் முன்பிருந்த சமூகத்தைவிட்டு புதியதொரு சமூகத்துடன் வாழும் நிலை ஏற்படுவதால் சில கசப்பான அனுபவங்களும், முரண்பாடுகளும் ஏற்பட வாய்ப்புண்டாகின்றது. பிள்ளைகளின் கற்றல் சூழல், கற்றல் இடம், பழக்கப்பட்ட இருப்பிடம், சகபாடிகள், பௌதீக வளங்கள் எல்லாமே அவர்களின் கற்றல் அடைவுமட்டத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இப்பாதிப்புக்கள் சமூகமயமாக்கலில் பின்னடைவை ஏற்படுத்தும்.

இடப்பெயர்வானது சுகாதார சீர்கேடுகளுக்கும் வழிவகுக்கின்றன. குறிப்பிட்ட இடப்பரப்பினுள் நெருக்கமாகப் பல குடும்பங்கள் வாழ்தல், சுற்றாடலை மேம்படுத்தத் தவறுதல், நீர் நிலைகள் அற்ற பிரதேசம், மலசலகூடப் பிரச்சனைகள் போன்ற குடும்பப் பாதிப்புக்கள் சமூகப் பிரச்சினைக்கு ஏதுவாக அமைகின்றன.

குடும்பத்தின் பொருளாதார நிலை குடும்ப அங்கத்தவர்களின் தேவைகளை ஈடுசெய்ய முடியாமல் போவதுடன் உலக ஓட்டத்திற்கும், சமகால வாழ்க்கை நடைமுறைக்கும் இடையூறாக அமைகின்றன. நாளாந்த உணவுத்தேவை, கல்வி கற்றலுக்கான தேவைகள், வாழ்க்கைச் செலவுகள் யாவுமே பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளது. இவற்றை ஒரு குடும்பம் சரியான வகையில் செயற்படுத்தத் தவறும்போது அது அவர்களின் சமூக செயற்பாடுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் சமூக, கலாச்சார, பண்பாட்டு ரீதியிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஒரு குடும்பத்தின் மதுபாவனை சமூகப் பிரச்சினையை தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை. கணவனின் மதுபாவனையால் மனைவி, பிள்ளைகள் தமது சமூக அங்கத்தவர்களுடன் பழகுவதற்கும் தொடர்புகொள்வதற்கும் ஒரு தயக்கநிலை ஏற்படுகின்றது. அவர்களின் மதிப்பும், மரியாதையும் சமூகத்தில் குறைய வழிசமைக்கின்றது. மதுப்பாவனையில் தந்தை மற்றவர்களுடன் முரண்படல், தனது நிலையில் இருந்து விலகி மற்றவர்களின் கேளிக்கைக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாகும்போது அது அவரின் பிள்ளைகளையும், ஏனைய குடும்ப அங்கத்தவரின் நன்மதிப்பையும் சமூகத்தில் குறைந்துவிடுகின்றது.

குடும்பத்தில் தாய், தந்தைக்கு இடையேயான பிரச்சினைகள், முரண்பாடுகள் பிள்ளைகளில் வெளிக்காட்டப்படும்போது அவர்கள் பாதிக்கப்படுவதால் அவர்களின் நாளாந்த சமூக செயற்பாடுகள் குறைவடைகின்றது. இயல்பாகப் பழகுதல், மகிழ்ச்சியான செயற்பாடு, நல்ல சூழல் என்பனவற்றில் பின்னடைவு உருவாகின்றது.

பெற்றோரில் ஒருவர் வெளிநாட்டிற்குச் செல்லுதல், அல்லது நீண்ட நாட்களுக்கு ஒருமுறை சந்திக்க நேர்தல் போன்ற சந்தர்ப்பங்களில் குடும்பத்தில் விரிசல் ஏற்படக்கூடும். இவர்கள் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாக நடக்க முடியாமல் தவறான வழிகளில் செல்லவும், ஈற்றில் விவாகரத்து நிலைக்கு தள்ளப்படவும் கூடும். இந்நிலை சமூகத்தின் அவர்களுடைய செல்வாக்கைக் குறைத்துவிடுவதுடன் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வும் பாதிப்புக்குள்ளாகின்றது.

இவ்வாறாக நோக்கும்போது ஒரு குடும்பப் பிரச்சினை பல வழிகளில் சமூகத்தைப் பாதித்துவிடுகின்றது. எனவே சிறந்ததொரு சமூகத்தின் உருவாக்கம் குடும்பத்தில் தங்கியுள்ளது. *நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்* என்பார்கள். இவ்வாறான நல்ல குடும்பங்கள் சமூக மேம்பாட்டை ஏற்படுத்தும், சிறந்த ஒரு சமூகத்தை தோற்றுவிக்கும். ●

---

## மருத்துவப் பொழிவு

# 'உயிரை ஊதும் உதடுகள்'
## புகைப்பதனால் ஆய பயனென்ன?

வைத்திய காலநிதி. நி. தர்ஷனோதயன்
பெற்றா, மன்னார்.

புகைப்பிடித்தல் என்பது இவ்வுலகில் தொன்றுதொட்டு பல வடிவங்களில் இருந்து வருகிறது. புகைப்பழக்கம் மக்களிடையே மிகப் பழங்காலத்திலிருந்தே வந்தபோதிலும், சிகரெட் என்று பரிணாம வளர்ச்சி அடைந்தது வெறும் 100 ஆண்டுகள்தான். ஆரம்பத்தில் ஐரோப்பியர்களால் புகையிலையைச் சுருட்டு வடிவத்திலும், அதன் தூள் புகைக்குழாய்களில் அடைக்கப்பட்டும் புகைக்கும் பழக்கம் இருந்தது. 1900ஆம் ஆண்டுகளில்தான் சிகரெட் செய்யும் கருவிகள் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டன. இன்று இவ்வுலகில் சுமார் 100 கோடிப் பேர் நாளொன்றுக்கு 05 சிகரெட்டுகள் புகைக்கின்றனர். இதனால் ஒரு நாளில் 500 கோடி சிகரெட்டுக்கள் புகைக்கப்படுகின்றன.

### பருவகாலத் தூண்டுதல்கள்

குழந்தைப் பருவத்திலிருந்து விடலைப் பருவத்திற்கு மாறும் வயதில்தான் (15 - 20 வயது) பெரும்பாலானோர் புகைக்கும் பழக்கத்தை ஆரம்பிக்கின்றனர். புதிதாகப் புகைபிடிக்க ஆரம்பிக்கும்போது எவருமே முதலில் ஒரு புதுமையான விஷயத்தைச் சோதித்துப் பார்க்கும் மனநிலையில்தான் ஒரு சோதனை முயற்சியாக ஆரம்பிக்கின்றனர். இதற்குப் பின்புலத்தில் நிறையச் சமூக ரீதியான தூண்டுதல்கள் உள்ளன. கண்கவர் விளம்பரங்கள் புகைத்தலை ஒரு கவர்ச்சிகரமானதாகவும், கம்பீரமாகவும் தோன்றச் செய்வதுடன், சமவயதுடையவர்கள் புகைப்பதுபற்றிக் கூறும் கருத்துக்களும் வீட்டிலுள்ள மூத்தவர்களின் புகைக்கும் பழக்கம் ஒரு முன்மாதிரியாக இருப்பதும் வலிமையான மனத்தூண்டல்களாக உள்ளன.

### புகைத்தலும் நோய்களும்

புகைப்பிடித்தல் பல நோய்களுக்கும் நேரடி முதல் காரணமாக உள்ளது என்பது பல காரணங்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கும் தொடர் ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. புகைக்கும் பழக்கம் நுரையீரல் புற்று நோய் (Bronchogenic Carcinoma) வருவதற்கு நேரடிக் காரணமாக உள்ளது. மேலும் இளம் வயதிலேயே இதயத்திற்குச் செல்லும் இரத்தம் குழாய்களில் Coronary Atherosclerosis வருவதற்கும் காரணமாகிறது. அத்துடன் இளம் வயதிலேயே மாரடைப்பு, பக்கவாதம், நுரையீரலில் தீராத சளி, தீராத இருமல், ஆண்மைக் குறைவு கை – கால்களுக்குச் செல்லும் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஆகியவற்றையும் உண்டுபண்ணும்.

### வீட்ட புகை – தொட்ட புகை

தாமே சிகரெட்டைப் புகைத்து விடுபவர்களைவிட மற்றவர்கள் புகைத்து வெளிவிடும் புகையை உள்ளிழுப்பவர்களுக்கே பாதிப்புக்கள் அதிகம். ஏனென்றால் சிகரெட்டின் எரியும் நுனியிலிருந்து வரும் புகை பில்டர் (filter) பஞ்சைத் தாண்டாமல் நேரடியாக வருவதால் அதில் நச்சுப் பொருட்கள் அதிகமாகவே இருக்கும்.



சிகரெட் புகையில் தார், நிக்கொடின் (Tar, Nicotine) உட்பட 192 வகையான நச்சுப்பொருட்கள் உள்ளன. சிகரெட் புகைப்பதை விட்டுவிட்டால் புகைத்தபோது ஏற்பட்ட இதய பாதிப்புக்கள் முழுமையாக சமநிலைக்கு வர 03 ஆண்டுகளாகும். நுரையீரல் புற்றுநோய் வருவதற்கான ஆபத்து சமநிலைக்கு வர 20 ஆண்டுகளாகும்.

### புகைப்பதை விடுவது எப்படி?

01. விட்டுவிட்டால் நல்லது என்னும் மனநிலை (Pre Contemplation).
02. விட்டுவிடலாம் எனும் மனநிலை (Contemplation) ஆனால் செயல்படுத்தாமல் இருப்பது.
03. சிகரெட் புகைப்பதைத் தானாகவோ அல்லது மற்றவர் உதவியாலோ குறைக்க ஆரம்பித்துவிடுவது (Action).
04. புகைப்பதை விட்டுவிட்ட நிலையை திரும்ப ஆரம்பிக்காமல் அப்படியே தக்கவைத்துக்கொள்வது (Maintenance).

புகைப்பதை விட்டுவிடும் மனநிலையில் இருப்பவர்களுக்கு ஒரு மனநல மருத்துவரின் உதவி கட்டாயம் அவசியம். இதன் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக நடத்தை மாறுதலை படிப்படியாக பயிற்சியின் மூலம் கற்றுக்கொடுத்து, புகைக்கும் பழக்கத்தை விடவைக்க முடியும். மேலும் புகைப்பதால் இரத்தத்தில் கலக்கும் நிக்கொடின் எனும் வேதியப் பொருளை மட்டும் வேறுவடிவங்களில் உட்கொள்ளக் கொடுப்பதால் சிகரெட் பிடிக்கும் தேவை அற்றுப்போய் அதனை விட்டுவிடலாம். இதனை Substitution Therapy என்பர். தற்போது புகைபிடிக்கும் பழக்கத்தை மாற்றுவதற்கு நிறைய மருந்துகள் உள்ளன. அவற்றைத் தக்க மருத்துவரின் ஆலோசனைப்படி எடுத்து வந்தால் இப்பழக்கத்தை விட்டுவிடலாம்.

வீதிகளில் சிகரெட்டுடன் காணப்படும் பாடசாலை மாணவர்களைப் பார்க்கும்போது கவலை அளிக்கிறது. காரணம் கேட்டால் நவநாகரிகம் (Fashion) என்கிறார்கள். பெற்றோர்களே! ஆரோக்கியமான வருங்கால சமுதாயத்தை உருவாக்க உதவுங்கள்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" ●

---

## சமைப்போம் சுவைப்போம்

தருவது

அ. ஆரோக்கிய சுலக்ஷனா (றேகா)
தலைமன்னார் கிராமம், தலைமன்னார்

### முட்டை உருளை சாப்ஸ்



**தேவையான பொருட்கள்**

முட்டை - 3
உருளைக்கிழங்கு - 2 (பெரியது)
மிளகு - ஒரு தே. கரண்டி
சீரகம் - கால் தே. கரண்டி
கறுவா - 1
இஞ்சி - ஒரு துண்டு
பூண்டு - 6 பல்
ரஸ்க் தூள் - தேவைக்கேற்ப
உப்பு - தேவைக்கேற்ப
மஞ்சள் தூள் - கால் தே. கரண்டி
எண்ணெய் - தேவைக்கேற்ப

**செய்முறை :**

உருளைக்கிழங்கை தோல் சீவி கழுவி விரல் நீட்டத்திற்கு நறுக்கிக்கொள்ளுங்கள். மிளகு, சீரகம், கறுவா, இஞ்சி, பூடு ஆகிய பொருட்களை நன்கு அரைத்து மசாலா தயாரித்துக்கொள்க.

இந்த மசாலாவை உருளைக்கிழங்குடன் சேர்த்துப் பிசைந்து ஒரு பாத்திரத்தில் போட்டு லேசாக தண்ணீர் தெளித்து கலக்கிவிட்டு வேகவிடுங்கள். ஒரு கிண்ணத்தில் தேவையான உப்பு, சிறிது மஞ்கள் தூள் போட்டு கரைத்து முட்டையை உடைத்து ஊற்றி நன்கு அடித்து வைத்துக் கொள்ளுங்கள். மசாலாவுடன் சேர்த்து வெந்த உருளைக்கிழங்குத் துண்டுகளை முட்டையில் நனைத்து ரஸ்க் தூளில் போட்டுப் பிரட்டி, எண்ணெயைக் கொதிக்க வைத்துப் பொரித்தெடுத்துப் பரிமாறுங்கள்.

# பெரியப்பா பதில்கள்





**கேள்வி : பெரியப்பா, எதிர்ப்புகளைக் கண்டு நான் மனம் சோர்ந்து போகிறேன்?**

*- குணாளன், வவுனியா*

**பதில் :** நம்முடன் மோதுவதற்கான எதிரணி வீரர்களே இல்லாமல் விளையாடினால் எந்த விளையாட்டுத்தான் சுவையாக அமையும். தள்ளிநின்று வேடிக்கை பார்த்துவிட்டுப் போவதல்ல வாழ்க்கை. களத்தில் இறங்கி, வருவதை எதிர்கொண்டு சளைக்காமல் நம்பிக்கை இழக்காமல் வெற்றி பெறுவதில்தான் திருப்தி இருக்கின்றது.

**கேள்வி : இன்று நேரத்தைப் பற்றிய அக்கறையே இல்லாமல் போகிறதே....?**

*- டெண்டுல், மன்னார்*

**பதில் :** ஒலிவர் வெண்டல் ஹேம்ஸ் என்ற அறிஞர் காலையில் நடந்துகொண்டிருந்தார். ஒரு திருடன் வழிமறித்தான்.
"மரியாதையாகப் பணத்தை எடு" என்றான். "வலப்பக்க பொக்கட்டில் வெள்ளிக் காசுகள் நிறைய இருக்கின்றன. உடனே எடுத்துக்கொள். இடப்பக்க பொக்கற்றில் என் மதிப்பு மிக்க நேரம் இருக்கிறது அதை மட்டும் கேட்காதே" என்றாராம் அவர்.

**கேள்வி : இன்று நோய்கள் பெருகிக்கொண்டே போகிறதே பெரியப்பா?** *- மணிமாறன், அடம்பன்*

**பதில் :** உடம்போடு நீங்கள் சரியாக வாழவில்லை என்பதற்காக உடல் உங்களுக்குத் தரும் விவாகரத்துப் பத்திரம்தான் (Divorce Notice) நோய். சொந்த உடலை இன்று கவனிக்காமல் விட்டுவிட்டால் எதிர்காலத்தில் நீதிமன்றப் படிக்கட்டில் அடிக்கடி ஏறி இறங்குவதுபோல மருத்துவமனைக்கு ஏறி இறங்கவேண்டியிருக்கும். உஷார்!

**கேள்வி : மனித உறவை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் அடிப்படையாக எவற்றைக் கருதுகின்றீர்கள்?**

*- மதிவதனி, தாழ்வுபாடு, மன்னார்*

**பதில் :** தன்னைத்தானே உணர்வதும்,தன்னைப் பிறர் உணரச் செய்வதும், தான் பிறரை உணர்வதும் வளர்ச்சியின் ஆரம்ப அடிப்படைகள். இதற்குத் தேவைப்படும் இதர ஆற்றல்களில் முதன்மையானவை உறவாடக் கற்றுக்கொள்வதும், உரையாடக் கற்றுக்கொள்வதும் ஆகும்.

**கேள்வி : இன்றைய பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து உறிஞ்சக்கூடியவற்றை எல்லாம் உறுஞ்சி எடுத்துவிட்டு முதியோர் இல்லத்தில் கொண்டுபோய் தள்ளிவிடுகிறார்களே இது நியாயமா?** *- சந்திரமோகன், கொழும்பு*

**பதில்:** அத்தோடு நிறுத்திவிட்டால் பறவாயில்லை! இன்னும் என்ன நடக்கிறது என்பதற்கு இந்தக் கவிதை ஒரு உதாரணம்.

*"பெரிய மகளின்*
*குடும்ப அட்டையிலும் இருக்கிறார்.*
*சிறிய மகளின் குடும்ப*
*அட்டையிலும் இருக்கிறார் .*
*காப்பகமொன்றில் இருக்கும் அப்பா"*



**கேள்வி : வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசி வம்பில் மாட்டிக்கொள்ளும் சிலரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*- பிரியதர்சினி, பேசாலை.*

**பதில் :** மனதைத் திறந்து வை, வாயை மூடிக்கொள். நேர்மாறாகச் செய்வதுதான் பல பிரச்சினைகளுக்குக் காரணம்.

**கேள்வி : இன்று எழுத்தாளராக வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் வாசிப்பதில் அக்கறை காட்டுவதில்லையே ?** *- சுகிர்தன், வஞ்சியன்குளம்.*

**பதில் :** ஒரு எழுத்தாளனுக்கு புத்தக வாசிப்பு என்பது சுவாசிப்பு மாதிரி இருக்க வேண்டும். ஒரு எழுத்தாளன், கவிஞன் காலங்களையும், இடங்களையும் வென்றவனாக, இந்தப் பூமி உருண்டையைக் கடந்தவனாக இருக்க வேண்டும். ஒரு எழுத்தாளன் கண்ணதாசனையும் படிக்க வேண்டும், கால்மாக்ஸ்சையும் படிக்க வேண்டும். நம் பார்வையை விசாலமாக்குகின்ற சக்தி புத்தகங்களுக்கு உண்டு. எனவே வாசிப்பைச் சுவாசிப்பாகக் கொள்ளாதவர் எழுத்தாளராக எண்ணுவது நிலத்தில் நின்றுகொண்டு நீந்தப் பழகும் முயற்சியாகவே இருக்கும்.

**கேள்வி : ஒவ்வொரு மனிதனும் உலகத்தைப் பார்க்கும் விதம் ஆளுக்கு ஆள் வேறுபடுகிறதே...?**

*- அலெக்ஸ், அரிப்புத்துறை.*

**பதில்:** அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் சீனாவிற்குப் பயணம் செய்தபோது அங்கிருந்த சீன நாட்டு நிருபர் இந்த அமெரிக்க எழுத்தாளரிடம் இப்படிச் சொன்னாராம்.
"சீனக்கலாச்சாரம் உணவு வகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. அமெரிக்கக் கலாச்சாரமோ பாலியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது...!"
உடனே அமெரிக்க எழுத்தாளர் ஆச்சரியப்பட்டுக் கேட்டாராம்...
"அப்படியானால் அமெரிக்காவில் ஏன் அதிகம் பேர் குண்டாக இருக்கின்றார்கள்? சீனாவில் ஏன் சனத்தொகை இப்படிப் பெருகி இருக்கிறது..."

# நீங்காத நினைவுகள்

## 6ம் ஆண்டு நினைவு



மலர்வு 12 - 06 - 1933
உதிர்வு 30 - 04 - 2002

### திருமதி. செபஸ்ரியம்மா அந்தோனிப்பிள்ளை
### (முருங்கன் பிட்டி, முருங்கன்)

எளிமை, தாழ்மை, செபத்தை அணிகலனாய்க் கொண்டு அன்பும் இறைவிசுவாசமும், உண்மையும் சொத்தாய்க் கொண்டு வையத்தில் நல்லதோர் மாதிரியாய்! வாழ்வாங்கு வாழ்ந்த அன்னையே! மண்ணகப் பணி முடித்து விண்ணகம் நீர் ஏறி ஆறு ஆண்டுகள் ஆகியதோ! நம்பமுடியவில்லை!
நித்தியத்தில் உங்கள் ஆன்மா சாந்தியடைய இரந்து வேண்டுகின்றோம்.

கனடா, பரீஸ், கொழும்பு, மட்டக்களப்பு, மற்றும் முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் 30.04.2008 அன்று காலை 6.30 மணியளவில் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

*இவரின் பிரிவால் துயருறும்:*
*அன்புக் கணவர், பிள்ளைகள்,*
*முருங்கன்பிட்டி, முருங்கன்.*

## 8ம் ஆண்டு நினைவு



மலர்வு 03 - 05 - 1946
உதிர்வு 30 - 04 - 2000

### திரு. பி. அதிரியாம்பிள்ளை
### (சிங்கம்) (கன்னாட்டி, அடம்பன்)

அன்பின் பிறப்பிடமே, பாசத்தின் உறைவிடமே குடும்பத்தின் ஒளி விளக்கே - பப்பா
தங்கள் ஆன்மா ஆண்டவன் அடிசேர்ந்து ஆண்டுகள் எட்டு எட்டியே கடந்தாலும் எம் மனம் ஏனோ ஏற்க மறுக்கிறது உங்கள் மரணத்தினை. இதயத்தில் எண்ணாத நாளில்லை உங்களை இதமான நினைவுகளால் கனத்துமே நிற்கின்றோம். அழைத்த ஆண்டவன் பாதமதில் அமர்ந்து அனுதினம் எமக்காய் வேண்டுங்கள்.

*இவரின் பிரிவால் துயருறும்: அன்பு மனைவி இராசாத்தி, பிள்ளைகள் கனடாவில் வசிக்கும் பிறிடா, றெஜி, அமலன், நியூட்டா (சுவிஸ்) கனடாவில் வசிக்கும் மருமக்கள் டோமினிக், தவம், ஜென்சி, றுபேஸ் (சுவிஸ்), பேரப்பிள்ளைகள்*

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 09 - 11 - 1944
உதிர்வு 01 - 04 - 2007

### யக்கோவு அரசரெட்ணம்
### (நொச்சிக்குளம், உயிலங்குளம்)

பாசமிகு கணவனாய்
நேசமிகு தந்தையாய்
விசுவாசம் நிறை இறை ஊழியனாய்
சாதனை படைத்த
சமூகத் தொண்டனாய்
ஆண்டுகள் அறுபத்திரண்டு மேலாய்
இப்பூமியிலே வாழவைத்த
புனிதனே இறைவா!
அன்னாரின் ஆன்மாவை
உம்பாதம் அர்ப்பணிக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
*மனைவி, பிள்ளைகள்,*
*உறவினர்கள்.*

## 31ம் நாள் நினைவு



மலர்வு 13 - 06 - 1949
உதிர்வு 08 - 02 - 2008

### பங்கிறாஸ் அன்டன்
### பிரான்சுவா ஜெகநாத் (ஜெகா)

**இடம் : பெற்றா, மன்னார்**

அன்பென்னும் மழை பொழிந்து
அவனியிலே எம்மை எல்லாம்
அரவணைத்துக் காத்த
அன்புத் தெய்வமே!
பரமன் உம்மை அழைத்ததால்
பரமனின் பாதம் சென்றீர்.
பரமனின் ஒளிமயமான
முகதரிசனத்தில் என்றும்
மகிழ்ந்திருக்க உமக்காய்
பிரார்த்திக்கின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும்:*
*சகோதரர், சகோதரி குடும்பத்தினா*
*பி. ஏ. சுரேந்திரநாத*

## 7ம் ஆண்டு நினைவு



மலர்வு 20 - 01 - 1938
உதிர்வு 19 - 03 - 2001

### சவிரிமுத்து செபஸ்ரியாம்பிள்ளை
### (கன்னாட்டி, வவுனியா)

ஆண்டுகள் ஏழு சென்றாலும்
அணையாத தீபமாய் - எங்கள்
உள்ளத்திலே பிரகாசிக்கும் - எங்கள்
அன்புத் தந்தையே!
எங்களைப் பண்புடன் வாழ வைத்தவரே
எமது வாழ்வுதனைக் காண
நீர் எம்முடன் இல்லையே!
கலங்குகின்றோம்...
கண்ணீர் சிந்துகின்றோம்...
உம் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

*இவரின் பிரிவால் துயருறும்:*
*அன்பு மனைவி, மக்கள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள*

## 12ம் ஆண்டு நினைவு



மலர்வு 28 - 04 - 1931
உதிர்வு 20 - 03 - 1996

### கஸ்பார்பிள்ளை
### பிரான்சிஸ்பிள்ளை

**"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள"**

அன்பான அப்பா, எங்களை பாசமுடன் அரவணைத்து வளர்த்த அன்புறவே, ஆண்டவன் பாதமலர் சென்றடைந்து ஆண்டுகள் பன்னிரண்டு ஆயிடினும், நீங்கள் விட்டுச்சென்ற நல் நினைவுகள் எமது உள்ளங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும். இவ்வுலகில் வாழும் இந்நன்நாளில் மாந்தர் நாம் யாவரும் மானிடத்தை மதித்து அன்புறவில் வாழ்ந்திட மாபரனை வேண்டிடுங்கள்!

*பிரிவால் துயருறும்:*
*மனைவி, மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.*
**தகவல்: மகன் சேகர், ஜேர்மனி**

# தற்போதைய சூழ்நிலையில் மக்களின் பாதுகாப்பான பிரயாணம்

தற்போதைய சூழ்நிலையில் கொழும்புக்கு செல்பவர்கள் மன்னார் பேரூந்து நிலையத்திலிருந்து காலை 6.30, 7.30, 8.30, 10.30, 12.30 மணிக்குப் புறப்படும் அரச பேரூந்துகளில் மதவாச்சி வரை சென்று, அங்கிருந்து கொழும்பு, கண்டி, அநுராதபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களுக்கு தொடர்ச்சியாக பேரூந்துகள் மூலம் பயணத்தினை மேற்கொள்ள முடியும்.

அரசாங்க ஊழியர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், புகையிரத ஆணைச் சீட்டு பாவிப்பவர்கள் காலை 9.30 மணி பேரூந்தில் மன்னாரிலிருந்து புறப்பட்டு, மதவாச்சியில் பகல் 1.15 மணிக்கு புறப்படும் புகையிரதத்தில் பயணித்து இரவு 8.30 மணிக்கு கொழும்பினைச் சென்றடைய முடியும்.

பி.ப. 2.30, 3.45 மணிக்கு மன்னாரிலிருந்து புறப்படும் அரச பேரூந்தின் மூலம் செல்பவர்கள் மதவாச்சியிலிருந்து இரவு 9.00 மணிக்கு புறப்படும் புகையிரதத்தின் மூலம் காலை 5.00 மணிக்கு கொழும்பினை சென்றடைய முடியும். புகையிரதத்தில் செல்வதால் பல்வேறு சோதனை நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ள முடியும். இதேபோன்று காலை 5.00 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் புகையிரதத்தில் வருபவர்கள், மதவாச்சிக்கு பி.ப 12.30 மணிக்கு வந்து, பி.ப. 4.00மணிக்கு மன்னாரை வந்தடைய முடியும்.

இரவு 9.30மணி புகையிரத்தில் வருபவர்கள் காலை 5.00 மணிக்கு மதவாச்சியினை அடைந்து காலை 7.00மணி பேரூந்தில் மதவாச்சியிலிருந்து மன்னாரை காலை 9.00 மணிக்கு வந்தடைய முடியும். மதவாச்சி புகையிரத நிலையத்திலிருந்து சோதனைச் சாவடிக்கு பேரூந்து கட்டணம் 10/- வும் முச்சக்கரவண்டி கட்டணம் ரூபா 150/- வும் அறவிடப்படுகிறது. பேரூந்தைப் பாவிப்பது நலம்.

அவசியமான குறைந்த பொதிகளை மட்டும் எடுத்துச்செல்வதன் மூலம் சோதனைச் சாவடிகளில் வீண் சிரமத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம். அத்துடன் கொழும்பு செல்வோர் அங்குள்ள உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலோ அல்லது விடுதிகளிலோ தங்கும்போது தங்களைப் பொலிசில் பதிவுசெய்து கொள்வதன் மூலம் வீணான கைதுகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும். இயன்றவரை தங்களது பயணத்தினை காலையில் மேற்கொள்வது சிறந்ததாகும்.

**இது ஓர் CHA இன் மனிதநேய சேவை**



# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 71

## யோபு 25 - 33

உங்கள் விடைகளை 10. 04. 2008க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | ✱ | | | | 04 | |
| | | | 05 | | | | | 06 | | |
| | | | | 07 | | | ✱ | | | |
| ✱ | | | | | | | 08 | | | |
| | | 09 | | 10 | | | | | | ✱ |
| | | | | 11 | | | | | | 12 |
| | | 13 | | | | ✱ | | | | |
| | 14 | | 15 | | | | | | | |
| | | | | | | | 16 | | | |
| 17 | | | | | | ✱ | | 18 | 19 | ✱ |

### மேலிருந்து கீழ்

1. என் ஆட்டுமுடிக் கம்பளியினால் குளிர் போக்கப்பட்டு அவர்களின் உடல் என்னைப் ...............வில்லையா?
2. ஏனெனில் இறைவன் .................. இடர் எனக்கும் பேரச்சம்.
3. ஏனெனில் அவனைவிட அவர்கள் ................. முதிர்ந்தவர்கள்.
4. ஏனெனில் சொல்லவேண்டியவை ............. நிறையவுள்ளன.
5. என் ...........களையெல்லாம் கவனிக்கின்றார்.
6. இவ்வாறு மாந்தரிடமிருந்து தீவினையை .....................
12. வாழ்வோர் அனைவர்தம் கண்களுக்கும் ................ள்ளது.

### வலமிருந்து இடம்

2. கடவுள் சேற்றில் என்னை ........................ விட்டார்.
4. என் ..................... வழக்கை எழுதட்டும்.
6. இதோ இறைவன் முன்னிலையில் நானும் .............. ஒன்றே.
8. சாகும்வரை என் ..................யைக் கைவிடவும் மாட்டேன்.
9. அவர்களின் பிள்ளைகள் பெருகினும் ............. மடிவர்.
12. இதோ வெண்ணிலவும் ............. குன்றியதே?
15. இருட்டிலும் சாவின் இருளிலும் ....................ப் பொருளைத் தேடுகின்றனர்.
16. இரவு என் ........................ உருக்குகின்றது.

### கீழிருந்து மேல்

10. நான் .................. உம்மைத் தாக்கமாட்டேன்.
13. நீங்கள் ஆய்ந்து கூறிய வார்த்தைகளை ................. கூற்றை நான் கேட்டேன்.
14. ஒபீர்த்தங்கமும், கோமேதகமும் அரிய நில ............ அதற்கு மதிப்பாகா. (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குக்கீழே உள்ளது)
15. உம்மைப்போல் நானும் ............ ணிலிருந்து செய்யப்பட்டவனே.
16. முதிர்ந்த வயதினர் ............. நிற்பர் (குழம்பியுள்ளது).
17. திகில் .......... அவர்களை அமிழ்த்தும்.
18. இப்பொழுதே என் ........... போய்க்கொண்டே இருக்கிறது.
19. அப்போது அவர் ........... என் தலைமீது ஒளி வீசிற்று.

### இடமிருந்து வலம்

1. ஓடைகளின் உடைப்புக்களிலும், நில வெடிப்புக்களிலும் ................ களிலும் அவர்கள் வாழ்ந்தனர்.
3. என்.......................க் கேட்க ஒருவர் இருந்தால் எத்துணை நன்று.
7. பின் ஏன் வறட்டு .............. பேசுகின்றீர்கள்.
10. நீர்ப்பரப்பின்மீது .......... வரைந்து இருளுக்கும், ஒளிக்குமிடையில் எல்லை அமைத்தார்.
11. எவர்மேல் ........................... வீசாதிருக்கும்.
13. வாய்திறந்து நான் பதில் .............. வேண்டும்.
15. சிலந்திக்கூடு ................... போலும் காவற்காரன் குடில்போடுவது போலும் அவர்கள் வீடு கட்டுகின்றனர்.
17. என்னை ............................ அழிவில் நான் மகிழ்ந்ததுண்டா?

# நாற்பது நாட்கள்

(14ம் பக்கத் தொடர்ச்சி...)

## 11. நேர்மையும், உண்மையும் இல்லா நோன்பு பயனற்றது :-

1. அவர்கள் நோன்பு இருப்பினும் நான் அவர்களின் குரலைக் கேட்கமாட்டேன். அவர்கள் எரிபலிகளையும் தானியப் படையல்களையும் அளிப்பினும் அவற்றை நான் ஏற்கமாட்டேன். மாறாக, வாளாலும் பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் அவர்களை ஒழித்துவிடுவேன். (எரே. 14:12)
2. தங்கள் பாவங்களுக்காக நோன்பிருப்போர் வெளியில் சென்று, மீண்டும் அதே பாவங்களைச் செய்தால், யார் அவர்களது வேண்டுதலைக் கேட்பர்? அவர்கள் தங்களைத் தாழ்த்திக் கொள்வதால் பயன் என்ன? (சீஞா. 34:26)
3. வாரத்தில் இருமுறை நோன்பிருக்கிறேன்: என் வருவாயில் எல்லாம் பத்திலொரு பங்கைக் கொடுக்கிறேன். (லூக். 18:12)

## திருச்சபையின் வாழ்வில் தவக்காலம்

திருத்தூதர்கள் காலந்தொட்டே தவக்காலம் உயிர்ப்புப் பெருவிழாவுக்கு முன்னுள்ள தயாரிப்புக் காலமாகக் கருத்திற் கொள்ளப்பட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் திருத்தூதர்கள் காலத்தில் தவக்காலம் நாற்பது நாட்களைக் கொண்டதாக இருந்ததா என்பது பற்றி நாம் உறுதியாக எதையும் கூறமுடியாது. எனினும் கி.பி. 325ம் ஆண்டில் திருச்சபையால் முதன் முதலில் கூட்டப்பட்ட "நிசேயா" பொதுச் சங்கம் தவக்காலம் நாற்பது நாட்களை உள்ளடக்கியதாக அமையவேண்டும் என்று பிரகடனப்படுத்தியது.

திருச்சபையின் தொடக்க காலங்களிலே தவக்காலமும், தவக்கால முயற்சிகளும் மிகவும் இறுக்கமான கட்டுப்பாடு களோடு கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. உதாரணமாக ஒரு நாளைக்கு ஒரு நேர உணவு மாத்திரமே உண்ணலாம், அதுவும் மீன், இறைச்சி முதலியவற்றைக் கட்டாயமாகத் தவிர்க்கவேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. ஆனால் 15ம் நூற்றாண்டில் இந்தக் கட்டுப்பாடுகளில் சில நெகிழ்வுத் தன்மைகள் உள்வாங்கப்பட்டு மாற்றங்கள் கொணரப்பட்டன.

இதன் பின்னர் திருச்சபை அதன் அதிகாரபூர்வமான சட்டத் தொகுப்பு வழியாக தவக்காலம் பற்றிய பல விதிமுறைகளை முன்மொழிந்தது. அதனைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டது.

## தவநாள்கள் பற்றி திருச்சபைச் சட்டம் சொல்வது :-

திருச்சபைச் சட்டம் 1249 – அனைத்துக் கிறிஸ்தவ விசுவாசிகளும், தங்களுக்குரிய விதத்தில், தவம் செய்ய இறைச்சட்டத்தால் கடமைப்பட்டுள்ளனர்: இருப்பினும், அனைவரும் ஒருசில பொதுவான தவமுயற்சிகளைக் கடைப்பிடிப்பதில் ஒன்றுசேரும் வண்ணம், தவநாள்கள் விதிக்கப்பட்டுள்ளன: இந்நாள்களில் கிறிஸ்தவ விசுவாசிகள் சிறப்பாக மன்றாடுகின்றனர்: பக்தி மற்றும் அன்புச் செயல்களில் ஈடுபடுகின்றனர்: தங்கள் கடமைகளை மிகவும் உண்மையுடன் நிறைவேற்றி, குறிப்பாகக் கீழ்க்கண்ட திருச்சபைச்சட்ட விதிமுறைக்கேற்ப நோன்பு மற்றும் புலால் உணவைத் தவிர்த்தலைக் கடைப்பிடித்துத் தங்களையே ஒறுக்கின்றனர்.

தி.ச 1250 – அனைத்துலகத் திருச்சபையில் ஆண்டின் எல்லா வெள்ளிக்கிழமைகளும் தவக்காலமும் தவநாள்களும் ஆகும்.

தி.ச 1251 – புலால் உணவை அல்லது ஆயர் பேரவையின் விதியமைப்புகளுக்கேற்ப வேறு ஓர் உணவைத் தவிர்த்தலை எல்லா வெள்ளிக்கிழமைகளிலும், அவை பெரும் விழாக்களாய் இருந்தாலன்றி, கடைப்பிடிக்கவேண்டும். திருநீற்றுப் புதன் மற்றும் பெரிய வெள்ளிக்கிழமையில் புலால் உணவைத் தவிர்த்தலையும் நோன்பையும் கடைப்பிடிக்க வேண்டும்.

தி.ச 1252 – பதினான்கு வயதை நிறைவு செய்தவர்கள் சுத்தபோசன சட்டத்தால் கட்டுப்பட்டுள்ளனர்: பொறுப்பேற்கும் வயதை அடைந்த அனைவரும், தங்களின் அறுபதாவது வயது ஆரம்பிக்கும்வரை, நோன்புச் சட்டத்தால் கட்டுப்பட்டுள்ளனர். இருப்பினும், நோன்பு மற்றும் சுத்தபோசன சட்டத்தால் கட்டுண்டிராத பொறுப்பேற்கும் வயதை அடையாதவர்களும் தவத்தின் உண்மைப் பொருள் கற்பிக்கப்படும் வண்ணம் மேய்ப்பர்களும் பெற்றோர்களும் கவனம் செலுத்தவேண்டும்.

தி.ச 1253 – நோன்பு மற்றும் புலால் உணவைத் தவிர்த்தல் பற்றிக் கடைப்பிடிக்க வேண்டிய இன்னும் துல்லியமான வழிமுறைகளை ஆயர் பேரவை நிர்ணயிக்கலாம். நோன்பு அல்லது புலால் உணவைத் தவிர்த்தலுக்குப் பதிலாக, முழுமையாகவோ பகுதி அளவிலோ மற்றத் தவமுறைகளைச், சிறப்பாக அன்புச் செயல்களையும் பக்தி முயற்சிகளையும் மாற்றீடு செய்யலாம்.

❖ இங்கு பொறுப்பேற்கும் வயதை அடைந்தவர்கள் என்பதில் வயது பற்றிய எல்லை தெளிவாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், திருச்சபையின் போதனையின்படி 18 வயது நிரம்பியவர்கள் உண்ணா நோன்பிருக்கக் கடைமையுள்ளவர்களாயிருக்கின்றார்கள்.

## முடிவாக :-

நாமும் தவக்காலத்தின் பொருளுணர்ந்து செயற்பட நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு இறைவனால் வழங்கப்பட்டுள்ளது. எனவே இறைவார்த்தையையும், வரலாற்றையும் திரும்பிப் பார்ப்பதோடு நின்றுவிடாது வரலாற்றிலிருந்து வழிந்து வரும் உண்மைகளையும், நல்ல அனுபவங்களையும் நம் வாழ்வாக்க முயற்சிப்போம். தவக்காலமும் நமது தவமுயற்சிகளும் நம்மை ஆன்மீகத்தில் வலுவூட்டுவதாய் அமையட்டும். ●

# தொடர்பாடலும் வேதாகமமும்

(4ம் பக்கத் தொடர்ச்சி...)

வார்த்தை மானிட உடல் ஏற்றபோது தெய்வீகமானவரின் சுயதொடர்பாடல் அதன் கொடுமுடியையும், உச்ச நிலையையும் அடைகின்றது. (யோவா 1:14) அவரது புதுமைகள், உவமைகள், மரணம், உயிர்ப்பு ஆகியவை இறைவன் மனிதருடன் கொள்ளும் தொடர்பாடலின் மூலாதாரமான உண்மை நிலையை வெளிப்படுத்தி நிற்கின்றது. இறுதியாக தூய ஆவியின் அருட்பொழிவு இயேசுவின் பணியை நிறைவுசெய்வதாய் அமைந்துள்ளது. பாபேலில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொடர்பாடலின் வழி தூய ஆவியின் கொடைகளால் மீண்டும் திறக்கப்பட்டதோடு இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் மக்கள் மத்தியில் நேர்மையான உறவு நிலவுவதற்குச் சாதகமான நிலமைகளும் மீளவும் நிறுவப்பட்டுள்ளன என அடிகளார் தொடர்பாடலின் விவிலிய அடித்தளத்தை தெளிவுபடுத்தினார்.

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 69ல்

## சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
என். ஜெகப்பிரியன்,
180, ஒல்லிமோட்டை,
மன்னார்

**இரண்டாம் பரிசு:**
ம. அந்தோனிமுத்து,
கடைவீதி இல ஏ6
நானாட்டான்
மன்னார்

**மூன்றாம் பரிசு:**
அ. வெனிஸ்ரா
தரம் 6
வேதசாட்சி கோவிலடி
தோட்டவெளி

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 100 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 99 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.69ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. நோ. அனோஜா நிக்கலின், சிறுக்கண்டல், முருங்கன்.
2. எம். மேரி காமலிற்றா, புனித லூசியா வீதி, பள்ளிமுனை, மன்னார்.
3. அருட்சகோதரி. மேரி பற்றீசியா, றம்பாவை, அநுராதபுரம்.
4. ஆர். யேசுராஜா, சின்னக்கரிசல், பேசாலை, மன்னார்.
5. செ. கிரிஜா, பெரியகுஞ்சுக்குளம், முருங்கன்.
6. கி. ஆன் பவுல் ரீனா டலிமா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
7. நாதன் நிரோமி குரூஸ், அவுஸ்திரேலியா.
8. நற்குணம் தர்ஷிக்கா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
9. செ. இன்வென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
10. திருமதி. மி. சுசிலா, முருங்கன்பிட்டி, முருங்கன்.
11. அ. ஜெரோமிகா, வேதசாட்சி கோவிலடி, தோட்டவெளி.
12. சிறகுடைந்த இளஞ்சிட்டு, தோட்டவெளி, மன்னார்.
13. சூ. யூக்கறிஸ்ரா வினோதினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
14. அ. கரோலின் கீர்த்திக்கா, பேராலயவீதி, திருகோணமலை.
15. எஸ். லக்ஷ்மன், பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.
16. பி. நிஜா, வேதசாட்சி கோவிலடி, தோட்டவெளி.
17. நே. றொஷானி விக்டோரியா, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.
18. ஏ. கொண்செப்ரா, மடுக்கோவில், மடு.
19. ம. இந்துச்சா மொறாய்ஸ், இரத்தினபுரி, வங்காலை 01
20. கா. றெனொசியா, இல 120, பெற்றா, மன்னார்.
21. றீற்றஸ் மரியகொறற்றி, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
22. றெ. டினேஷன், கங்காணிதீவு, நானாட்டான்.
23. மி. ஆன் சுஷாந்தினி, முருங்கன்பிட்டி, முருங்கன்.
24. செ. மெலானி நிசாந்தினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
25. டோ. சுபாஜினி, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
26. பி. ஜே. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
27. பா. சோபா வாஸ், குழந்தையேசுபுரம், மன்னார்.
28. திருமதி. மெ. அ. லெம்பேட், வங்காலை 02
29. யோ. டிபாகரன், பெரியகுஞ்சுக்குளம், முருங்கன்.
30. பே. நவரட்ணம், புதுக்கமம், உயிலங்குளம்.
31. ஆர். எம். ஜெயசாந்தன், சின்னக்கடை, மன்னார்.
32. எ. எட்மதாஸ், மணிக்கடை இல ஏ1, நானாட்டான்.
33. எ. றெஜிலின்ரா, தி.கு.க.மடம், இறம்பைக்குளம், வவுனியா.
34. இராசன் சுதர்சினி, மாதா கோவிலடி, மதியாமடு, புளியங்குளம்.
35. எம். வீணா பெரேரா, வேளாங்கன்னி வீதி, பள்ளிமுனை, மன்னார்.
36. ரி. சர்மிலா, மடுக்கரை, நானாட்டான்.
37. அ. இசைக்கியேல், யோசப்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
38. க. துசியந்தி, கங்காணிதீவு, நானாட்டான்.
39. திருமதி. ரி. ஜே. சகாயராணி பெர்னாண்டோ, பேசாலை 08
40. திருமதி. வசந்தி பேரின்பநாயகம், ஆஸ்பத்திரிவீதி, மன்னார்.
41. அ. யோகவதனி, ஆயுள்வேத மருந்தகம், பூங்கா வீதி, வவுனியா.
42. தே. யூஜின் லிகாறா, 66, திருநாவற்குளம் வவுனியா.
43. எஸ். சகாய பிறிஸ்கா கூஞ்ஞ, தி.சி.க.மடம், மாத்தளை
44. வி. விதுஷனா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
45. யே. யேசுதா, சுண்டிக்குளி, முருங்கன்.
46. கத்தரின் சேவியர், பெரியகடை, மன்னார்.
47. றெ. அலெக்ஸ் (திலீபன்), கங்காணி தீவு, நானாட்டான்.
48. ததேயு றெனுசினி, 8ம் வட்டாரம், பேசாலை.
49. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
50. யோ. லூர்து தேவி, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 69 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெ[1] | ரி | ய | வ | ரா | க | ர் | வ | ல் | த | பு[2] |
| ரு | எ[3] | லு | ம் | பு[4] | றை | ணி | யை | மை | தீ[5] | ற |
| ங் | ✱ | மை | மு[6] | ழு | வை[7] | தி | தி | ✱ | ங் | ப் |
| கா | நி[8] | ம் | ம | தி | ரு | க[9] | கு | று | கி | ப |
| ற் | னை | வ[10] | ழி | யை | ழை | ம[11] | மி[12] | ன் | னை | ட் |
| று | த் | ம் | லா | ழ | எ[13] | ண | வு | ஸி | க[14] | டு |
| ✱ | து[15] | ய | ரி | லு | ம் | லி | ✱ | யி | ற் | ளை |
| க | ந் | ✱ | ம[16] | ண | லி | லு | ம் | கை[17] | க | க |
| ங் | டி | து | த் | ரு | தி[18] | ம் | லை | யூ | ளி | ழ் |
| ற | இ[19] | ரு | க் | க | ழி | அ[20] | ற | ட் | டை | த |
| உ[21] | றை | யு | ளை | ✱ | ம் | ண் | மீ[22] | டு | யே | இ[23] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.70 ற்கான முடிவுகளை 2008ம் ஆண்டு ஏப்ரல் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# மன்னா

## 'ஸப்தஸ்வரப் புன்னகை'

## இசை ஆய்வு நூல் வெளியீட்டு விழா

புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலய ஆசிரியை செல்வி. ஜெனிபர் அருள்மொழி லெம்பேட் அவர்களின் 'ஸப்தஸ்வரப் புன்னகை' என்ற இசை ஆய்வு நூல் கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் செ. கி. விஜயதாசன் தலைமையில் 23.02.2008 சனிக்கிழமை அன்று கல்லூரி பிரதான மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இந்நூல் வெளியீட்டு விழாவில் நூலுக்கான வெளியீட்டுரையினை கல்லூரி ஆசிரியர் திரு. பரா. ரதீஸ் அவர்களும் அறிமுக உரையினை சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை அதிபர் திரு. ஏ. ஐ. தயானந்தன் அவர்களும், நூல் ஆய்வுரையினை வவுனியா தமிழ்ச்சங்கத் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் அவர்களும் நிகழ்த்தினார்கள். இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையைச் சார்ந்த பேராசிரியர் இரா. வை கனகஇரத்தினம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். சிறப்பு விருந்தினராக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருவாளர் ம. ஆபேல் றெவ்வல் அவர்கள் கலந்து கொண்டார்கள். அருட்தந்தை அ. ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஆசியுடன் நடைபெற்ற இவ்விழா, ஆசிரியர் க. நிமலதாசனின் நன்றியுரையுடன் இனிதே நிறைவுற்றது.









## நீங்காத நினைவுகள்

### 3ம் நாள் நினைவு

மலர்வு 19 . 02 . 1935



உதிர்வு 03 . 02 . 2008

**திரு. மரியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை**

[நாவாந்துறை, யாழ்ப்பாணம்]

ஐயா! உடலால் எம்மை பிரிந்தீர்கள் என்றாலும் உள்ளத்தால், உணர்வுகளால் என்றுமே எங்களுடன் வாழ்கின்றீர்கள். கண்களில் கண்ணீர் முத்துக்களுடன் அனுதினமும் கலங்கி நிற்கின்றோம்.

இவரது ஆன்மசாந்திக்காய் 05.03.2008 புதன்கிழமை அன்று புனித செபஸ்தியார் பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

உங்கள் பிரிவால் துயருறும் :
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்
தகவல் :- எம். பிரேமானந்தன், லோறன்சியா

## மன்னார் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் யோசவ்வாஸ் அடிகளின் திருச்சுருபம்

மன்னார் ஆயர் இல்லத்தின் போட்டிக்கோ மண்டபத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள அருளாளர் யோசவ்வாஸ் அடிகளின் மரத்தாலான திருச்சுருபத்தையே இங்கு காண்கின்றீர்கள்.

இவ்வாண்டு அருளாளர் யோசவ்வாஸின் திருவிழா அன்று [ஜனவரி 16] இத்திருச்சுருபம் ஆசீர்வதிக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது.

அருகிலே உள்ள படத்தில் 36 இஞ்சி உயரம் கொண்ட மகோகனி மரத்தில் இத்திருச்சுருபத்தை வடிவமைத்த திரு. றேமண்ட் பெனாண்டோ அவர்கள் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களுடன் காணப்படுகிறார்.





**மன்னா தொடர்பான அனைத்துத் தொடர்புகளுக்கும்**

பதிப்பாசிரியர், 'மன்னா'
புனித வளன் மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.





The Editor, 'MANNA'
St. Joseph's Catechetical Centre,
St. Sebastian's Cathedral Street
Mannar, Sri Lanka.

தொலைபேசி இல. 023 - 2222377/ 060 - 2233276

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 16 . 11 . 1962



உதிர்வு 31 . 03 . 2007

**திரு. செபமாலை கிறிஸ்துராசா**

[சீமான்]

"ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை"

இவரது ஆன்ம சாந்தித் திருப்பலி பரிகாரிகண்டல் திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் 31.03.2008 அன்று மாலை 5.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர்

### 10ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 . 10 . 1939



உதிர்வு 28 . 03 . 1998

**திரு. அ. ஆனந்தநாயகம்**

[இளைப்பாறிய கிராமசேவையாளர்]

"வாழ்வில் நேசித்தோம்: மரணத்திலும் மறவோம்"

அன்பின் பெருங்கடலே பப்பா, அன்புத் தெய்வமாகிய நீங்கள் ஆண்டவன் அடியில் சங்கமமாகி ஆண்டுகள் பத்து கடந்திடினும் "உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே" என்று பகர்ந்த பரமனின் பாதமதில் சரணாகதி அடைந்துள்ள நீங்கள் என்றும் எமக்காய் பரமனை வேண்டுங்கள்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், அருட்சகோதரன் முரளிதரன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். [பள்ளங்கோட்டை, நானாட்டான்]

### 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 17 . 01 . 1962



உதிர்வு 25 . 03 . 2006

**திருமதி. சகாயமலர் றொற்றிகோ**

[ஜெனிற்றா, பள்ளிமுனை, மன்னார்]

ஈராண்டுதான் ஓடி மறைந்தாலும், உம் நினைவலைகள் எம்மை உருக்குதம்மா. பத்துமாதம் கருவறையில் பகலிரவாய் எமை சுமந்த தாயே! உம் பாச அலைகள் எம்மைப் பாடாய்ப் படுத்துதம்மா. உடலால் எம்மைப் பிரிந்தாய் எனினும் உள்ளத்தால், உணர்வுகளால் என்றுமே எங்களுடன் வாழ்கின்றாய், கண்ணில் முத்துக்களுடன் இன்றும் கலங்கி நிற்கின்றோம். உம் ஆன்மசாந்திக்காய் இறைவனிடம் இரந்து மன்றாடுகின்றோம்.

இவரின் ஆன்மசாந்திக்காக 25.03.2008 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு பள்ளிமுனை புனித லூசியா தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

என்றும் உம் நினைவுகளுடன்
அன்புக் கணவன் நியூட்டன், பிள்ளைகள் ஜெனிக்ஷன்,
அனோய், மற்றும் சகோதரர்கள்

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு. கொழும்பு 14. பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ. 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது